தமிழ்ச்செல்வம் தொகுதி-4.

கம்பர் தரும்

இராமன் அருட் செல்வம்

DICTIONARY OF EPITHETS AND NAMES OF SRI RAMA AS FOUND IN KAMBARAMAYANAM

★

ஆசிரியர் :

மு. சதாசிவம், எம். ஏ.,

தமிழ் விரிவுரையாளர்,

ஸ்ரீ வாசவி கல்லூரி, ஈரோடு.

அணிமாலை :

உயர்திரு வித்துவான் எஸ். கே. இராமராசன்

(கம்பராமன்) அவர்கள்,

கம்ப நிலையம், வேலூர், (சேலம்)

★

விற்பனை உரிமை :

பாரி நிலையம்,

59, பிராட்வே, :: சென்னை-1.

முதற்பதிப்பு ஏப்ரல் 1969

விலை ரூ: 3—50.

சிவராம் விலாஸ் பிரஸ், ஈரோடு.

மணி விழாக் காணிக்கை.

நீலமணி நிறக்கடவுள் தன்னைப் போற்றும்
நீணிலத்துக் கவிமணியாம் கம்பன் சீரைக்
கோலமணி யெனப்புனைந்து குலவு மண்ணல்
கொஞ்சுதமிழ் மணியெனவே குறிக்கு மண்ணல்
காலமணிக் கணக்காகக் கடமை யாற்றும்
கண்மணி நீ கம்பன்திருக் கூட்டத் தார்க்கு! அந்
நீலமணி மிடற்றொருவன் போல என்றும்
நிலைத்தபுகழ் பெற்றுமணில் நீடு வாழ்க!

இந்நூலை என் மனத்துள் உருவாக்கியவரும், காலமெலாம் கம்பர் புகழைப் பரப்பி வருபவரும், மணியான உள்ளமும் உரையும் உருவமும் பெற்றவரும், மணிவிழாக் கொள்ளும் மாண்பாளரும், என்னையும் நயந்து கம்பன் திருக் கூட்டத்திற் சேர்த்துக் கொண்டவருமான பெருந்தகை யண்ணல் உயர்திரு **சா. கணேசன்** அவர்களுடைய தாள் மலரில் இந்நூல் மலரைக் காணிக்கையாகப் படைக்கிறேன்.

ஸ்ரீ

கம்பன் புகழ் வாழ்க!

கன்னித் தமிழ் வாழ்க.

தோரண வாசல்.

S. K. இராமராசன்

(கம்பராமன்)

வேலூர். - (சேலம்)

...கம்பன் இயக்கம்...

சத்தியத்தின் கால்களிலே விலங்கு பூட்டிச்
சரித்திரத்தின் கண்களிலே மண்ணைத் தூவி
வித்தகர்தம் நெஞ்சுதொறும் வாளைப் பாய்ச்சி
வெண்முல்லைக் குவியலிலே தீயை வைத்து
முத்தமிழாம் மாமரத்தை வெட்டிச் சாய்த்து
மூண்டெழுந்த "கலிகாலம்" கிளர்ந்த போது
புத்திளமைச் சுடர்வீசி வீறு பொங்கிப்
புலிப்போத்துப் போலெழுந்தான் கணேச நம்பி.

முப்புரத்தின் சிறுமையினைக் கண்டு சீறி
மூவாத பரஞ்சோதி வளர்ந்தாற் போலச்
செப்பரிய பேரரக்கர் சிறுமை கேட்டுச்
சிலையேந்திக் காகுத்தன் எழுந்தாற்போல
மைப்புயல்நேர் சூரபன்மன் புன்மை தேர்ந்து
மால்மருகன் சினந்தாற்போல்-கணேச மூர்த்தி
யிப்புவியில் "தீமையினை எதிர்ப்போம்" என்றே
இணையற்ற வுறுதியுடன் நிமிர்ந்து நின்றான்.

நற்றமிழ்த்தாய் கால்விலங்கை யுடைத்தான் முன்பு
நலமருளும் செங்கோலைப் படைத்தான் பின்பு;
கற்றவர்கள் பிற்போக்கைத் துடைத்தான் முன்பு
கலைமகளின் கண்ணீரை யடைத்தான் பின்பு;
வெற்றிதரு மணிக்கொடியை எடுத்தான் முன்பு
மெய்யன்பைத் தமிழ்மொழிக்கே கொடுத்தான் பின்பு;
கொற்றவரும் இதுவரையிற் செய்தி டாத
கோதற்ற பணிசெய்தான் கணேச நம்பி.

செந்தமிழ்த்தாய் தனிநெஞ்சம் கிளுகி ளுக்கச்
செம்மைமிகு சான்றோர்கள் கலக லக்க
முந்துகலைப் பயிர்மேனி தளத ளக்க
முழுப்பொய்ய ரிதயங்கள் வெலவெ லக்கச்
சந்தமுறப் புகழ்நாக்கள் தழுத ழுக்கச்
சால்பில்லா ருறுதியெலாம் வழுவ ழுக்க
விந்தைமிகு கம்பனுக்கோ ரியக்கந் தன்னை
விருப்பினொடு தோற்றுவித்தான் கணேச நம்பி.

மன்னுபுகழ் வேதத்தை நீல வண்ணன்
வல்லரக்கர் சிதைக்காமற் பார்த்தாற் போல
நன்னயஞ்சால் பாரதத்தைக் காந்தி யெம்மான்
நஞ்சனையார் கையினின்றும் மீட்டாற் போலத்
தன்னிகரில் கலைச்செல்வம் கரையான் வாயில்
தவிக்காமல் 'தமிழ்த்தாத்தா' காத்தாற் போலக்
கன்னனிகர் கம்பன்றன் தனிநூ லுக்குக்
கவசமிட்டுக் காப்பளித்தான் கணேச மூர்த்தி.

நாதமுனி யியக்கத்தால் ஆழ்வார் பாடல்
நாடெங்கும் பரவியது; நம்பி யாண்டார்
போதமிகு மியக்கத்தாற் சைவ வேதம்
புவியெங்கும் விரவியது; கணேச அண்ணன்
சாதனையால் கம்பன்றன் இராம காதை
தனித்தேனய் உருக்கொண்டு ஞாலம் என்னும்
கோதற்ற ஆரஞ்சுக் கனியி னுள்ளே
குறைவின்றி யூறியது மதுரம் பொங்க.

மன்னியநற் புகழ்பெற்ற சான்ருேர் போற்றும்
மாசற்ற இயக்கத்தாற் பேரு ழைப்பால்
நன்னயஞ்சால் தமிழ்ச் செல்வம் - பட்டி மன்ருய்
நவையற்ற கவியரங்காய்த்-தெய்வ ஆல்போல்
பன்னரிய கிளைபரப்பித் தளிரைப் போர்த்துப்
பண்புடனே வழங்குகின்ற நிழலின் கண்ணே
தன்னிகரில் கலைமடந்தை வீற்றி ருந்து
சால்புடைய 'கம்பன்சீர்' பாடு கின்ருள்.

விண்ணவர்கள் புரிந்திட்ட தவத்தி ஞலே
மேகவண்ணன் பலபிறப்பை யுற்ருற் போலக்
கண்ணியஞ்சேர் கணேசன்றன் இயக்கத் தாலே
கம்பன்றன் காப்பியமும் பலப திப்பை
மண்ணுலகிற் கண்டதுகாண்; தமிழர் நெஞ்சம்
வாயாரப் போற்றிமணம் பெற்ற; எங்கும்
தண்ணமுதத் தென்றலுடன் வசந்தம் வந்தால்
தனிச்சோலை பூச்சொரிதல் புதிதோ? அம்மா!

'அருட்செல்வம்'

"செவ்விமிகு கம்பனுக்கு நற்ப திப்பும்,
சீர்மிக்க நல்லுரையும், பொருட்கு றிப்பும்,
திவ்வியஞ்சேர் விமர்சனமும், ஒப்ப வைத்துத்
தெளிதிறமும், வெறுப்பற்ற கால நோக்கும்,
கவ்வையின்றி வெளிவ்ருதல் வேண்டும்" - என்ற
கணேசன்றன் திருவுள்ளக் கனவி லொன்றை
எவ்வெவரும் வியப்பெய்தச் சதாசி வப்பேர்
ஏந்தலிவண் கனவாக்கி யளித்தா னம்மா!

சோழநா டளித்திட்ட கம்பன் தந்த
சுவைமிக்க காவியமாம் சோலை யின்கண்
வாழவளந் தருகொங்கு நாடு பெற்ற
மாண்புடைய சதாசிவவேள் வண்டாய் மாறிச்
சூழவொளிர் கவிப்பூக்கள் தோறும் மொய்த்துத்
தூய்மைபொதி "இராம"னெனும் தேனைச்
சேர்த்துத்
தாழ்வகற்றும் "அருட்செல்வம்" என்னும் தெய்வச்
சால்புடைய தேன்கூட்டைப் புனைந்தா னம்மா!

கம்பனெனும் பாற்கடலில் மெல்ல மெல்லக்
கனிந்திட்ட சுவையமுதோ? அன்பர் நெஞ்சச்
செம்பதுமம் விரிக்கவரு சுடரோ? ஞானச்
சேயிழையின் தலைக்கணிந்த முடியோ? பக்திக்
கொம்பினிலே திசைமணக்கப் பூத்த பூவோ?
கோதண்டந் தனிற்கட்டு மணியோ? நீர்சூழ்
அப்புவியிற் பன்மொழிகற் றடக்கம் பெற்ற
ஆற்றலுறு சதாசிவவேள் அளித்த நூலே.

தகவுடைய சதாசிவவேள் நிரப்பித் தந்த
சால்புடைய மதுக்குடத்தை எனது நெஞ்சில்
சுகம்வளர மெல்லமெல்லச் சாய்த்த போது
தோன்றிய மெய் யின்பத்தை யெங்கன்
சொல்கேன்?

அகவுயிரின் அணுத்தோறும் ஞான வெள்ளம்!
அடிமனத்தில் மாற்றரிய மோன வெள்ளம்!
புகல்கின்ற நாவினிலே அமுத வெள்ளம்!
போயிற்று போயிற்று மாயக் கள்ளம்!

பழுத்திட்ட காதலினைக் கனியாய் மாற்றிப்
பகர் ஞான நறுந்தேனி லூற வைத்து
விழுப்புகழ்சால் தவமென்னும் கற்கண் டிட்டு
மெய்ம்மையெனுங் குங்குமத்தைச் சாலத் தூவி
வழுத்துபுகழ்க் கம்பர்பிரான் இனிதே தந்த
மாண்புடைய தெள்ளமுதச் சேற்றுச் சாற்றை
எழுத்துணர்ந்த நல்லோர்க்கு விருந்தாய்
வைத்தான்
இணையற்ற சதாசிவவேள் கொற்றம் வாழ்க!

நூலாசிரியர்.

கொங்குவள நாட்டினுக்குத் தலைமை யூராய்க்
குலவுகின்ற சங்ககிரி தன்னைச் சார்ந்த
பங்கமிலாப் புகழ்பெற்ற தண்ணீர்ப் பந்தற்
பாளையத்தில் தமிழ்க்குடியில் பிறந்தோன்; வீரம்
பொங்கியநல் வேலேந்தி மாயை தந்த
புல்லியரைப் பூண்டோடும் தொலைத்து வென்ற
மங்கலமார் முருகவேள் பாதப் போதை
மனமுருகி முப்போதும் போற்றி செய்வோன்.

ஆங்கிலத்திற் சான்றோர்கள் வரைநூல் தம்மை
அருந்தமிழிற் படரவிட்டோன்; கீதை போன்ற
ஓங்கியதத் துவச்சுடரில் மூழ்கி மூழ்கி
ஒப்பற்ற பேரின்பம் பெறுவோன்: தெய்வப்
பாங்குடைய திருக்குறளின் சாரம் கண்டு
பைந்தமிழின் இதயத்தை யறிவோன்; என்றும்
தீங்கணுகா அடக்கமெனும் குகையின் கண்ணே
சிவக்கனலில் குளிர்போக்கி யுவகையார்வோன்

முந்தியநல் லருட் செல்வம் பலவும் நல்கி,
மூவாத தமிழ்மொழிக்குச் சேவை செய்து,
சந்தமுறு வாசவிப்பேர்க் கல்லூ ரிக்குத்
தனிவிளக்காய் விளங்கி, மிகு பண்பில் ஓங்கிச்
சுந்தரமார் புகழ்பெற்ற சதாசி வப்பேர்த்
தூப்புலவன் பிறந்தவூர் தண்ணீர்ப் பந்தல்:
சிந்தனைசெய் தவன் வழங்கு புனித நூலும்
சென்மவிடாய் தணிக்கின்ற தண்ணீர்ப் பந்தல்.

வண்ணமுறு நல்லுணர்வே வடிவ மாகி
மாசற்ற கற்பனையாம் வண்ணம் பொங்கித்
தண்ணருளாம் சுவையெங்கும் சாலத் தேங்கிச்
சால்புடைய ஞானமெனும் வாசம் ஓங்கி
விண்ணளக்கும் ஆனந்தக் கதிரை வீசி
விளங்கு கம்பக் கனிச் சாற்றைப் பிழிந்து தந்த
புண்ணியனும் சதாசிவவேள் இன்னும் பன்னூல்
புனைந்தெம்மான் திருவருளால் என்றும் வாழி!

கம்ப நிலையம், வேலூர், (சேலம்)	எஸ். கே. இராமராசன், 'கம்பராமன்'

முன்னுரை.

கம்பராமாயணம் என்னும் காப்பியப் பூஞ்சோலை யில் நறுமணம் வீசிக்கொண்டிருக்கும் நன்மலர் களுள் எல்லாம் தனிசிறந்தது இராமன் என்னும் மலரே. அந்நறுமலர் மற்ற மலர்களுக்கும் இன்மணம் ஊட்டிக்கொண்டு ஆங்காங்கே அம்மலர்களுடன் சோலைமுழுவதும் விரவிக்கிடக்கின்றது. அவ்வாறு சோலை முழுவதும் இதழ் பரப்பி மணம் வீசும் இரா மன் என்னும் மலரை ஒருசேரக்குவித்து அப்பெரு மணத்தை அனைவரும் நுகர்ந்துஇன்புறச்செய்வதற் காகவே இம்மலர்மாலையைத் தொகுத்துள்ளேன். 'அழகெல்லாம் ஒருங்கே கண்டால் யாவரே ஆற்ற வல்லார்?' என்று கவிஞர் பெருமான் கூறுவது போல இங்கே 'மணமெல்லாம் ஒருங்கே கண்டால் யாவரே நுகரகில்லார்?' என்று எண்ணத் தோன்று கிறது.

இம்மலர் மாலை கதம்பமன்று. பூவிற் சிறந்த பொறி வாழ் பூவாகிய தாமரை மலர் ஒன்றாலேயே தொடுக்கப்பட்டது இத்தொடையல். இராமனின் 'வதனம் வாய் கண் கை கால்' முதலிய யாவும் தாமரை மலர்களேயன்றோ? அவன் ஒரு தாமரை பூத்த தடாகம்; ஒரு தாமரைக் காடு.

தினைத்தனை தேனுள்ள மற்ற பூக்களை நாடா மல் 'நினைத்தொறும் பேசுந்தொறும் காண்டொறும்

எப்போதும் அனைத்தெலும்பு உள்நெக ஆனந்தத் தேன் சொரியும்' இராமன் என்னும் மலர்களையே தேடி நாடிச் சேர்த்து இங்கே தாமரை மாலையாகக் கட்டியிருக்கிறேன். இம்மலர்மாலையை அனைவரும் அணிந்துகொண்டு சூடிக் கொடுத்த சுடர்க்கொடி போலத் தோன்ற வேண்டுமென்பதே என் உள்ளக் கிடக்கை.

கம்பநாட்டாழ்வார் இராமபிரானின் உருவத் திருமேனியில் உள்ளத்தைப் பறிகொடுத்து உவமை யிலாக் கலைஞானச் செல்வனாகிய இராமனின் உட லுறுப்புகளுக்கு உவமை கூற முற்பட்டு, அந்த உவ மானப் பொருள்கள் இராமன் திருமுன்பு அவமானப் படுவதையறிந்து அந்த உவமைகளையெல்லாம் கைவிட்டு, ஓவியத்து எழுத ஒண்ணு இராமனுடைய அவயவங்களுக்கு அவை தாமே நிகராகும்; மற்று எவையும் உவமையாகா என்று முடிவு செய்து விடுகின்ருர். கலைப் பெருங்கடலான கம்பர் இருட் கனி போன்ற இராமனது மேனி வண்ணத்தைக் கூற வந்தவிடத்து,

'மையோ மரகதமோ மறிகடலோ மழை முகிலோ
ஐயோ இவன் வடிவென்பதொர் அழியா
அழகுடையான்'

என்று தம் ஆற்ருமையைக் கூறி அசந்துவிடுகிருர்.

இராமனது உள்ளத்தைப்பற்றி நினைக்கும் போதெல்லாம் கல்வியிற் பெரிய கம்பரின் உள்ளம் களிப்புப் பெருக்கால் துள்ளி மகிழ்கிறது குணக் கோவாகிய இராமனை அருங்குணங்களுக்கெல்லாம் நிலையமானவன் என்றும், செப்பருங் குணத்து

இராமன் என்றும் செப்புகிறார். வீறுமிக்க மனிதப் பண்புகளும் தெய்வீகப் பண்புகளும் சந்தித்திருக்கும் குணக்கடலான இராமனது தேன்புகழை நானில மக்கள் எல்லோரும் பருகிப் பயனுறுமாறு பாக்கடல் படைத்த பாவலர் கம்பர் இராமனை முத்தேவர்க்கும் முதற்றேவர் என்றும் எல்லையில் பரம்பொருள் என்றும் ஏத்திப் புகழ்பாடுகிறார்.

உலகப் பெருங் காப்பியங்களிலேயே அப்பழுக்கற்ற, ஒப்புயர்வற்ற பாத்திரம் இராமன் பாத்திரமே. வால்மீகி படைத்த இராமனைக் காட்டிலும் கம்பர் காட்டும் இராமன் தோமறு மாவீரனாகவும், உலகோரின் ஊதைகள் தீர்க்கும் ஆதி தேவனாகவும், குணக்குன்றாகவும் காட்சியளிக்கின்றான். இறையவனான இராமனுக்கு எவ்வகைப் பழிப்பும் இழிப்பும் ஏற்படக் கூடாதென்று தம் அறிவு நலங்களையெல்லாம் பயன்படுத்தி உலகிலேயே தன்னேரில்லாத தலைவனாகக் காட்ட முற்பட்டிருக்கின்றார் கம்பர் என்பது அவர் இராமனைக் குறிப்பதற்காகக் கையாண்ட சொற்கள், சொற்றொடர்கள், அடைமொழிகள் முதலியவற்றால் தெள்ளிதின் புலனாகும். அவையெல்லாம் இந்நூலின் கண் தொகுத்துக் காட்டப் பெற்றுள்ளன. கற்பனை நலத்திற் பெரிய கம்பர் செவிக்கமுதமாகிய இராமனது புகழை நம்மனோர்க்கு வாரி வழங்கும்போது தம் கற்பனைத் திறத்தால் எவ்வளவு உயர்ந்த பெரும் புகழ் மொழிகளைச் சொற்புனைவு செய்ய முடியுமோ (Coining the Choicest Phrases) அவ்வளவும் செய்துள்ளார். ஒவ்வொரு அடைமொழியினையும், தொடர்மொழியினையும் தம் அறிவின் திறத்தாலும் அன்பின் பெருக்காலும்

சிந்தனையின் சிறப்பாலும் கற்பனையின் மெருகாலும் உருவாக்கிப் புடமிட்ட பொன்போல ஒளிருமாறு செய்திருக்கிறார் என்பதை இந்நூலை ஒருமுறையேனும் உணர்ந்து படிப்பவர் அறிந்து கொள்ளாமலிரார்.

இராமனை அறம் வளர்க்குங் கண்ணுளன், இருட்கனியும் போல்பவன், கரிய செம்மல், சிரித்த பங்கயம் ஒத்த செங்கண் இராமன், திருவாளன், மேல் ஒரு பொருள் தனக்கு மேல் இலான், ஆதியொடு அந்தம் ஒன்றும் தன்னாலும் அளப்பருந்தான், தன் புகழ் தன்னினும் பெரிய தன்மையான் போன்ற அழகு மிளிரும் சொற்றொடர்களால் வருணிக்கும் போது சொல்லின் செல்வராகிய கம்பரின் சொற்புனைவாற்றலும், கற்பனை வளமும் கற்பாரனைவர்க்கும் களிபேருவகை நல்குகின்றன.

பதினாயிரத்துக்கு மேற்பட்ட பாடல்களைப் பாடியும் இராமனது புகழை முழுதுறக் கூற முடியவில்லையே என்று வியக்கும் கம்பர், 'கவியையுங் கடக்கும் வென்றிக் காகுத்தன்' என்று கூறுவராயின், இராமபிரானின் குணநலச் சிறப்புக்களில் கம்பர் எவ்வளவு ஆழ்ந்து ஈடுபட்டிருப்பார் என்பதை ஊகித்துத்தான் உணரவேண்டும்.

இராமனைப் புகழ்ந்து பாடும்போதெல்லாம் கம்பர் இராமனின் ஒவ்வொரு தெய்வீகச் சிறப்பு நிலையிலும் (Every Aspect of the Divine Being) மனம் பறிகொடுத்து ஆழ்ந்து விடுகிறார். எல்லாச் சிறப்பு நலங்களையும் ஒரே இடத்தில் எடுத்துக் கூறாமல்

ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு தெய்வப் பண்பிலேயே திளைத்து இன்புறுகிறார். 'தோள் கண்டார் தோளே கண்டார் தொடுகழற் கமலமன்னதாள் கண்டார் தாளே கண்டார், தடக்கை கண்டாரு மஃதே' என்பது கம்பருக்கே பொருந்தும். அவ்வாறு கம்பர் தம் காப்பியத்தில் வெவ்வேறிடங்களில் இராமபிரானின் பல்வேறு தெய்வப் பண்புகளையும் கூறியிருப்பதைத் தொகுத்து முழுமையாகப் பார்க்கும் போதுதான் கம்பர் ஆராதித்து வந்த இராமபிரானது முழுத்தோற்றமும் நம் அகக் கண்களுக்கு ஓரளவு புலனாகிறது கம்பர்கண்ட இராமபிரானது தரிசனத்தைப் பெறுவதற்கு இந்நூல் உறுதுணை புரியும் என்று நம்புகின்றேன்.

கம்பர் தலைசிறந்த சொல்லோவியராதலின் ஓவியத்து எழுத ஒண்ணா இராமனது உருவத்தை ஒல்லும் வகையால் தீட்டிக் காட்ட முற்படுகிறார். சொல் நலமறிந்த அறிஞர்கள் கம்பரின் சொல்லோவியங்களை மனக்கண்ணால் கண்டு மனங்களிப்பர். தற்காலப் புகைப்பட வல்லுநரைப் போலவே கம்பர் இராமனைப் பல கோணங்களில் தம் மனமாகிய காமிராவில் படம் பிடித்து வைத்தார். உயிராவணமிருந்து உற்று நோக்கி உள்ளக் கிழியில் உருவெழுதிப் பார்த்தார். பிறகு சொல்லோவியமாக இராமபிரானைப் பல கோணங்களிலும் நின்று கண்டவற்றைத் தீட்டிக் காட்டியுள்ளார்.

தூரிகை கொண்டு வண்ணங் குழைத்துத் தீட்டப்பெறும் ஒளிவண்ண ஓவியங்களைக் காட்டிலும் சொல்லோவியங்கள் பன்மடங்கு சிறந்தவை

யெனலாம். வண்ணங்களால் வரையும் ஓவியங்களில் நீள அகலமாகிய இரு பரிமாணங்களே காணப்படும். மூன்ருவது பரிமாணமாகிய கனம் மனத்தாலே உணரப்படுவதொன்ருகவேயுள்ளது. ஆனுல் சொல்லோவியங்கள் பல்வகைப் பரிமாணங்கள் (multi - dimensional) உள்ளவையாகத் திகழ்கின்றன. நீளம், அகலம், கனம், காலம், பண்பு, உயிர்த்துடிப்பு, உணர்ச்சிப் பாங்கு, உள்ளப் பான்மை, ஆன்மானுபவம் முதலிய எத்தனேயோ பரிமாணங்களேப் பெற்று உணர்வார் உணர்ச்சிக்கேற்ற காட்சி நலங்களே நல்கும் பான்மையவாக அவை உள்ளன. அதனுல்தான் கம்பசித்திரங்கள் அறிஞர் உள்ளங்கட்குப் பெருவிருந்தாயுள்ளன. கம்பர் இராமபிரானின் உருவத்திருமேனியழகையும், தெய்வீகப் பேருணர்வு நிலேயையும் (the Divine Consciousness) சொல்லோவியங்களாகத் தீட்டிக் காட்டும் தொடர்கள் எல்லாம் இந்நூலின் கண் இடம் பெற்றுள்ளன.

கம்பர் தம் காலத்துக்கு முந்தித் தோன்றிய தமிழ் நூல்களேயெல்லாம் நன்கு கற்றவராதலின் அந்நூல்களின் மரபை ஒட்டியே இராமனேக் குறிப்பதற்குப் பல வருணனேத் தொடர்களேக் கையாள்கிருர். சங்க இலக்கியங்கள், சிந்தாமணி சிலப்பதிகாரம் போன்ற காப்பியங்கள், தேவார திருவாசக திவ்யப் பிரபந்தங்கள் போன்ற பக்தி நூல்கள் ஆகியவற்றில் காணப்பெறும் பல அரிய சொற்களேக் கம்பர் தம் காப்பியத் தலேவனேக் குறிப்பிடுவதற்குப் பயன்படுத்துகிருர். (அண்ணல், ஐயன், வரதன், வள்ளல், நாயகன் போன்ற பல சொற்களே வெவ்

வேறு சமயங்களைச் சேர்ந்தவரும் தத்தம் கடவுளரைக் குறிக்க வழங்குவதினின்று தமிழ் மக்கள் வணங்கிய கடவுளரின் பெயர்கள் வெவ்வேறுயிருப்பினும் கடவுளைப்பற்றிய கருத்து (the concept of the Divine) ஏறக்குறைய எல்லாச் சமயத்தினரிடத்தும் ஒருபடித்தாகவே காணப்படுகிறது என்பதைத் தெள்ளிதின் உணரலாம்.

காப்பியத் தலைவனான இராமனைக் குறிப்பதற்குப் பல இடங்களிலும் சில சொற்களையே மீண்டும் மீண்டும் எடுத்தாளுகின்றார் கம்பர். அச்சொற்களுள் தலைமை வாய்ந்தது 'இராமன்' என்ற சொல்லே. தம் காப்பியத்திற்கு இராமாவதாரம் என்ற பெயரையே சூட்டிய கம்பர் 'இராமன்' என்ற பெயரில் தனிப்பெரும் பற்றுக்கொண்டிருந்தார் என்பது இச்சொல்லை இவர் 279 முறை எடுத்தாளுவதினின்று அறிந்துகொள்ளலாம். 'யாரும் மறக்கலா நாம நம்பி' என்றே இராமனைக் குறிப்பிடுகிறார். தாரக மந்திரமான இராம நாமத்தை ஓதுபவர்க்கு ஈதைகள் தீரும் என்றும், தீவினைகள் தீர்ந்து பிறவிப் பிணியறும் என்றும் உபதேசிக்கிறார் கம்பர். அடுத்து வீரன் என்ற சொல்லை 169 முறையும், ஐயன் என்ற சொல்லை 124 முறையும், வள்ளல் என்ற சொல்லைத் 93 முறையும், நாயகன் என்ற சொல்லை 79 முறையும், அண்ணல் என்ற சொல்லை 74 முறையும், இராகவன் என்ற சொல்லினை 43 முறையும் பயன்படுத்துகிறார். மற்றும் அமலன், அழகன், ஆண்டகை, ஆரியன், ஆழியான், இறைவன், கண்ணன், கொற்றவன், கோன், சேவகன், தாமரைக் கண்ணன், தீர்த்தன், தோன்றல், நம்பி,

மானவன் என்ற சொற்களையும் பலப்பல முறை எடுத்தாண்டிருப்பதினின்று இச் சொற்களையெல்லாம் இராமனது பல்திற ஆளுமையை (Many-sided personality) விளக்கக் கம்பர் கையாண்டார் என்பதை யறியலாம். கம்பருடைய உள்ளத்தில் இராமன் வடிவில் ஊறிக்கிடந்த சொற்கள் இவை என்று உறுதியாகக் கூறலாம். இன்னும் கம்பர் இராமபிரானைக் குறிக்கும் சொற்கள், சொற்றொடர்கள், அடைமொழிகள் முதலிய யாவும் இந்நூலின் கண் தொகுத்துக் கூறப் பெற்றுள்ளன. பிறை யடைப்புக்களில் - என்ற குறியீட்டுக்கு முன்னுள்ள எண் கம்பராமாயணத்துக் காண்ட எண்ணினையும், பின்னுள்ள எண் (கள்) பாட்டெண்களையும் குறிப்பனவாகும்.

இராமபிரான் வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கும், பின்பு வானுறையும் தெய்வத்தோடு உறையும் தெய்வீக நிலை எய்துதற்கும் வழிகாட்டியாக வாழ்ந்து காட்டினான். வள்ளுவரும், கண்ணபிரானும் உபதேசித்த ஒழுக்க நெறிகளுக்கெல்லாம் இலக்கியமாகத் திகழ்ந்தான். இராமனுடைய ஒழுகலாற்றை நன்கு உணர்வதற்குக் காப்பியம் முழுவதையும் நன்கு ஓதுவது அவசியமாயினும், இந்நூல் அச்செந்நெறியின் முறைகளையெல்லாம் தொகுத்துக் கூறுகிறது. தெய்வீக நெறியில் வாழத் தலைப்படுவோரும், கர்மயோக நெறியைக் கைக்கொள்ளுவோரும், தவநெறியைத் தலைமேற் கொள்வோரும் இராமபிரானைத் தங்கள் வாழ்க்கை வழிகாட்டியாக மேற்கொள்ளல் இன்றியமையாதது. அன்றியும் இவ்வுலகில் நிலைத்த புகழ்பட வாழ விருப்புவோர்

அனைவரும் இராம பிரானின் பண்பு நலங்களிற் சில வற்றையேனும் பெற்றிருக்க வேண்டும். அவ்வாறு இம்மையிலும் மறுமையிலும் புகழ் பெறுதற்கு இராமன் காட்டிய வழியை இந்நூல் சுட்டிக் காட்டு கிறது.

இனி, இவ்வுலகில் பெருமையாளரைப், புகழுக் குரியவரைப் புகழ்ந்துரைக்க வேண்டுமாயின் கம்பர் இராமபிரானைப் புகழ்ந்து கூறியுள்ள புகழ்மொழி களில் சிலவற்றைத் தேர்ந்தெடுத்துக் கொண்டாலே போதும். அதற்கும் இந்தத் தொகுப்பு நூல் உதவு கிறது. பெருமை மிக்க ஒருவரை அண்ணல், ஆண்டகை, ஐயன், நெடுந்தகை, பெருந்தகை, ஆட வர்க்கரசன், நம்பி, நாயகன், வள்ளல் என்றெல்லாம் கம்பர் இராமனைக் குறித்த மொழிகளால் அழைத்துப் பெருமைப்படுத்தலாம்.

கம்பராமாயணம் 'உலகு' என்று தொடங்கி உலகு (தராதலம்) என்று முடிவது போலவே இந்த இராமன் அருட்செல்வமும் 'உலகு' என்று தொடங்கி உலகு (வையம்) என்று முடிவது ஒரு வியப்பே. எல்லா உலகங்களையும் தன் வயிற்றினுள் அடக்கிய இராமனைப் பாடும் இக்காப்பியம் உலகங்களை முதலி லும் முடிவிலும் அடக்கி வைத்திருப்பது பொருத்தந் தானே!

அகராதி என்றால் ஆராய்ச்சியாளருக்கு மட்டுந் தான் பயன்படுவது; நூலகத்தில் தனியிடங்கொ டுத்து அடைத்து வைத்திருப்பது என்ற நிலைமாறி மற்ற நூல்களைப் போலவே இதுவும் முதலிலிருந்து

கடைசிவரை படிப்பதற்குரியது என்ற எண்ணம் மக்களிடையே பரவவேண்டும் என்பதே என் நோக்கம். சிறுகதையினையோ புதினத்தையோ இடையில் தொடங்கிப் படிக்கமுடியாது; கடைசியிலிருந்தும் படித்துவர முடியாது. ஆனால் அகராதியை எங்கிருந்து வேண்டுமானாலும் படிக்கலாம். தலைகீழாகவும் படிக்கலாம். எத்தனை முறை வேண்டுமானாலும் படிக்கலாம். எந்த இடத்தைப் பார்த்தால் நமக்கு வேண்டிய செய்தி கிடைக்கும் என்று எளிதில் அறிந்து கொள்வதற்காகத்தான் எல்லாச் சொற்களும் அகரவரிசைப்படுத்திக் கொடுக்கப்படுகின்றன ஒரு நீண்ட தொடர் இரண்டு மூன்று பிரிவாகப் பிரித்தாலும் தனிப் பொருள் பெற்றிருக்குமாயின் அவை தனித்தனித் தொடராகவே அகரவரிசைப்படி வெவ்வேறிடங்களில் தரப்பட்டுள்ளன. எடுத்துக் காட்டாகத்,'திருவொடு சேர்ந்த பாம்பணை அமலன்,' என்ற தொடர் பாம்பணை அமலன், அமலன் என்ற உட்பிரிவுகளைப் பெற்றிருப்பதால் இவ்வுட் பிரிவுகளும் தனித்தனி இடங்களில் முறைப்படி சேர்க்கப் பெற்றுள்ளன.

இதற்குமுன் யான் வெளியிட்ட அகராதிகளில் அருஞ்சொற்களுக்கு நூலின் இறுதியிலே பொருள் கொடுக்கும் பழைய முறையே மேற்கொள்ளப்பட்டது ஆனால் படிப்போர் கடின சொற்களுக்குப் பொருள் தெரிந்துகொள்வதற்காகக் கடைசிப் பக்கங்களைப் புரட்டிப் பார்க்கும் சிரமத்தைப் பெறலாகாதெனக் கருதியே கடின சொற்கள் சொற்றொடர்கள் முதலியவற்றிற்கு இந்நூலின் கண் ஆங்காங்கே பொருள் கொடுத்துள்ளேன். இஃது இந்நூலின் ஒரு

தனிச் சிறப்பாகும். மேலும் அகராதி என்ற சொல் லைக் கேட்டதுமே அஞ்சுவோரின் நலனுக்காக, அகராதிப் பகுதியில் காணப் பெறும் தொடர்களை அடிப்படையாக வைத்துச் சில கட்டுரைகள் எழுதிச் சேர்த்திருப்பது இந்நூலின் மற்றொரு சிறப்புக் கூறாகும். 'கம்பர் கண்ட இராமன்' என்ற இப்பகுதி யில் இராமனைப்பற்றிய செய்திகளனைத்தையும் தொகுத்துக் கூறுவதை நோக்கமாகக் கொள்ளாமல் இந்த அகராதியில் வரும் தொடர்களின் கருத்துக் களைத் தொகுத்துச் சுருக்கமாகத் தருவதையே நோக்கமாகக் கொண்டேன். கம்பர் கண்ட இராம னின் விசுவரூபத்தைக் காணவேண்டுமாயின் காப் பியம் முழுவதையும் கற்றுத் தேறுவதைத் தவிர வேறு வழியில்லை. ஆனால் இங்கே இராமனின் சிறப்பு அம்சங்களே தொகுத்துக் கூறப் பெற்றுள் ளன. அவற்றையும் என் சொந்தச் சொற்களால் கூறாமல் கம்பர் கையாண்ட சொற்களையே பெரிதும் பயன்படுத்திக் கட்டுரைகளை அமைத்துள்ளேன்.

கம்பராமாயணப் பதிப்புகளுள் தலைசிறந்தது எந்தப் பதிப்பு என்று இன்னும் அறிஞர்களிடையே ஒருமித்த கருத்து ஏற்படவில்லை. பல்வேறு சமயங் களைப் போலவே ஒவ்வொரு பதிப்பும் ஒவ்வொரு வகையில் சிறப்புடையனவாக உள்ளன. எனினும் அடையாற்றுப் பதிப்பு என்னுள்ளத்தைக் கவர்ந்த தற்குப் பல காரணங்கள் உள்ளன. அவற்றுள் முக்கியமானது பாட்டெண்களை விரைவில் அறிந்து கொள்ளக்கூடிய வகையில் ஒவ்வொரு காண்டத் தின் எல்லாப் பாட்டுக்களுக்கும் வரிசை யெண்கள் பாட்டின் முதலிலேயே கொடுக்கப்பட்டுள்ளமை

யாகும். இஃது ஆராய்ச்சியாளருக்கு மிக உதவியாயுள்ளது. (சில பதிப்புக்களில் படலந்தோறும் பாட்டெண்கள் புதிதாக ஒன்றும் எண்ணிலிருந்து கொடுக்கப்பெற்றுள்ளன.) இரண்டாவது காரணம் தமிழ்ப் பேறிஞர் டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்களின் ஆராய்ச்சிக் குறிப்புக்களை இப்பதிப்புப் பெற்றுள்ளது. மூன்றாவது காரணம் கம்ப ராமாயணத்தில் எனக்கு ஆர்வ வெறியூட்டிய என் ஆசிரியப் பெருந்தகை பேராசிரியர் இ. எஸ். வரதராசய்யரவர்கள் இப்பதிப்பில் பல ஆயிரம் பாடல்களுக்கு உரையும் விளக்கவுரையும் எழுதியிருப்பதாகும். மேலும் நூல்கள் அச்சிட்ட முறையும் அமைப்பும் கூடக் கவர்ச்சியாயுள்ளன. இந்நூலின்கண் பாட்டெண்களேயன்றி அருஞ்சொற்றொடர்கட்குப் பொருளும் அடையாற்றுப் பதிப்பை ஒட்டியே தரப்பெற்றுள்ளன.

இவ்வகராதியைத் தொகுக்குங் காலத்து ஈரோட்டிலிருந்து பலமுறை என் சொந்த ஊருக்குப் போய்வர நேர்ந்தது. அப்போதெல்லாம் கம்பராமாயண நூல்களைக் கையோடு எடுத்துச்சென்று குறிப்புக்கள் எடுத்துவந்தேன். அவற்றுள் எப்படியோ சில துண்டுச் சீட்டுக்கள் 'கம்பர் வரைந்த பெண்ணோவியம்' என்ற நூலுக்காகத் தொகுத்த சீட்டுக்களுடன் இரண்டறக் கலந்துவிட்டன. யான் அவற்றைப் பல இடங்களில் தேடியும் அகப்படாமையால் வருந்தினேன். அகராதியில் சில குறிப்புக்கள் விடப்பட்டுவிட்டால் எவ்வாறு அது பூர்ணத்துவத்தைப் பெற்றிலகும் என்று மாழ்கினேன். மீண்டும் ஒரு முறை நூல் முழுமையும் படித்துக்

குறிப்புக்களைச் சரி பார்த்தேன். இந்நூல் அச்சிடுவதற்குள் ஒளிந்திருந்த சீட்டுக்களும் வெளிப்பட்டு விட்டன. அளவிலா மகிழ்ச்சியடைந்தேன். அவற்றைப் பிற்சேர்க்கையில் குறித்துள்ளேன். அவற்றையும் உரிய இடங்களில் சேர்த்துக்கொள்ளுமாறு அன்பர்களை வேண்டிக் கொள்கிறேன். அகராதித் துறையை மேற்கொள்வோர் நிலையான ஓரிடத்தில் சிறுவர்கள், பெரியோர்களின் இடையீடும், தொந்தரவும் இல்லாத தனியிடத்தில் முழுக் கவனத்துடன் பணிபுரிய வேண்டும் என்ற படிப்பினையைக் கண்ணும் பூச்சியாடிய இந்தத் துண்டுச் சீட்டுக்கள் எனக்கு உணர்த்தி விட்டன.

நம் நாட்டு நூலகங்கள் ஆங்கில அகராதிகள், கலைக்களஞ்சியங்கள் முதலியவற்றிற்குக் குறிப்பு நூற் பகுதியில் (Reference Section) தனியிடம் கொடுத்துப் போற்றுவது போலத் தமிழ் அகராதிகள் முதலியவற்றைப் போற்றும் பழக்கத்தை மேற்கொண்டால் அப்போதுதான் இதுபோன்ற ஆராய்ச்சிக்குதவும் நூல்கள் கட்டாயம் எல்லா நூலகங்களிலும் இடம் பெறும் என்று நம்புகிறேன். அறிவிற் சிறந்த நம் நூலகர்கள் மக்களின் மனம் போன போக்கிலேயே செல்லவேண்டுமென்பதற்காக வெறும் பொழுதுபோக்கு நூல்களை மட்டும் பெருமளவில் வாங்குகின்ற பழக்கத்துடன் மக்களுக்கு ஆராய்ச்சி மனப்பான்மையை ஊட்டக்கூடிய நூல்களையும் ஓரளவு வாங்கிவைத்து மக்களின் அறிவுச் செல்வத்தைப் பெருக்குவது போற்றத் தக்கது என்று கருதுகின்றேன்.

தொகுப்பு நூல்கள் பலப்பல துறைகளிலும் நிறைய வெளிவரவேண்டு மென்று காலஞ் சென்ற தமிழறிஞர் 'அண்ணா' அவர்கள் பேசியுள்ளது என் நினைவிற்கு வருகிறது. கம்பரின் காப்பியச் சுவையைப் பருகிக் களித்தவர் அவர். தமிழ் இலக்கியத்துறை பல்லாற்றானும் பெருகி வளர் வதன்மூலம் தமிழ் உலகப் பெரு மொழிகளுள் ஒன்றாகத் திகழவேண்டும் என்ற தம் ஆசையை இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டில் வெளியிட்டார் அவர் கனவை நனவாக்குவது தமிழறிஞர்களால் முடியும் என்று நம்புகிறேன்.

காலமெல்லாம் கம்பன் புகழ் ஓங்கவே பாடுபடு வேன் என்று கங்கணங் கட்டிக் கொண்டவரும், அரசியல் துறையில் அறம் வளர்க்குங் கண்ணாளரும், இலக்கியத்துறையில் எல்லோருடைய இதயதாகத் தையும் எழுப்பிச் செவிநுகர் அமுதத்தைவழங்குபவ ரும், பேச்சுத்துறையில் சொலல் வல்லராய்ச் சோர் விலராய் அஞ்சாதவராய் வீறுகொண்டு பேசுபவரும், கவிதைத் துறையில் கச்சிதமான யாப்பமைதியில் கற்பனையும் சந்தமுங் கைகோத்தாடச் சொன்னயங் கொண்டு நன்னயஞ்செய்பவரும், அன்புத்துறையில் தம்மைக் கண்ணெனக் கருதுபவரைத் தம்கண்ணுள் மணியெனக் கருதுபவரும், ஆராய்ச்சித் துறையில் உண்மையைக் கடவுளாக வழிபடுபவரும், பக்தித் துறையில் சித்தத்தை நிலைநிறுத்துபவரும், மொழிக் கும் நாட்டுக்கும் பணிசெய்யும் துறையில் தம்மையே மறந்திருப்பவருமான பெருந்தகையண்ணல் உயர்திரு சா. கணேசன் அவர்களுக்கு மணிவிழாக் காணிக்கையாக இந்நூலைப் படைப்பதில் பெருமை யும் பெருமகிழ்ச்சியுங் கொள்கிறேன்.

கம்பர் திருமுன்னிலையில், கம்பருக்குப் புகழ்க் கோயில் கட்டிய கம்பராமாயணக் காவலர், பைந்தமிழ்ச் செல்வர் உயர்திரு சா. கணேசன் அவர்களுக்குச் சமர்ப்பிக்கப்பெறுவதும், கம்பர்கண்ட இராமனின் புகழ் கூறுவதுமான இந்நூலுக்குக் கம்பராமாயணத்தைத் தம் உயிரினும் பெரிதெனப் போற்றும் உயர்திரு 'கம்பராமன்' அவர்களுடைய தேன்கவிதைமலர்மாலை அணிமாலை (அணிந்துரை) யாகக் கிடைத்தது எத்துணைப் பொருத்தமாய் அமைந்தது என்று எண்ணி இராமபிரானது திருவருட்டிறத்தை வியந்து போற்றுகிறேன். 'இராமன் அருட்செல்வத்திற்கு' இராமபிரானே முன்னின்று ஆசிகூறி வாழ்த்தியது போலவே 'கம்பராமன்' அவர்களது கவிமாலையைக் கருது கிறேன். மணிவிழாக்காணும் பெருந்தகை உயர்திரு சா. கணேசன் அவர்களுடைய தமிழ்த்தொண்டு, நாட்டுத்தொண்டு, இலக்கியத்தொண்டு ஆகிய வற்றைப் பொருத்தமுறப் போற்றி யருளியதுடன் என்னையும் இந்நூலையும் உவந்துவந்து பெரிதும் போற்றியருளிய 'கம்பராமன்' அவர்களுடைய கனிந்த கவிதை நெஞ்சத்திற்கு என் தலையாய வணக்கங்களும் நன்றியும் உரித்தாகின்றன. வாக்காலும் மனத்தாலும் எழுத்தாலும் தமிழுக்கும் சமயத்திற்கும் தனிப்பெருந் தொண்டாற்றி வரும் கவிஞர் கம்பராமன் அவர்களது உள்ளமாகிய அன்புக்கடலினின்று விளைந்த இந்த அமுதப்பாக்கள் படிக்குந்தோறும் தித்திக்குந் தீஞ்சாறாய் என் உள்ளத்திற்கு உணர்வு நல்கும் பைஞ்சோறாய்த் திகழ்கின்றன.

ஏறக்குறைய நானூறு தொடர்களைக் கொண்ட 'கம்பர் தரும் திருமால் அருட்செல்வம்' என்ற பகுதியையும் இந்நூலுடன் சேர்த்துப் பதிப்பிக்கலாம் என்றிருந்தேன். ஆனல் பொருள் முட்டுப்பாடு அதற்கு முட்டுக் கட்டையிட்டுவிட்டது. பொருட் செல்வமில்லாமையால்தான் முருகன் அருட் செல்வம், தேவி அருட்செல்வம், சிவபிரான் அருட் செல்வம், திருமால் அருட்செல்வம் முதலியவையும் பல ஆண்டுகளாக அச்சேறுவதற்காகத் தவஞ் செய்து கொண்டிருக்கின்றன! எல்லோர்க்கும் அருட்செல்வத்தை வழங்க விரும்புபவர்க்கும் வேண்டப்படுவது பொருட்செல்வமே.

இந்நூலைக் குறித்த காலத்தில் சிறந்த முறையில் அச்சிட்டுதவிய என் இனிய நண்பர் எஸ், சிவராம் அவர்களுக்கும், ஆர்வத்துடன் நூலைப் படித்துக் கொண்டே பிழையின்றி அச்சுக்கோத்த அச்சுக் கோப்பாளர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எண்ணிய நல்லெண்ணங்களுக் கெல்லாம் இன்துணையாயிருந்து இமைப்பொழுதும் என்னெஞ்சில் நீங்காதுறையும் தெள்ளமிர்தமாகிய திருவன்னையாரின் திருவடிகளை வழுத்துகிறேன்.

ஈரோடு,
24—3—'68

மு. சதாசிவம்.

—[கம்பர் தரும்]—

இராமன் அருட் செல்வம்

அங்கண் நாயகன் — அழகிய இடமாகிய உலகிற்குத் தலைவன் (2 - 631 ; 5 - 1106)

அங்கணன் - அழகிய கண்களையுடையவன் (2-273)

அங்கதம் இல்லாத கொற்றத்து அண்ணல் - பழிச் சொல்லுக்கு இடம் இல்லாத வெற்றியை யுடைய அண்ணல் (6 - 4303)

அஞ்சன ஒளியான் - மைவண்ணன் (1 - 1257)

அஞ்சனக், கருமுகிற் கொழுந்து எழில் காட்டுஞ் சோதி – மை, கருமேகச் சாயை இவற்றின் அழகைத் தன் திருமேனியில் காட்டும் ஒளி வடிவினன் (1 - 283)

அஞ்சனக் கிரி - மைம்மலை போன்றவன் (3 - 305)

அஞ்சனக் கிரி அன்னான் - கரிய மலை போன்றவன் (3 - 25)

அஞ்சனக்கிரி அனைய மஞ்சன் - மைமலை போன்ற சக்கரவர்த்தி குமாரன் (4 - 47)

அஞ்சனக் குன்றம் அன்ன அழகன் (2 - 586)

அஞ்சன[illegible] குன்றம் அன்னான் - மைம்மலை போ[illegible]றவன் (3 - 780)

அஞ்சனக் குன்றம் என்ன வந்தான் (2 - 702)

அஞ்சன ஞாயிறு அன்ன ஐயன் (2 - 676)

அஞ்சன மேகம் - கருமேகம் போன்றவன் (3 - 303)

அஞ்சன மேனி யழகன் (2 - 483)

அஞ்சன மேனியான் (5 - 1126)

அஞ்சன வண்ணத்தான் - மைநிறமுடையவன் (1 - 554 ; 5 - 1284)

அஞ்சன வண்ணன் (1 - 461 ; 2 - 946 ; 1017 ; 3 - 946 ; 4 - 661 ; 6 - 374 ; 1179 ; 2796)

அடக்கும் ஐம்பொறியொடுங் கரணத்து அப்புறம் கடக்கும் வாலுணர்வினுக்கு அணுகுங் காட்சியான் (2 - 561 ; வாலுணர்வு - மெய் யுணர்வு, தத்துவஞானம்)

அடல் வீரன் - வலிமை மிக்க வீரன் (2 - 286)

அடலின் வெற்றியான் - போர்புரியுமிடத்து வெற்றியே உடையான் (4 – 122)

அண்டசத்து அருந்துயில் துறந்த ஐயன் - ஆதி சேடனாகிய பாம்பின் மீது கொண்டிருந்த அரிய யோகத்துயிலை விட்டு உலகில் அவதரித்தவன் (3 - 230)

அண்டம் பலவும் அனைத்துயிரும் அகத்தும் புறத்தும் உளவாக்கி உண்டும் உமிழ்ந்தும் அளந்து

இடந்தும் உள்ளும் புறத்தும் உளனுகிக் கொண்டு சிலம்பி தன்வாயில் கூர்நூல் இயையக் கூடு இயற்றிப் பண்டும் இன்றும் அமைக்கின்றபடியை ஒருவான் (6 - 2600)

அண்ட முதல் நாயகன் - அண்டங்களுக்கெல்லாம் ஆதித் தலைவன் (5 - 607)

அண்டமும் அகிலமும் அறிவரு நெறியால் உண்டவன் - எல்லா அண்டங்களையும் உலகங்களையும் யாவரும் அறிய முடியாதபடி எடுத்துத் தன் வயிற்றில் அடக்கிக்கொண்ட திருமாலாம் இராமன் (3-117)

அண்டர் நாதன்-தேவர் தலைவன் (3 – 539 ; 6-4131)

அண்டர் நாயகன் (1-459 ; 2 – 57 ; 5 - 510 ; 6-120 ; 3939)

அண்டர் முதல்வன் - தேவர்க்குந் தேவன் (6 - 687)

அண்டன் - தேவன் (6 - 2596)

அண்ணல் – பெரியோன் ; பெருமையிற் சிறந்தவன் (1-392; 417, 551; 590 ; 2 - 52 ; 287; 290 ; 386; 523; 661 ; 683 ; 733 ; 886 ; 1009 ; 1047 ; 1150; 3 - 225 ; 425 ; 549 ; 786 ; 790 ; 970 ; 4 - 97 ; 105 ; 346 ; 530 ; 675 ; 993 ; 6 - 9 ; 561 ; 595 ; 704 ; 1537 ; 1549 ; 2154 ; 2180 ; 2184 ; 2209 ; 2358 ; 2391 ; 2579 ; 2655 ; 2726 ; 2793 ; 2888 ; 3266 ; 3303 ; 3305 ; 3401 ; 3457 ; 3653; 3911; 4063 ; 4148 ; 4171 ; 4203 ; 4214 ; 4250 ; 4255 ; 4271 ; 4303 ; 4318)

அண்ணல் அஞ்சன வண்ணன் - பெருமை மிக்க மை வண்ணன் (6 - 1179)

அண்ணல் இராமன் (3 - 1067)

அண்ணல் வீரன் - பெருமை தங்கிய வீரன் (3-549)

அதிர் கழல் வீரன் - ஒலிக்கும் வீரக்கழலை உடையவன் (3 - 1186)

அதிர் பொலன் கழலினுன் - ஒலி செய்கின்ற பொன்னுலாகிய வீரக் கழல் அணிந்தவன் (6 - 4205)

அந்தம் இல் சேவகன் - அளவிட முடியாப் பெருமை மிக்க வீரன் (5-688)

அந்தம் இல் பெருங்குணத்து இராமன் (2-860 ; பரதன் கூற்று)

அப்பன் - எவ்வுயிர்க்குந் தந்தையானவன் (1 - 1304)

அப்பினுள் அமுது - பாற்கடலுள் தோன்றிய தேவாமிர்தம் போன்றவன் (1 - 1304)

அம் கண்ணன் - கண்ணழகும் அருளும் நிறைந்தவன் (1 - 1332)

அம்பரத்து அனந்தர் நீங்கி அயோத்தியில் வந்த வள்ளல் - திருப்பாற்கடலில் அறிதுயில் கொள்வதை விட்டு அயோத்தியில் வந்து பிறந்த வள்ளல் (6 - 4322)

அம்பரத்து அனந்தர் நீத்தான் (6 - 4302)

அம்பு இயல் சிலையினன்-அம்பு பொருந்திய வில்லை யுடையவன் (6 - 1486)

அம்பு இழை வரிவில் செங்கை ஐயன் - அம்பு பொருத்தப் பெறும் கட்டமைந்த வில்லைச் சிவந்த கையில் கொண்டுள்ள ஐயன் (3-1015)

அம்புயக கண்ணன் - தாமரை போன்ற கண்களை யுடையவன் (6-2356)

அம்புயம் அனைய கண்ணன் (6 - 3651; இராவணன் கூற்று

அமர்க்களம் அணுகி ஆடல் பருந்தொடு கழுகும் பேயும் பசிப்பிணி தீருமாறு விருந்திடு வில்லின் செல்வன் (6 - 3947 ஆடல் - வலிய)

அமரர்க்காகி அசுரரை ஆவியுண்ட வீரியன் சிறுவன் - தேவர்களுக்காகச் சம்பரனுடன் வந்த அசுரர்களைப் போரில் உயிரழித்த பராக் கிரமமுடைய தசரதன் மகன் (4 - 69)

அமரர்க்கும் அமரன் (4 - 146)

அமலன் - மலங்கள் நீங்கப் பெற்றவன் ; தூயோன் (1 - 1154 ; 1380 ; 2 - 693 ; 745 ; 3 - 45 ; 166 ; 958 ; 968 ; 972 ; 984 ; 1018 ; 4 - 169 ; 192 ; 5 - 541 ; 6 - 433 ; 1843 ; 2170 ; 2485 ; 3277 ; 3450 ; 3631 ; 3648 ; 3649 ; 4298)

அமுது – அமுதம் போன்று சுவைப்பவன் (6 - 2618)

அமைவு அரு மேனியான் - பிறருக்கு அமைதல் அரிய திருமேனி யுடையான் (1 - 1309)

அயில் கடந்து எரிய நோக்கும் அரக்கரைக் கடக்க ஆழித் துயில் கடந்து அயோத்தி வந்தான் - வேற்படையையும் உக்கிரத்தினுல் வென்று நெருப்புப் பொறி பறக்குமாறு விழிக்கும் அரக்கரை வெல்லுவதற்காக அயோத்தியில் அவதரித்தவன் (6 - 926)

அயோத்தியர் ஆண்டகை (2 - 734)

அயோத்தியர்தங் கோ (6 – 2614)

அயோத்தி வேந்தன் (5 - 195 ; 6 - 1341 ; 2614 ; 3100 ; 4287)

(அரக்கர்) குலத்துக்கெல்லாம் நஞ்சு (5 - 447)

அரக்கர் வேந்தன் இருபது என்று உரைக்கும் நீலக் குன்று உரைத்தனைய தோளும், குலவரைக் குவடும் ஏய்க்கும் என்று உரைத்தனைய மௌலித் தலை பத்தும் இறுத்த வீரன் (6-4082 ; மௌலி - கிரீடம்)

அரசர் உருக்கொண்டமைந்த வேதியன் - அரச வடிவு கொண்டு பொருந்தி, வேதத்தினுல் விளக்கப் பெறுகின்ற பெருமகன் (6 - 1560)

அரசன் (4 - 663)

அரசு (3 - 337 ; 4 - 36 ; 100 ; 6 - 2614)

அரஞ்சுட அழல் நிமிர் அலங்கல் வேலினன் - அரம் அராவ நெருப்பு எழுகின்ற, மாலை அணியப் பெற்ற வேலை உடையவன் (2 – 1116)

அரந்தைவெம் பிறப்பு அறுக்கும் நாயகன் - துன்பத் துக்கிடமான கொடிய பிறப்பினை வேரறுக்கும் தலைவன் (6 - 4028 ; தேவர் கூற்று)

அரந்தை வெம் பிறவி நோய்க்கு அரு மருந்து அனைய ஐயன் (4 – 349 ; அரந்தை – துயரம்)

அரவணைத் துயிலின் நீங்கிய தேவன் (5 – 395; அனுமன் கூற்று)

அராவணை அமலன் அன்னன் (3 - 271 ; சூர்ப் பணகை கூற்று

அராவணை அமலன் என்று அயிர்க்கும் ஆற்றலான்- பாம்பணையில் பள்ளிகொள்ளும் பரமனே என்று ஐயங் கொள்ளத்தக்க வலிமையுடையவன் (1 – 800 ; சீதையின் தோழி நீலமாலை கூற்று)

அராவணை துறந்து போந்து அயோத்தி மேவிய இராகவன் (1 - 1283)

அரி – திருமால் (6 – 1633 ; 1714 ; 4112)

அரிந்தமன் - பகைவர்களை அடக்குபவன் (4 - 171 ; 417 ; 6 - 2658 ; 3325 ; 3646 ; 3735)

அருட்கரசன் – அருள் புரிவதில் சிறந்தவன் (3-166)

அருட்கு நாயகன் (4 - 400)

அருந் தெய்வம் (3 - 56)

அரு நான் மறையின் கனி – அரிய நான்கு வேதங்களின் இனிய கனி போன்றவன் (3 - 97)

அருமந்து அற்றம் அகற்றும் வில்லியார் - அரிய மருந்து போலத் துன்பத்தைப் போக்கியருளும் வில்லையுடையவர் (4 - 397)

அரு மறைக்கு உணர்வருமவன் - அரிய வேதங்களாலும் அறிதற்கரியவன் (1 - 283)

அருள் இருக்கும் பெருந்தாமரைக் கண் கருமுகில் (2 - 614)

அருளின் ஆழியான் - அருட் கடல் (4 - 261 ; 6 - 364; 369)

அருளின் வேலை - கருணைக் கடல் (6 - 357 ; 4227)

அருளுடை வீரன் (3 – 133)

அல்லித் தாமரைக் கண்ணன் (3 - 212)

அல்லியங் கமலமே அனைய செங்கண் ஓர் வில்லி (5 - 1116)

அல்லையாண்டு அமைந்த மேனி அழகன் - இருளையடக்கிப் பொருந்திய மேனியுடைய சுந்தரன் (2 - 1045)

அலங்கல் அம் தொடையினன் - அசைகின்ற அழகிய மலர் மாலையணிந்தவன் (6 - 4204)

அலங்கல் நேமியான் - ஒளி வீசும் சக்கரப்படையுடையவன் (1 - 1376)

அலங்கல் முகில் - மாலையணிந்த மேகம் போன்றவன் (1 - 382)

அலங்கல் வீரன் - வெற்றிமாலை புனைந்த வீரன் (6 - 1635 ; 3902)

அலங்கல் வேல் மதுகை அண்ணல் - வெற்றிமாலை சூடிய வேற்படை தாங்கிய வலிமை சான்ற பெருந்தகை (6 - 4318)

அலர்ந்த தாமரைக் கண்ணன் (6 - 4209)

அலர்வாழ் தேவிக்கு அமுது - தாமரையில் வாழும் திருமகளின் அவதாரமான சீதைக்கு அமுதம் போன்றவன் (6 - 2619)

அலைமேவுங் கடல் புடைசூழ் அவனி எலாங்காத்து அளிக்கும் அடல் கை வீரன் (6 - 3843 ; அடல் கை - வலியகை)

அலையுருவக் கடல் உருவத்து ஆண்டகை (1-737)

அவ்வியம் அவித்த சிந்தை அண்ணல் - பொறாமை என்பதை அகற்றிய மனத்து அண்ணல் (6 - 4271)

அவா முதல் அறுத்த சிந்தை அனகன் - ஆசையின் வேரை அடியோடு நீக்கிய மனமுடைய குற்ற மற்றவன் (4 - 98)

அழகன் (1 - 1355 ; 2 - 305 ; 483 ; 586 ; 720 ; 1045; 3 - 108 ; 231 ; 785 ; 4 - 976 ; 5 - 197 ; 390 ; 612 ; 665 ; 6 – 447 ; 3394 ; 4012 ; 4021 ; 4025

அழியா அழகுடையான் (2 - 622)

அளப்பரும் உலகம் யாவும் அளித்துக் காத்து அழிக்கின்றான் (6–3567)

அளவிலா உணர்வினன்-அளவிட்டுக் கூற முடியாத இயல்பான அறிவையுடையவன் (4 – 82)

அளவையின் நிமிர நின்றான் – பிரமாணங்களால் நிர்ணயிக்க வியலாமல் உயர்ந்து நின்றவன் (6 – 2161)

அளிக்கு நாயகன் - காக்குந் தெய்வம் (2 - 757)

அளிவரும் மனத்தோர்க்கெல்லாம் அரும்பத அமுது (6 - 4224)

அற்புதன் - அதிசயிக்கத் தக்க குணச் சிறப்புடையவன் (2 - 260 ; 5 - 508)

அறங்கள் நாறும் மேனியான்-தருமங்கள் தோன்றப் பெற்ற திருமேனியான் (4 - 229)

அறஞ்செய் காவற்கு அயோத்தி தோன்றினான் (1 - 1183)

அறத்தவர் (2 - 1025)

அறத்தாறு அழிவு உளதாம் எனப் புகுந்து அகத்தான் எனப் பிறந்து அன்னதைப் புரப்பான் - அறநெறி அழிவுற்றது என்று உலகத்தினுள் புகுந்து இவ்வுலகத்துக்குட்பட்டவன் என்று சொல்லுமாறு தோன்றி அந்த அறத்தைப் புரப்பவன் (6-3009)

அறத்தின் நாயகன் (5 - 639)

அறத்தின் மூர்த்தி (2 - 39 தயாதன் கூற்று)

அறத்தின் வாழ்வு - அறத்தின் உறைவிடம் (6-3304)

அறத்தினுக்கு ஆருயிர்த் துணைவன் (4 – 175)

அறத்துறை நிறுத்திய இராமன் (4 - 846)

அறத்தை முற்றுங் காவற்குக் காகுத்த வேடங் காட்டிப் புகுந்து நின்ருர் (6 -1354)

அறந்தரு சிந்தை நாயகன் (5 – 363)

அறந்தரு வள்ளல் - தருமத்தை உலகுக்குத் தந்து நிலைநாட்ட வல்ல வள்ளல் (3 - 860)

அறந்தலை நிறுத்தி வேதம் அருள் சுரந்து அறைந்த நீதித் திறம் தெரிந்து உலகம் பூணச் செந்நெறி செலுத்தித் தீயோர் இறந்துக நூறித் தக்கோர் இடர் துடைத்து ஏக ஈண்டுப் பிறந்தனன் (5 - 1123)

அறந்தலை நின்றவன் - தருமத்தையே முதன்மை யாகக் கொண்டு ஒழுகுபவன் (6 - 323)

அறநெறி நின்றுளோர்க்கெலாம் ஆணி (3-938)

அறப் பெருந் துணைவர் (6 - 1337)

அறம் அன்னுன் - தருமமே போன்றவன் (4 - 962)

அறம் என நின்ற நம்பன் (6 - 1338)

அறம் தரு சிந்தையன்பன் - தருமத்தை விளைக்கின்ற மனத்துடன் அன்புமுடையவன் (6 - 2208)

அறம் வளர்க்குங் கண்ணுளன் (கண்ணுளன்-கருணை யுடையவன் 6 - 3841)

அறமுதல்வன் (6 - 3399)
அற மூர்த்தி (5 - 1120)
அறிஞன் (4 - 498)

அறிவன் - யாவற்றையும் நன்கறிந்துள்ளவன் (3 - 1024)

அறிவின் உம்பரான் - யாவர் அறிவையுங் கடந்து நின்றவன் (1 - 331)

அறிவின் தனி நாயகன் - ஞானத்தின் ஒப்பற்ற தலைவன் (6 - 389 ; 3801)

அறிவின் மேல் உளான் - உணர்ந்தார்க்கும் உணர முடியாதபடி யாவையும் கடந்து நின்றவன் (6 - 389)

அறிவினின் அறிவான் நாயகன் - ஞானத்திலேயே உணர்தற்கு உரியவனான தலைவன் (6 - 3729)

அறிவினுக்கு அறிவாய் நின்றான் (5 - 112)

அறிவும் தொடர்ந்தணுகாப் புறத்தான் - அறிவு கூடப் பின்தொடர்ந்து நாடியும் நெருங்க முடியாதபடி அப்பாலுள்ளவன் (6 - 3009)

அறிவு முன்பவன் - பிறர் அறிந்து பாராட்டும் வலியுடையவன் (6 - 1507)

அறைகழல் இராமன் - ஒலிக்கும் வீரக் கழல் அணிந்த இராமன் (4 - 360)
அறையிருங் கழலவன் - ஒலிக்கின்ற பெரிய வீரக் கழல் அணிந்தவன் (5 - 499)

அன்பன் - எல்லா உயிர்களிடத்தும் அன்பு பூண்டவன் (6 - 3993)

அன்னமாய் அருமறைகள் அறைந்தான் - அன்னவடிவெடுத்துப் பிரமனுக்கு அரிய வேதங்களை உபதேசித்தவன் (3 - 60)

அன்னமாய் அருமறைகள் பாடினன் (4 – 38)

அன்னை ஏவத் தன்னுடை உரிமைச் செல்வந் தம்பிக்குத் தகவின் நல்கி நன்னெடுங் கானஞ் சேர்ந்தான் (4 - 70)

அன்னையே அனையவன் (3-40)

அனகன் (1 - 1166 ; 1248 ; 2 - 745 ; 3 - 1193 ; 4 – 97 ; 98 ; 5 - 665 ; 6 - 2145 ; 3395 ; 4155)

(அனுமன்) அகத்துறை அண்ணல் (5 - 197)

ஆசை சுமந்த நெடுங்கரி யன்னான் - திக்கினைத் தாங்கி நிற்கும் பெரிய யானை போன்றவன் (3 - 1062)

ஆடவர்க் கரசன் - புருடோத்தமன் (3 - 292 ; 1020 ; 6 - 1513)

ஆடவர் திலகன் (4 - 925 ; 6 - 2536)

ஆடவர் பெண்மையை அவாவுந் தோளினன் (1-380)

ஆடும் களிமா மத யானை அன்னான் - அசைந்தாடும் இயல்புடைய செருக்கும் பெரும் மதமுங் கொண்ட யானை போன்றவன் (3 - 1104)

ஆண்டகை - வீரர்களுட் சிறந்தவன் (1 - 737 ; 2 - 123 ; 450 ; 734 ; 1003 ; 3 - 153 ; 4 - 70 ; 593 ; 5 - 512 ; 525 ; 447 ; 6 - 686 ; 1511 ; 1516 ; 3620 ; 3652 ; 3836 ; 4097 ; 4140

ஆண்டகை வீரன் - ஆண்மைப் பண்பிற் சிறந்த வீரன் (6 - 2397 ; 3806)

ஆண்ட நாயகன் - எல்லா உயிர்களையும் அன்புடன் காத்து ஆண்டருளும் தலைவன் (5 - 1016)

ஆண்ட வில்லி - யாவரையும் ஆட்கொள்பவன் கோதண்டம் என்னும் வில்லை ஏற்றவன் (6 - 3679 ; 3800)

ஆண்டான்-யாவர்க்குந் தலைவன் (3 – 1157 ; 5 - 62)

ஆண் நாதன் (3 - 98)

ஆண் நாயகன் – புருடோத்தமன் (2 - 331)

ஆணி இவ்வுலகுக் கான ஆழியான் (6 - 2878)

ஆணை யாழியான் - ஆணைச் சக்கரத்தையுடையவன் (4 - 527)

ஆதி எனும் பொருளுக்கு அப்பாலான் (3 - 1175)

ஆதி தேவர் (3 - 1)

ஆதி பரம்பரம்-ஆதி முதன்மையான தெய்வம் (3-54)

ஆதி பரமன் – ஆதி பரம் பொருள் (3 – 1175)

ஆதி மூர்த்தி (6 - 349 ; 358)

ஆதியாம் மூர்த்தி (6 – 4005)

ஆதியான் - எல்லாவற்றிற்கும் முதற்பொருள் ; ஆதி மூர்த்தி ; ஆதி மூலப்பொருள் (3 - 69 ; 6 - 1560 ; 2692)

ஆதியொடு அந்தம் ஒன்றும் தன்னாலும் அளப்பரும் தான் (1 - 437)

ஆதி வானவர் பிரான் - யாவர்க்கும் முதலாகிய தேவ தேவன் (1 - 1139)

ஆய் இளையர்க்குக் கண்ணுள் ஆடு இரும்பாவை யானான் (6 - 4223 ; ஆய் இளையர் - அழகிய தம்பிகள்)

ஆய் துளவை முடியான் - அழகிய துளசியை அணிந்த திருமுடியுடையவன் (6 - 3997)

ஆய மா நாகர் தாழ் ஆழியான் - பொருந்திய பெருமை வாய்ந்த தேவர்கள் வந்து வணங்கும் திருமால் (4 - 88)

ஆயவன் - தாய்போன்றவன் (2 - 874)

ஆயிர நாமச் சிங்கம் (1 - 1335)

ஆயிர நாமத்து அண்ணல் (6 - 2154 ; 2531)

ஆயிர நாமத்து ஆழி அரி (6 - 1633 ; சீதை கூற்று)

ஆயிர நாமத்து ஐயன் (6 - 603)

ஆயிரம் அடற்கையுடையானை மழுவாளால் ஏ யெனும் உரைக்குள் உயிர் செற்ற எதிரில்லோன் மேயதிறன் முற்றும் வரி வெஞ்சிலையினோடும் தாயவன் - ஆயிரம் வலிய கைகளையுடைய கார்த்தவீரியனைத்தன் கோடாலி என்னும் படையினால் ஏய் என்று சொல்லும் நேரத்திற்

குள் உயிரை அழித்த, தனக்கு எதிரற்ற வீரனான பரசுராமன் அடைந்திருந்த வலிமை முழுவதை யும் அவன் பிடித்திருந்த கட்டுக்குள் அமைந்த கொடிய வில்லோடும் அவன் வலியைக் கடந்த வன் (3 - 749)

ஆயிரம் பெயரவன் (6 - 1478 ; 1507)

ஆயிரம் பெயரினான் (6 - 2150)

ஆயிரம் பெயருடை அமலன் (2 - 745)

ஆயிரம் பெயருடை ஐயன் (4 – 146)

ஆயிரம் பேரினான் (6 - 3826)

ஆரணத்து அமுது - வேதத்தின் இனிய பொருள் மயமாயிருப்பவன் (6 - 815)

ஆரணத்து உறையுளான் - வேதங்களை உறை விடமாகக் கொண்டவன் (1 - 341)

ஆரணம் அறிதல் தேற்றா ஐயன் (2 - 277)

ஆரம் தாழ் திருமார்பன் - மாலைபடிந்த அழகிய மார்பையுடையவன் (5 – 636)

ஆராவமுது (6 - 3884)

ஆரியன் - போற்றத்தக்கவன் ; பூசிக்கத் தக்கவன் (1 - 450 ; 2–580 ; 3 - 784 ; 947 ; 1064 ; 4-269 ; 316 ; 430 ; 19 ; 684 ; 980 ; 985 ; 5 - 106 ; 446 ; 513 ; 583 ; 620 ; 1260 ; 6 - 409 ; 889 ; 1063 ; 1177 ; 13'8 ; 1747 ; 2098 ; 2170 ; 2207; 2286 ; 2393 ; 2880 ; 3552 ; 3641 ; 3711 ; 3789;

3831 ; 3909 ; 4126 ; 4187)

ஆருயிர்க்கு அமிழ்தம் (4 - 80)

ஆலிலைப் பள்ளியான் (4 – 382)

ஆலின் அடை கிடந்தபாலன் - பிரளய காலத்தில் ஆலிலைமீது பள்ளி கொண்டு விளங்கிய பாலன் (3 - 1172 கவந்தன் கூற்று)

ஆலை ஏய் துழனி அகல் நாடன் - கடும் பாலைகளில் உண்டாகும் ஒலிகளோடு கூடிய அகன்ற கோசல நாட்டிற்குரியவன் (4 - 43)

ஆலைபாய் வயல் அயோத்தியர் ஆண்டகை (2 - 734)

ஆழி அரி (6 – 1634)

ஆழி ஐயன் – சக்கராயுதமுடைய தலைவன் (4 - 358 அனுமன் கூற்று)

ஆழித்தனி முதல் நாயகன் (6 - 3001)

ஆழி நாதன் - சக்கரப்படை கொண்ட தலைவன் (6 - 3676)

ஆழி நெடுங்கை ஆண்டகை (5 - 598)

ஆழிப் புரவலன் (4 - 74)

ஆழி மன்னன் (6 – 2359)

ஆழி மாமால் (4 - 176)

ஆழியம் செல்வன் - திகிரிப்படை தாங்கிய செல்வன் (6 - 2171)

ஆழியான் - நேமிப்படையுடையவன் ; திருப்பாற் கடலில் துயில்பவன் ; ஊழிப் பெருவெள்ளத்தில் துயில்பவன் (2 - 242 ; 1114 ; 3 - 304 ; 4 - 72 ;

88 ; 358 ; 429 ; 5 - 400 ; 1257 ; 6 - 123 ; 392 ; 402 ; 445 ; 486 ; 876 ; 1320 ; 2417 ; 2630 ; 2718 ; 2878)

ஆழியான் மைந்தன் - சக்கரவர்த்தி குமாரன் (4-8)

ஆழியில் அறி துயிலவன் - திருப்பாற் கடலில் யோகத் துயில் புரிபவன் (3 - 107 ; சரபங்க முனிவர் கூற்று)

ஆழியுழவன் புதல்வன் - ஆஞ்ஞா சக்கரத்தை உல கெங்கும் செலுத்திய தசரதன் குமாரன் (3-170)

ஆழியை அகற்றித் தனுவலங் கொண்ட தாமரைக் கண்ணவன் (16-2545)

ஆள்வான் - (அனுமனை) ஆள்பவன் (5 - 80)

ஆளரி யேறு - வலிய ஆண் சிங்கம் (3 - 96)

ஆளுடையான்–தேவரை அடிமையாக் கொண்டான் (1 - 1239 ; 6 - 2599)

ஆளுடை வில்லி - எம்மை அடியார்களாய்க் கொண் டுள்ள வில்லாளி (கவிக் கூற்று 4 – 172)

ஆளும் நாயகன் - எல்லா உயிர்களையும் படைத்து ஆண்டருளும் தலைவன் (3 - 1169)

ஆன்ற செவ்வியோன் – உயர்ந்த செம்மைக் குணம் நிரம்பியவன் (4 – 345)

ஆன்ற பேர் அண்ணல் - நிறைந்த புகழ் வாய்ந்த பெருமையன் (6 - 2726)

ஆன்றான் - பெரியோன் (2 - 435)

ஆனந்தம் (6 - 2191)

ஆனேறு (3 - 96)

இகல் அடு சிலை வீரன் (2 - 721; இகல் அடு - பகையை ஒழிக்கின்ற)

இகல் இராமன் - போரிற் சிறந்த இராமன் (3 - 746)

இகல் வீரன் - போரிற் சிறந்த வீரன் (5 - 615)

இகழ்வரும் பெருங்குணத்து இராமன் (5 - 155)

இசையினுக்கு இசைந்த தோளான்-புகழ் தாங்குதற்குரிய புயவன்மையுள்ளவன் (6 - 2354)

இடம்படு தோளவன் – (பரந்த தோள்களையுடையவன் (1 - 1326)

இடையுறு கருமத்தின் எல்லை கண்டவர் கடையுறு நோக்கினிற் காணுங் காட்சியான் - (பிறந்த நாளிலிருந்து பரமபதம் எய்தும் காலத்திற்கு) நடுவில் பொருந்திய இடைப் பொழுதில் கருமத்தின் எல்லையைக் கண்ட ஞானிகள் எல்லையான ஞானக் கண்ணினுல் காணும் காட்சிப் பொருளானவன் (6 - 1064)

இணர் துழாய்த் தொங்கல் இராமன் (6 – 3990)

இணை நெடுங்கமலக் கையான் - இரண்டாகிய நீண்ட செந்தாமரை போன்ற கரங்களையுடையவன் (6 – 776)

இதம் எனும் பொருளலது ஓர் இயல்புணர்ந்திலன்-

நன்மை தரும் பொருளேயே யல்லாமல் வேறு ஒரு மாறுபாடான தன்மை நினைப்பவனல்லன் (4 – 51)

இந்திரை கேள்வன் – திருமகள் கேள்வன் (2 – 97)

இந்திரை கொழுநன் (6 - 3760)

இப்பரம் துடைத்தவர் எய்தும் இன்பம் - இவ்வுலகப் பற்றுக்களாகிற சுமையை அற நீக்கிய ஞானியர் சென்றடைதற்குரிய பேரின்ப மயமானவன் (1 - 1304)

இமைப்பு இலாதோர் தம்மையே முதலிட்டு ஆன்ற சராசரம் சமைத்த ஆற்றல் மும்மையாம் உலகங் காக்கும் முதல்வன் – இமையாத தேவர்களேயே முதலாகக் கொண்டு உயர்ந்த தாவர சங்கமப் பொருட்கள் அனைத்தையும் படைத்தமைத்த திறமையுடன் மூவகை யுலகங்களேயும் காக்கும் தலைவன் (4 - 67)

இமையவர் இடுக்கண் தீர்ப்பான் - வானோர் துயரம் போக்க அவதரித்தவன் (3 - 787 ; 6 - 2174)

இமையவர்க்கெலாம், அன்னவர் தவத்தினுல், பன்னக மணி விளக்கு அழலும் பாயலுள் அனந்தல் நீங்கினுன் (1 – 1303)

இமையோர் இடுக்கண் தீர்த்த கழல் வேந்து (2-1)

இமையோர்களே உய்திறந் துணிந்தான் - தேவர்களேக் குடைந் தேறச் செய்கின்ற வழியிலேயே

குறிப்புக்களைச் சரி பார்த்தேன். இந்நூல் அச்சிடுவதற்குள் ஒளிந்திருந்த சீட்டுக்களும் வெளிப்பட்டு விட்டன. அளவிலா மகிழ்ச்சியடைந்தேன். அவற்றைப் பிற்சேர்க்கையில் குறித்துள்ளேன் அவற்றையும் உரிய இடங்களில் சேர்த்துக்கொள்ளுமாறு அன்பர்களை வேண்டிக் கொள்கிறேன். அகராதித் துறையை மேற்கொள்வோர் நிலையான ஓரிடத்தில் சிறுவர்கள், பெரியோர்களின் இடையீடும், தொந்தரவும் இல்லாத தனியிடத்தில் முழுக் கவனத்துடன் பணிபுரிய வேண்டும் என்ற படிப்பினையைக் கண்ணும் பூச்சியாடிய இந்தத் துண்டுச் சீட்டுக்கள் எனக்கு உணர்த்தி விட்டன.

நம் நாட்டு நூலகங்கள் ஆங்கில அகராதிகள், கலைக்களஞ்சியங்கள் முதலியவற்றிற்குக் குறிப்பு நூற் பகுதியில் (Reference Section) தனியிடம் கொடுத்துப் போற்றுவது போலத் தமிழ் அகராதிகள் முதலியவற்றைப் போற்றும் பழக்கத்தை மேற்கொண்டால் அப்போதுதான் இதுபோன்ற ஆராய்ச்சிக்குதவும் நூல்கள் கட்டாயம் எல்லா நூலகங்களிலும் இடம் பெறும் என்று நம்புகிறேன். அறிவிற் சிறந்த நம் நூலகர்கள் மக்களின் மனம் போன போக்கிலேயே செல்லவேண்டுமென்பதற்காக வெறும் பொழுதுபோக்கு நூல்களை மட்டும் பெருமளவில் வாங்குகின்ற பழக்கத்துடன் மக்களுக்கு ஆராய்ச்சி மனப்பான்மையை ஊட்டக்கூடிய நூல்களையும் ஓரளவு வாங்கிவைத்து மக்களின் அறிவுச் செல்வத்தைப் பெருக்குவது போற்றத் தக்கது என்று கருதுகின்றேன்.

தொகுப்பு நூல்கள் பலப்பல துறைகளிலும் நிறைய வெளிவரவேண்டுமென்று காலஞ் சென்ற தமிழறிஞர் 'அண்ணு' அவர்கள் பேசியுள்ளது என் நினைவிற்கு வருகிறது. கம்பரின் காப்பியச் சுவையைப் பருகிக் களித்தவர் அவர். தமிழ் இலக்கியத்துறை பல்லாற்ருனும் பெருகி வளர்வதன்மூலம் தமிழ் உலகப் பெரு மொழிகளுள் ஒன்ருகத் திகழவேண்டும் என்ற தம் ஆசையை இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டில் வெளியிட்டார் அவர் கனவை நனவாக்குவது தமிழறிஞர்களால் முடியும் என்று நம்புகிறேன்.

காலமெல்லாம் கம்பன் புகழ் ஓங்கவே பாடுபடுவேன் என்று கங்கணங் கட்டிக் கொண்டவரும், அரசியல் துறையில் அறம் வளர்க்குங் கண்ணுளரும், இலக்கியத்துறையில் எல்லோருடைய இதயதாகத்தையும் எழுப்பிச் செவிநுகர் அமுதத்தைவழங்குபவரும், பேச்சுத்துறையில் சொலல் வல்லராய்ச் சோர்விலராய் அஞ்சாதவராய் வீறுகொண்டு பேசுபவரும், கவிதைத் துறையில் கச்சிதமான யாப்பமைதியில் கற்பனையும் சந்தமுங் கைகோத்தாடச் சொன்னயங் கொண்டு நன்னயஞ்செய்பவரும், அன்புத்துறையில் தம்மைக் கண்ணெனக் கருதுபவரைத் தம்கண்ணுள் மணியெனக் கருதுபவரும், ஆராய்ச்சித் துறையில் உண்மையைக் கடவுளாக வழிபடுபவரும், பக்தித் துறையில் சித்தத்தை நிலைநிறுத்துபவரும், மொழிக்கும் நாட்டுக்கும் பணிசெய்யும் துறையில் தம்மையே மறந்திருப்பவருமான பெருந்தகையண்ணல் உயர்திரு சா. கணேசன் அவர்களுக்கு மணிவிழாக் காணிக்கையாக இந்நூலைப் படைப்பதில் பெருமையும் பெருமகிழ்ச்சியுங் கொள்கிறேன்.

கம்பர் திருமுன்னிலையில், கம்பருக்குப் புகழ்க் கோயில் கட்டிய கம்பராமாயணக் காவலர், பைந்தமிழ்ச் செல்வர் உயர்திரு சா. கணேசன் அவர்களுக்குச் சமர்ப்பிக்கப்பெறுவதும், கம்பர் கண்ட இராமனின் புகழ் கூறுவதுமான இந்நூலுக்குக் கம்பராமாயணத்தைத் தம் உயிரினும் பெரிதெனப் போற்றும் உயர்திரு 'கம்பராமன்' அவர்களுடைய தேன் கவிதைமலர்மாலை அணிமாலை (அணிந்துரை) யாகக் கிடைத்தது எத்துணைப் பொருத்தமாய் அமைந்தது என்று எண்ணி இராமபிரானது திருவருட்டிறத்தை வியந்து போற்றுகிறேன். 'இராமன் அருட்செல்வத்திற்கு' இராமபிரானே முன்னின்று ஆசிகூறி வாழ்த்தியது போலவே 'கம்பராமன்' அவர்களது கவிமாலையைக் கருது கிறேன். மணிவிழாக்காணும் பெருந்தகை உயர்திரு சா. கணேசன் அவர்களுடைய தமிழ்த்தொண்டு, நாட்டுத்தொண்டு, இலக்கியத்தொண்டு ஆகிய வற்றைப் பொருத்தமுறப் போற்றி யருளியதுடன் என்னையும் இந்நூலையும் உவந்துவந்து பெரிதும் போற்றியருளிய 'கம்பராமன்' அவர்களுடைய கனிந்த கவிதை நெஞ்சத்திற்கு என் தலையாய வணக்கங்களும் நன்றியும் உரித்தாகின்றன. வாக்காலும் மனத்தாலும் எழுத்தாலும் தமிழுக்கும் சமயத்திற்கும் தனிப்பெருந் தொண்டாற்றி வரும் கவிஞர் கம்பராமன் அவர்களது உள்ளமாகிய அன்புக்கடலினின்று விளைந்த இந்த அமுதப்பாக்கள் படிக்குந்தோறும் தித்திக்குந் தீஞ்சாருய் என் உள்ளத்திற்கு உணர்வு நல்கும் பைஞ்சோருய்த் திகழ்கின்றன.

ஏறக்குறைய நானூறு தொடர்களைக் கொண்ட 'கம்பர் தரும் திருமால் அருட்செல்வம்' என்ற பகுதியையும் இந்நூலுடன் சேர்த்துப் பதிப்பிக்கலாம் என்றிருந்தேன். ஆனால் பொருள் முட்டுப்பாடு அதற்கு முட்டுக் கட்டையிட்டுவிட்டது. பொருட் செல்வமில்லாமையால்தான் முருகன் அருட் செல்வம், தேவி அருட்செல்வம், சிவபிரான் அருட் செல்வம், திருமால் அருட்செல்வம் முதலியவையும் பல ஆண்டுகளாக அச்சேறுவதற்காகத் தவஞ் செய்து கொண்டிருக்கின்றன! எல்லோர்க்கும் அருட்செல்வத்தை வழங்க விரும்புபவர்க்கும் வேண்டப்படுவது பொருட்செல்வமே.

இந்நூலைக் குறித்த காலத்தில் சிறந்த முறையில் அச்சிட்டுதவிய என் இனிய நண்பர் எஸ். சிவராம் அவர்களுக்கும், ஆர்வத்துடன் நூலைப் படித்துக் கொண்டே பிழையின்றி அச்சுக்கோத்த அச்சுக் கோப்பாளர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எண்ணிய நல்லெண்ணங்களுக் கெல்லாம் இன்துணையாயிருந்து இமைப்பொழுதும் என்னெஞ்சில் நீங்காதுறையும் தெள்ளமிர்தமாகிய திருவன்னையாரின் திருவடிகளை வழுத்துகிறேன்.

ஈரோடு,
24—3—'68

மு. சதாசிவம்.

இனிய அழகை எய்தினன் - இன்பத்தையளிக்கும் அழகை எய்தினன் (3 - 237)

இனிய சிந்தையிராமன் - யாவரும் விரும்பத்தக்க மனமுடைய இராமன் (3 - 548)

இனியவன்-யாவர்க்கும் இனிமையளிப்பவன்(3 - 118

ஈசற்கும் ஈசன் (6 - 757)

ஈசன் (5 - 751 , 6 - 602 , 2265 , 2516 , 3373 , 3697, 3855 , 4124)

ஈதைகள் தீர்க்கும நாமத்து இராமன் - அன்பர்கள் துன்பங்கள் அனைத்தும் உச்சரித்த அளவில் போக்கியருளும் பெயரையுடையவன் (6 - 2271)

ஈரம் நீங்கிய சிற்றவை சொற்றனள் என்ன வாரம் நீங்கலா இளவற்கு மன்னரசுரிமைப்பாரம் ஈந்தவன் (4 -147 , மன்னரசு - நிலைபெற்ற அரசியல்)

ஈறில் வள்ளல் (6-601)

"ஈறில் வள்ளலே காத்தி" என்ற மாகரி வருத்தந்தீரப் புள்ளின்மேல் வந்து தோன்றும் புராதனன் (6-601)

ஈறிலாப்புகழோன் (6 - 4042)

உச்ச வீரன் - தலைசிறந்த வீரன் (3 - 501)

உண்ணும் நீர்க்கும் உயிர்க்கும் உயிரவன் , எண்ணும் கீர்த்தி இராமன் (6 - 4095 , எண்ணும் - நன்கு மதிக்கப்படும்)

உண்மையினேன் - சத்தியவிரதமுடையவன்
(3 - 905)

உணர்வாய பெண்ணின் உருவாய் ஆணுகி மற்றும் அலியாகி நிற்பான் (6 - 2190, உணர்வாய - காட்சி யறிவிற்கு இலக்காகின்ற)

உணர்வொடு ஊனுடை உயிர்தொறும் உறைவுறும் ஒருவன் - தன்னை ஊணாக உடையரான ஞானிகளிடத் தெல்லாம் விருப்புடன் வசிப்பவன் (6 - 3724)

உத்தமன் - புருடோத்தமன் (2 - 688 ; 3 - 102 ; 3 - 224 ; 895 ; 6 - 2702 ; 3966)

உத்தமனர் (6 - 3884)

உம்பரும் இம்பரும் உரகரும் தொழவுளான் - வானவரும் மண்ணவரும் கீழுலகரான நாகரும் தொழுதற்குரியவன் (1 - 1125)

உயர் குணத்தோன் (6 - 4020)

உயர் மன்னர் மன்னவன் மைந்தன் (3 – 142)

உயர் வேதமும் போதமும் காண்கிலாதான் (5 - 578; போதம் - மெய்ஞ்ஞானம்)

உயிர்க்கிறைவன் (5 - 502 ; சீதை கூற்று)

உயிர்களின் முதலின் வைத்தவோர் எழுத்தினன் - உயிரெழுத்துக்களின் முதலிலே வைக்கப் பட்டுள்ள அகர வடிவினன் (6 - 3794)

உரவோன் - வலியோன் ; பேரறிஞன் (3 - 114, 381 ; 6 - 533)

உரனுடைய இருகை ஒரு களிறு (6 - 3397)

உருப் பொடியா மன்மதனை ஒத்துளான் - வடிவம் அழியாத மன்மதனை ஒத்திருப்பவன் (3 - 323)

உருளுடை நேமியால் உலகை ஓம்பிய பொருளுடை மன்னவன் புதல்வன் - எங்கும சுற்றிச் செல் லும் ஆக்ஞா சக்கரத்தால் உலகம் முழுவதுங் காத்த சிறந்த செயலையுடைய அரசனாகிய தசரதன் புதல்வன் (3 - 133)

உரை கடந்தான் - சொற்களால் புகழ்ந்து கூறமுடி யாத பெருமையன் (3 - 341)

உரைசெயற்கு எளிதுமாகி அரிதுமாம் ஒழுக்கின் நின்றான் - சொல்லுதற் கெளிதாகிக் கடைப் பிடித்தற்கரிதாகவுள்ள நல்லொழுக்கத்தில் நிலை நிற்பவன் (4 - 422)

உலகந்தாங்கினான் (1 - 334)

உலக நாதன் (6 -934)

உலகம் செய்த பாக்கியம் அனைய வீரன் (6 - 1101)

உலகம் முந்து உதவினான் - உலகங்களை முற் காலத்துப் படைத்தவன் (4 _ 176 ; 6 – 4308)

உலகம் முற்றுடைய கோ - மூத்த மகனாகப் பிறந்து உலகம் முழுவதையும் தனக்கே உரிமையாக உடையவன் (2 - 406)

உலகம் மூன்றுங் காலினல் கடந்து கொண்ட புண்ட ரீகக் கண் ஆழிப் புரவலன் (4 - 74)

உலகம் யாவுக்குங் களைகண்-உலகிலுள்ள சராசரங் கட்கெல்லாம் புகலிடம் (6 – 3970)

உலகமும் உதவினன் (6 - 4308)

உலகழிக்கும் ஊழியான் (5 - 457)

உலகிற் கெல்லாம் நாயகன் (6 - 597)

உலகின் தாய் (3 - 55)

உலகீன்றான் - உலகங்களைத்தன் உந்தியினின்றும் படைத்த திருமாலாகிய இராமன் (3 - 736 ; மாரீசன் கூற்று)

உலகு ஏழினேடு ஏழு பெயர்ந்து அளந்தான் (6 - 2314 ; பெயர்ந்து - தன் நிலையினின்றும் நீங்கி)

உலகு ஒரு மூன்றும் தம் உடைமை ஆக்குறும் அல கறும் இலக்கணம் அமைந்த மெய்யினன் (3-190; அலகறும் - அளவு சொல்ல முடியாத)

உலகுக்கெல்லாம் கலங்கலில் காரணம் – கலக்க மில்லாத (உறுதியான ஒரே) காரணமான மூலப் பொருள் (6 - 2776)

உலகுக் கெல்லாம் நாயகன் என்னலாம் நலம் மிக் கோன் - உலகம் அனைத்திற்கும் தலைவன் என்னுமாறு சிறப்பில் மேம்பட்டவன் (4 - 100)

உலகு செய்தோன் - உலகங்கள் யாவற்றையும் உளவாக்கியவன் (6 – 3637)

உலகுடை ஒருவன் – உலகங்களையெல்லாம் உடையவன் (6 - 2827)

உலகுடை நாயகன் - உலகங்கள் எல்லாம் தமக்கு நாயகனாகக் கொண்டவன் (5 – 633)

உலகு யாவையும் மன் வயிற்றில் அடக்கிய மாயன் (2 – 96)

உலகெங்கணும் தானே ஆனான் - உலகின் எல்லாப் பாகங்களிலும் தானேயான பரம்பொருள் (6-3350)

உலம்போல் வீங்கு தோள் அண்ணல் - திரண்ட கல்லைப்போல் பருத்த தோளையுடையவன் (2 - 733)

உவமை நீங்கிய தோன்றல் (3 - 148)

உள்ளத்து உறைகுவான் – எல்லா உயிர்களின் உள்ளத்திலும் மறைந்து வசிப்பவன் (3 – 216)

(அனுமன்) உள்ளுறையும் ஒருவன் (15 - 329)

உளைவயப் புரவியான் உதவ உற்று ஒரு சொல்லால் அளவில் கற்புடைய சிற்றவை பணித்தருலால், வளையுடைப் புணரி சூழ் மகிதலத் திருவெலாம் இளையவற்கு உதவினான் - பிடரி மயிர்களையுடைய வலிய குதிரைகளையுடைய தசரதனால் விருப்புடன் அளிக்கப் பெற்று அளவிட முடியாத கல்வியையுடைய சிற்றன்னை கைகேசியின்

ஒரு சொல் காரணமாகக் கட்டளையிட்டமையால் அதை மேற்கொண்டு கடல் சூழ்ந்து வளைந்துள்ள மகிதலத் திரு எல்லாம் இளையவனை பரதனுக்கு உதவியவன் (4 – 85)

உற்று ஒரு தனியே தானே தன்கணே உலகம் எல்லாம் பெற்றவன் - தானே தன்னந் தனியனாய் மனத்துள் கருதித் தன்னுள்ளே உலகங்கள் எல்லாம் ஈன்றவன் (6 - 593)

உறங்காதான் - அறிதுயிலில் இருப்பவன் (3 - 57)

ஊனாகி உயிர்க்கும் உயிராகி நிற்பான் (6 - 2190)

ஊழி நாயகன் (4 - 429 ; 5 – 107)

ஊழி முதல் நாயகன் - ஊழிக் காலத்தும் அழியாது விளங்கும் ஆதி முதல்வன் (6 - 689)

ஊழி முதல்வன் - பல ஊழிக் காலங்களுக்கும் முன்னுள்ள பரம் பொருள் (3 - 41)

ஊழியான் – பேரூழிகள் நிகழுங் காலத்தும் அழியாது இருப்பவன் (3 - 71 ; 4 - 534 ; 679 ; 5 - 324 ; 1105 ; 6 - 354 ; 4210)

ஊழியின் ஒருவன் - ஊழிக்காலத்தும் அழிவின்றி நிலைப்பவன் (6 - 1520)

எங்குமுள்ளான் (6 - 2188)

எண் அருளி ஏழைமை துடைத்து எழும் மெய்ஞ் ஞானக் கண் அருள்செய் கண்ணன் - சீவர்

களுக்கு அறிவை அளித்து அறியாமையை ஒழித்து மேல் உதயமாகும் தத்துவஞானமாகிய உண்மைக் கண்பார்வையளித்தருள் செய்யும் இராமன் (3 - 254)

எண்ணருங் குணத்தன் (1 - 98)

எண்ணிடைக் குரிசில் - யாவர் மனத்திலும் சூக்கும மாயிருந்து விளங்கும் பரம்பொருள் (3 – 44)

எண்தகு குணத்தான் - யாவரும் மதிக்கத்தக்க நற் குணமுடையவன் (3 - 168)

எண்தகு குணத்தினன் (2 - 1152)

எண்வகை ஒருவற்கும் இமையவர்க்கு இறைவன் தனக்கும் பல்பெரு முனிவர்க்கும் உயிருடன் தழீய அனைத்தினுக்கும் பரம் - அட்டமூர்த்தி யாகிய ஒப்பற்ற சிவபிரானுக்கும் தேவர்க்கு அரசனாகிய இந்திரனுக்கும், பல பெருமைமிக்க முனிவருக்கும், உயிருடன் இயைந்த எல்லாப் பொருள்கட்கும் பரம்பொருள் (4 - 3994)

எந்நாளும் மூவாது உலகு ஏழொடு ஏழும் அரசாளும் மேன்மை முதல்வன் (6 - 2187 ; மூவாது - மூப்படையாது)

எப்பொருளும் ஈன்றவன் (3 - 1171)

எரி காம வெம்பிணிக்கு மாமருந்து (3 - 336)

எல் ஒன்று கமலச் செங்கண் இராமன் - சூரிய

கிரணங்கள் பொருந்திய (மலர்ந்த) தாமரை மலர் போன்ற கண்களையுடைய இராமன் (3-617

எல்லாவுயிர்கட்கும் நன் மகன் (2 - 219)

எல்லைதீர் நல்லறத்தின் சான்றவன் (3 - 1171 ; (எல்லைதீர் - எல்லையற்ற)

எல்லைப் பூவலயத்தை யாண்ட புரவலன் புதல்வன் - பூமியின எல்லையுள்ளவும் உலகையாண்ட தசரதன் புதல்வன் (5 - 1119)

எல்லையில் பெருங்குணத்து இராமன் (6 - 325)

எவ்வரங்களுங் கடந்தவன் - எல்லா வரங்களையும் மீறியவன் ; எவரிடத்தும் வரம் வேண்டாதவன் (6 – 4024)

எவ்வுலகுந் தொழுந்தாள் அரசு (6 - 2614)

எவர்க்குஞ் சான்றுளான் - எல்லார்க்கும் எல்லாக் காரியங்கட்கும் சான்றாக உள்ளவன் (6 – 3983)

எவர்க்கும் முதலாகி ஈறோடு இடையாகி எழுவான் - எல்லா உயிர்வகைகட்கும் மூலகாரணமாகியும் அழிக்குங் காரணமாகியும், இடைநின்று காக்குங் காரணமாகியும் வியூகாவதாரம் கொண்டு முளைப்பான் (6 - 2188)

எவர்க்கும் மூத்த தேவர்தந் தேவன் – யாவரினும் மேம்பட்ட தேவ தேவன் (6 - 3042)

எவர்க்கும் மேல் நின்றான் - எவரினும் மேம்பட்டு நின்றவன் (1 - 339)

எழிலிவண்ணன் - கொண்டல் வண்ணன் (6 - 859)

எழுத்து எனச் சிதைவிலா இராமன் (6 - 3716 ; எழுத்து - பிரணவம், சப்தபிரமம்)

எழுதரிய திருமேனிக் கருங்கடல் (1 - 731)

எழுதரிய மேனியான் – சித்திரத்தில் எழுதுவதற்கும் அரிய வடிவழகுடையவன் (3 – 267)

எழுது கீர்த்தியான் – கவிஞர்களால் வரையத் தக்க மிக்க புகழுடையவன் (1 – 511)

எழுது குங்குமத் திருவின் ஏந்துகோடு உழுத மார்பினன் - கோலமாக வரைந்த குங்குமக் குழம்பினைக் கொண்டதாய்ப் பிராட்டியின் உயர்ந்த தனத்தின் உச்சியினாலே உழப்பெற்ற மார்பையுடையவன் (6 – 2746)

எழுது வென்றியான் - நூல்களில் சிறப்பித்து எழுதத் தகுந்த வெற்றிச் சிறப்புடையவன் (4 - 131)

எழுமேக உருவன் - மேல் எழுகின்ற நீருண்ட மேகம் போன்ற திருவுருவை உடையவன் (3 - 24)

எளிவரும் உயிர்கட்கெல்லாம் ஈன்ற தாய் (6 - 4224)

எறிகடல் உலகெலாம் இளவற்கு ஈந்ததோர் பிறிவருங் கருணையும் மெய்யும் பேணினன் (6-396)

எறிநீரில் எழுநாளக் கந்த மலரைப் பொருவு கண்ணன் - அலைகள் வீசி எறியப் பெற்ற

நீரையுடைய தடாகத்தில் எழுகின்ற தண்டினை யுடைய மணமுள்ள தாமரை மலரை ஒத்து விளங்கும் கண்ணையுடையவன் (3 - 606)

எறுழ்வலித் திரள்புயத்து இராமன் (6 - 3744 ; எறுழ்வலி - மிக்கவலி)

என்றும் உலவாப் பெருங்குணத்து உத்தமன் (3 - 102 ; உலவா - குறையாத)

ஏக நாயகன் - தனித் தலைவன் (5 - 1087)

ஏடு அவிழ் மார்பன் - மலரிதழ்கள் மலர்கின்ற மார்பன் (6 - 3119)

ஏத்தரும் பெருங்குணத்து இராமன் (2 - 1206 ; ஏத்தரும் - புகழ்தற்கரிய)

ஏத்து வாய்மை இராமன் - யாவரும் புகழ்ந்து கொண்டாடும் வாய்மை நெறியை மேற்கொண்ட இராமன் (3 - 378)

ஏதம் இல் அறத்துறை நிறுத்திய இராமன் (4-846)

ஏந்தல் (1-401 ; 2-1104 ; 1123 ; 1155 ; 3 - 617 ; 4 - 418 ; 446 ; 676 ; 5 - 236 ; 1266)

ஏந்தல் பொன் தோளினன் - மலைபோன்ற அழகிய தோளை உடையவன் (3 - 273)

ஏந்து தடந்தோள் இராமன் (2 - 389)

ஏந்தெழில் இராமன் (6 – 1313)

ஏ வலான் – அம்புகளைக்கொண்டு போர் செய்வதில் வல்லவன் (3 - 72)

ஏழ் உலகினுக்கும் ஒரு நாயகன் (3 - 534)

ஏழுலகு முழுவதுடையான் மைந்தன் – தசரத குமாரன் (3 - 200)

ஏற்ற பேருலகு எலாம் எய்தி, ஈன்றவள் மாற்றவள் ஏவ, மற்று அவள் தன் மைந்தனுக்கு ஆற்றரும் உவகையால் அளித்த ஐயன் (2 – 259

ஏற்றவளை வரிசிலையோன் - கையில் தாங்கிய வளைந்த கட்டமைந்த வில்லையுடையவன் (3-340)

ஏறு சேவகன் - விடைபோன்ற வல்லமை சான்றவன்; சிங்கவேறு போன்ற வீரன்; நாளும் வளரும் வீரத்தன்மையுடையவன் (2 – 576; 3 - 32; 5 - 167; 625; 1026; 6 – 1156; 1553; 3813)

ஏனமாய் மண்ணிடந்தான் - வராக உருவங்கொண்டு புவியைத் தன் கோட்டால் குத்தி எடுத்தருள் செய்தவன் (3 - 60)

ஏனை உயிராம் உலவை யாவும் இடை வேவித்து ஊன் நுகர் அரக்கர் உருமில் சுடு சினத்தின் கான அழலைக் கடிது அவித்து உலகளிப்பான் வந்த வானமழை - தம்மையொழிந்த உயிர்களாகிய வாடிய எல்லாவற்றையும் தமக்கு வேண்டும் போதெல்லாம் வேகவைத்து அவற்றின் இறைச்சியை உண்ணும் இராக்கதர்கள் எனும் இடியைப் போன்று சுட்டெரிக்கின்ற கோபத்தினான காட்டுத்தீயை விரைவில் அழித்து உல

கைக் காக்கும் பொருட்டு வந்த மேகத்தினின்றும் வந்த மழை போன்றவன் (3 - 162)

ஐயம் இல் கிளவியான் - ஐயத்திற்கிடமின்றித் தெளிவாய்ப் பேசும் ஐயன் (4 - 209)

ஐயன் – உயர்ந்தோன் ; தலைவன் (1 - 307 ; 1230 ; 1354 ; 2 - 64 ; 259; 277 ; 279 ; 367 ; 401 ; 437; 466 ; 519 ; 582 ; 616 ; 646 ; 665 ; 673 ; 676 ; 697 ; 730 ; 788 ; 799 ; 843 ; 893 ; 963 ; 999 ; 1001 ; 1132 ; 1153 ; 3 - 59 ; 128 ; 146 ; 169 ; 207 ; 230 ; 263 ; 708 ; 786 ; 793 ; 800 ; 822 ; 973 ; 1015 ; 1028 ; 1157 ; 4 - 101 ; 146 ; 259 ; 333 ; 349 ; 358 ; 365 ; 381 ; 621 ; 713 ; 6 - 584; 603 ; 607 ; 642 ; 681 ; 707 ; 780 ; 886 ; 1172 ; 1557 ; 1622 ; 2362 ; 2446 ; 2596 ; 2604 ; 2620 ; 2651 ; 2797 ; 2836 ; 2846 ; 2855 ; 2857 ; 2871 ; 3295 ; 3639 ; 3657 ; 3672 ; 3770 ; 3850 ; 3898 ; 3973 ; 4044 ; 4047 ; 4052 ; 4054 ; 4062 ; 4064 ; 4077 ; 4084 ; 4086 ; 4126 ; 4137 ; 4172 ; 4180; 4184 ; 4198 ; 4229 ; 4260 ; 4301 ; 4304 ; 4305; 4307 ; 4321)

ஐயுறுஞ் சுடர் மேனியான் (2 - 243 ; ஐ - அழகு)

ஒக்க நின்று உயிர்தொறும் உணர்வை நல்குவான் - உயிர்தொறும் ஒரு தன்மைத்தாக இருந்து அறிவைக் கொடுப்பவன் (2 - 1156)

ஒப்பாரும் இல்லான் (6 - 2137)

ஒப்பு இறையும் பெறலரிய ஒருவன் – சிறிதும் ஒப்பு வேறு பெறமுடியாத பொருள் (3 - 61)

ஒரு சேவகனூர் - ஒப்பற்ற வீரர் (1 - 1244)

ஒரு தனித் தலைவன் (6 - 122)

ஒரு நாயகன் - ஒப்பற்ற தலைவன் (6 - 1737)

ஒருபெருங் குணத்து வள்ளல் - நீங்குதல் இல்லாத நற்குணங்களையுடைய வள்ளல் (5 - 39)

ஒருவன் - ஒப்பற்றவன் ; தனி வீரன் (1 - 302 ; 6-62; 65 ; 3441 ; 3445 ; 3729 ; 3879)

ஒள் தார்முகில் - ஒளி பொருந்திய மாலையணிந்த மேகம் அனையான் (2 - 390)

ஒள்ளியோன் – அறிவுடையோன் (2 – 1193)

ஒன்றாகி மூலத்து உருவம் பலவாகி உணர்வாய் உயிராகிப் பிறிதாகி ஊழி சென்று ஆசு அறுங் காலைத் தன் நிலையதாகித் தீர்ந்து உலகந் தானாகிச் செவ்வே தான் நின்ற நன்றான ஞானத் தனிக்கொழுந்து - ஆதியில் ஒரே பொருளாக இருந்தும் , பின் அவ்வொன்றினின்றும் பல உருவங்களாகப் பிரிந்தும் அறிவினால் உணரக் கூடிய பொருள்களாகியும் அப்பொருட்கு உயிராகவும் விளங்கி இவ்வாறு பலவாகப் பிரிந்து ஊழிக் காலம் கடந்து உலகம் முடியுங்காலத்து எல்லாம் அழிந்து எஞ்சியுள்ள கடவுள் நிலை

ஒன்றே தொண்டு ஒன்றாக முற்றுப் பெற்று அந்நிலையில் தான்படைத்த உலகமெல்லாம் தன்னுள்ளே மறையத்தானே உலகமாகி மீண்டும் சிறப்புடன் விளங்கிய மேலான ஞானத்தின் ஒப்பற்ற கொழுந்து போன்றவன் (3 - 103 ; சரபங்கர் கூற்று)

ஓங்காரப் பொருள் (6 - 4003)

ஓத்தவை உலகத்தெங்கும் உள்ளவை உணர்ந்தான் (2 - 288 ; ஓத்தவை - வேதங்கள்)

ஓதங்கொள் கடலன்றி ஒன்றினோடு ஒன்று ஓவவாப் பூதங்கள்தொறும் உறைவான் (3 - 48)

ஓதாதுணர்வார் - ஓதாமலே எல்லா நூலறிவையும் உணர்ந்தவர் (3 - 884)

ஓது நூல் மல்கு கேள்விய வள்ளல் - கற்றற்குரிய நூலறிவையும் கேள்வியறிவையுமுடைய வள்ளல் (2 - 104)

ஓமராமர் - ஓம் என்னும் பிரணவ மந்திரத்தின் பொருளாகிய அந்த இராமர் ; ஓமங்களால் விளங்கும் வேள்வியும் வேள்விப் பயனுமாயுள்ள இராமபிரான் (3 - 31)

ஓயாத மலரயனே முதலாக உளராகி மாயாத வானவர்க்கும் மற்றொழிந்த மன்னுயிர்க்கும் முதல் தாதை (3 - 53)

ஓர் ஏழைக்காய் பொருப்புவில்லைப் பொடி செய்த

புண்டரியன் (க 1 - 1161 ; ஏழை - பெண், சீதை ; பொருப்பு - மலை)

ஓர் வில்லி - ஒப்பற்ற வில்லையுடையவன் (5 – 647 ; 1116)

ஓவிய உருவன் - சித்திரம்போல் அழகமைந்த உருவ முடையவன் (4 - 355)

ஓவிய எழிலுடை ஒருவன் (1 - 302)

ஓவியத்து எழுத ஒண்ணு உருவத்தான் (4 - 307)

ஓவியம் சுவைகெடப் பொலிவதோர் உருவொடே தேவருந் தொழு கழற் சிறுவன் (1 - 1127)

ஓவியர்க்கு எழுத ஒண்ணு உருவத்தான்(5 - 1128)

கங்கைத் தீம்புனல் நாடன் (1 – 402)

கங்கை நாடுடையவன் (6 - 4014)

கஞ்ச நாள் மலர்க் கையினன் - அப்போதலர்ந்த தாமரை மலர் போன்ற கையை உடையவன் (6 - 4032)

கங்கை நீர் தழுவு நாட்டுக் கொண்டல் (6 - 2351)

கஞ்சம் ஒத்து அலர்ந்த செய்ய கண்ணன் (4 - 58)

கடக் களிறு எனத் தகைய கண்ணன் (6 - 3616 ; எனத்தகைய - என்று சொல்லத் தக்க)

கடல்கிடந்தான் - திருப்பாற் கடலில் கிடந்த திருமாலின் அம்சமானவன் (6 – 3352)

கடல் வண்ணன் (1 - 1223 ; 2 - 168)

கடலின் வந்த தெள்ளிய திருவுந் தெய்வப் பூமியுஞ்

சேருந் தோளான் (6 - 4282 ; திரு - திருமகள் பூமி - பூமிப் பிராட்டி)

கடலேயண்ண வண்ணன் (6 - 3304)

கடவுள் (4 - 145)

கடுத்த கராம் கதுவ நிமிர் கை எடுத்து மெய் கலங்கி உடுத்த திசை யனைத்தினுஞ் சென்று ஒலி கொள்ள உறுதுயரால் அடுத்த பெருந்தனி மூலத்து 'அரும்பரமே! பரமே!' என்று எடுத்து ஒரு வாரணம் அழைப்ப வந்து ஏன் என்றான் (3 - 49 ; கடுத்த கராம் கதுவ - கோபம் மேற் கொண்ட முதலை தன்னைப் பற்றிக்கொள்ள)

கடையிலா மறையின் கண்ணும் ஆரணங் காட்ட மாட்டா அறிவினுக்கறிவாய் நின்றான்-முடிவில் லாத வேதங்களினிடத்தும், அவ்வேதங்களின் முடிவான உபநிடதங்களாலும் இன்னதென்று குறிப்பிட்டுக் காட்ட முடியாத, ஞானத்திற்கே ஓர் அறிவு போன்றவன் (5 - 1121)

கண்ணகல் கவிகை மன்னன் சிறுவன் (4 – 70)

கண்ணன் - அழகிய கண்களையுடையவன் (1 - 1145; 1165 ; 1197 ; 1231 ; 2 - 661 ; 1125 ; 1129 ; 3 - 38 ; 254 ; 954 ; 4 - 58 ; 62 ; 399 ; 5 – 678; 6 – 2 ; 353 ; 363 ; 440 ; 3304 ; 3323 ; 3616 ; 4192 ; 4212)

கண்ணுடை நுதலவன் சிலைவில்லின் நோன்மை

நூறிய புதல்வன் (2 - 852 ; நோன்மை நூறிய - வலிமை யழித்த)

கண் தாமரைபோல் கருஞாயிறு - கண்கள் தாமரை யிதழ்கள் போலும், நிறம் கரிய சூரியன் போன்ற வன் (3 - 97)

கணிவருங் கருணையான் - அளவிடற்கரிய கருணை யுடையவன் (1 - 1295)

கணையுலாம் சிலையினன் - அம்புகள் பயிலப்பெற்ற வில்லினன் (3 - 1183)

கதம் எனும் பொருண்மை இலன் - கோபம் என்னும் தன்மை இல்லாதவன் (4 - 51)

கதிர்கொள் தாமரைக் கண்ணன் - ஒளியை உடைய அல்லது சூரிய ஒளியால் மலரும் தாமரை போன்ற கண்களை உடையவன் (2 - 633)

கமலக் கண்ணன் - தாமரைக் கண்ணன் (3 - 376 ; 421 ; 813 ; 6 - 1623 ; 2363 ; 4087 ; 4192 ; 4212)

கமலக் கண்ணனார் (5 - 394)

கமலச் செங்கண் ஐயன் (1 – 556)

கமலத்தண்ணல் தாதையார் - பிரமன் தந்தை (6 - 441 ; வீடணன் கூற்று)

கமலம் அன்ன கண்ணன் (6 - 3653)

கயல்பொரு கடலுள் வைகுங் கடவுள் (1 - 783 ; மக்கள் கூற்று)

கரத்தொடும் பாழிமாக் கடல் கடைந்துளான் உரத் தொடும், கரனொடும், உருவ ஓங்கிய மரத் தொடுந் துளைத்தவன் - தன் வலியகைகளால் பெரிய கடலைக் கடைந்தவனான வாலியின் மார் புடனே, கரன் எனும் அரக்கனையும், வானத் தை அளாவுமாறு உயர்ந்த மராமரங்கள் ஏழினை யும் தன் அம்பால் துளையிட்டவன் (6 - 467)

கரதலமதனில் நீடு கார்முகம் வளைய வாங்கிச் சரதம் வானவர்கள் துன்பம் தணித்து உலகங்கள் தாங்கும் மரகத மேனிச் செங்கண் வள்ளல் (6 - 4079 ; கார்முகம் - வில் ; சரதம் - உண்மையாக)

கரன்முதல் கருணையற்றவர் கடற்படையொடும் சிரம் உகச்சிலை குனித்து உதவுவான் - கரன் முதலான இரக்கம் அற்ற அரக்கர்களுடைய கடல்போன்ற படை வீரர்களோடும் அவர்கள் தலைகள் சிந்தி விழத்தன் வில்லை வளைத்துக் கொன்று தேவர்களுக்குப்பேருதவி புரிந்தவன் (4 - 87)

கராமலையத் தளர் கைக்கிரி எய்த்தே ‘ அராவணை யில் துயில்வோய்! ’ என அந்நாள் விராவி அளித்தருள் மெய்ப்பொருள் (1 - 309 ; கராம் - முதலை ; மலைய – போரிட ; எய்த்து - அறிந்து; விராவி - நெருங்கிவந்து)

கரிய கொண்டல் (6 - 839)

கரிய செம்மல் (1 - 325 ; 406 ; 552 ; 2 - 154)

கரியவன் (1 - 1132 ; 2 - 585 ; 857 ; 3 - 1107 ; 6 - 4268)

கரியோன் (6 - 1159)

கருங்கடலிற் கண் வளர்ந்தோன் (3 - 101;இந்திரன் கூற்று)

கருங்கோளரி - கருஞ்சிங்கம் (6 - 2981)

கரு ஞாயிறு (3 - 97)

கருணாகரன் - அருளுக்கு இருப்பிடமானவன் (6 - 2618)

கருணைக் கடல் (1 - 1334 ; 6 - 3688)

கருணைக் கொண்டல் - கருணை பொழியும் மேகம் போன்றவன் (6 - 650 ; 914)

கருணையங்கடல் (6 - 535 ; 711 ; 839 ; 3302 ; 4317)

கருணையார்கலி - கருணைக்கடல் (2 -1071)

கருணையால் அழிழ்தங்காலும் முற்றுறு கலையிற்குறைய முழுமதி முகத்தினன் (6 - 459)

கருணையால் பிறந்தான் - உயிர்கள் மீது வைத்த பெருங் கருணை காரணமாக அவதரித்தவன் (6 - 2574)

கருணையான் - அருள் மிக்கவன் (6 - 4177)

கருணையின் கடல் அனையான் (4 - 51)

கருணையின் நிலையம் அன்னான் (6 - 914)

கருணையின் நெறியினன் - அருள் நெறியிலேயே தன் வாழ்க்கையை நடத்துபவன் (4 - 82)

கருணையின் மலர்ந்த கண்ணன் (2 - 666)

கருணையுள்ளத்தான் (6 - 3989)

கருணையோன் (4 - 57)

கருணை வள்ளல் (4 - 309 ; 6 - 443)

கருந்தடங் கண்ணினன் (6 - 4265)

கருந்தனி முகில் - கரிய ஒப்பற்ற மேகம் போன்றவன் (5 - 507)

கரு ஞாயிறு போல்பவர் - கரிய திருமேனி கொண்ட ஞாயிறு போல்பவர் (1 - 1240)

கருநிறக் கமலக் கண்ணன் (3 - 421)

கருமலை அனைய காட்சியன் (3 - 191)

கருமாமுகில் போல்பவர் (1 - 1244)

கருமுகில் - கருமேகம் போன்றவன் (2 - 614)

கருமேகம் நெடுங்கடல் கா அனையான் (5 - 491)

கல்விக்கு நிமிர்ந்த கீர்த்திக் காகுத்தன் - எல்லா வகைக் கல்விகட்கும் எட்ட முடியாது உயர்ந்த புகழினை யுடைய இராமன் (6 - 2822)

கலைகளின் பெருங்கடல் கடந்த வில்லினன் - கலைகளாகிய பெருங்கடல்களைக் கற்றுத் தேர்ந்த வில்லை யுடையவன் (3 - 469)

கவளயானை அன்னன் - கவளமாக உணவைப் பெறும் யானை போன்றவன் (4 - 18)

கவியமை கீர்த்திக் காளை - புலவர்கள் தம் பாடல்களில் பாராட்டிக் கூறும் புகழ்பெற்ற காளை (2 - 125)

கவியையுங் கடக்கும் வென்றிக் காகுத்தன் - கவிகளாலும் கற்பனை செய்ய முடியாத வெற்றிப் பெருமையுடைய இராமபிரான் (3 - 873)

கழல் வேந்து (2 - 1)

கள்ளமாய் உலகங்கொள்ளும் கருணையான் (6 - 601)

கள்ளமாய வாழ்வெல்லாம் விள்ள ஞானம் வீசு தாள்வள்ளல் - திருட்டுத் தனமும் வஞ்சகமும் உடைய பிறவியெல்லாம் நீங்க ஞானத்தை வீசும் திருப்பாதங்களைப் பெற்றுள்ள வள்ளல் (3-63)

கள் அவிழ் கோதையான் - தேன் சொட்டும் மலர் மாலை உடையவன் (2 – 128)

களன் அமர் கமலவேலிக் கோசலக் காவலோன் (6 – 4312)

களிறு – ஆண்யானை ஒப்பவன் (6 – 2620)

கற்பகமனைய வள்ளல் (6 – 2831)

கற்றை வார் சடையினான் கைக்கொளுந் தனு இறக் கொற்ற நீள் புயம் நிமிர்த்தருளும் குரிசில் (1 - 1130)

கற்றை வெண்ணிலவு நீக்கிக் கருணையால் அமுதம் காலும் முற்றுறு கலையிற்றுய முழுமதி முகத்தினான் (6 - 439)

கறங்கு அடல் திகிரிப் படி காத்தவர் பிறங்கடைப் பெரியோன் - சுற்றும் வலிய ஆணைச் சக்கரத்

தால் பூமி முழுதும் ஆண்ட சூரிய குலத்தரசர்களின் வழித் தோன்றலாகிய பெருமையன் (1 - 397)

கறுத்த மணிகண்டர் கடவுட்சிலை கரத்தால் இறுத்தவன் – நீலகண்டரின் தெய்வவில்லைக்கையால் எடுத்து வளைத்து ஒடித்தவன் (3 - 532)

கனத்தின் நிறத்தான் - மேக வண்ணன் (6 – 2612)

கனப்படை வரிசிலைக் காளை - வலிய ஆயுதமாகிய கட்டமைந்த வில்லையுடைய காளை போன்றவன் (3 - 192)

கனைகடல் நெடுநிலங் காவல் ஆழியான் வனை கழல் தயரதன் மைந்தன் (3 - 193)

கனையும் வார்கழல் வீரன் - ஒலிக்கும் வீரக் கழல் அணிந்த வீரன் (3 - 1166)

காகுத்தன் - ககுத்த வம்சத்தில் தோன்றியவன் (க 1 - 410 ; 540 ; 3 – 452 ; 845 ; 873 ; 5 - 295; 322 ; 6 - 1706 ; 2782 ; 2822)

காசில் கொற்றத்து இராமன் - குற்றமற்ற வெற்றியுடைய இராமன் (1 - 4)

காசுலாங் கனகப் பைம்பூண் காகுத்தன்-இரத்தினங்களோடு விளங்கும் பசும் பொன்னாலாகிய ஆபரணங்களையணிந்த இராமபிரான் (1 – 410)

காசையின் கரியவன் - காயாமலர் போலும் கரிய நிறமுடையவன் (2 - 971)

காண்பார்க்கும் காணப்படும் பொருட்கும் கண்ணு கிப் பூண்பான் போல் நிற்பவன் - காண்பார்க் கும் காணப்படும் பொருட்கும் இருப்பிடமாகி எல்லாப் பொருள்களையும் தாங்குபவன்போல் நிற்பவன் (3 - 1174)

காதியார் சேய்தரும் கடவுள் வெம்படையினன் - காதி என்னும் அரசரின் குமாரரான கௌசிக முனி கொடுத்தருளிய தெய்வத்தன்மை வாய்ந்த கொடிய படைக்கலங்களை உடையவன் (4 - 82)

கார் எனக் கரிய கமலக் கண்ணன் (3 - 813)

கார் ஒத்தான் - மேகத்தை ஒப்பவன் (6 - 3772)

கார்க் குன்றம் அனையான் - கரிய மலையை ஒத்தவன் (6 - 3838)

கார்க் கோல மேனியான் - நீலமேக நிறமுடையவன் (6 - 1359)

கார் குலாம் நிறத்தான் (2 - 665)

கார் கொண்ட மேனியான் (2 - 591)

கார்ப் பெரு மேனியக் கண்ணன் (2 – 1125)

கார் மழை வண்ணன் - கரிய மேகம் போன்ற நிறத்த வன் (6 - 3761)

கார் மின்னோடு நிலாயதென நூல் கஞலும் மார்பன் - மேகம் மின்னலோடு பொருந்தியது போன்று முப்புரிநூல் விளங்கும் மார்பினை யுடையவன் (2 - 283)

கார்முகில் வண்ணன் (6 - 2453)

கார் மேக வண்ணன் (5 - 57)

கார் வானம் ஒப்பான் (2 - 442)

காரை ஒத்தவன் (2 - 530)

காலமாக் குணித்த நுண்மைக் கணக்கையுங் கடந்து நின்ற மூலமாய் முடிவிலாத மூர்த்தி – காலம் என்று அளவு படுத்திக் கூறும் நுட்பமான கணக்கையும் தாண்டி நின்ற மூலப்பொருளாய், இறுதியில்லாத நிலைத்த பரம்பொருள் (2 - 278; மக்கள் கூற்று)

காவியின் மலர், காயா, கடல், மழை அனையான் (2 - 678)

காவியுங் கருங்குவளையும் நெய்தலுங் காயாம் பூவையும் பொரு வானவன் (4 - 482)

காவியுங் குவளையுங் கடிகொள் கா யாவும் ஒத்து ஓவியஞ் சுவைகெடப் பொலிவதோர் உருவொடே தேவருந் தொழுகழற் சிறுவன் (1 - 1127 ; கடிகொள் கா - நிறத்திற் சிறப்புக் கொண்ட சோலை)

காவியும் ஒளித்ரு கமலமும் எனவே ஓவிய எழிலுடை ஒருவன் (1 - 302)

காளை (1 - 385 ; 2 - 1008 ; 6 - 4272)

காளை மைந்தன் - காளை போன்ற வலிமையுடையவன் (3 – 21)

காளை வீரன் (1 - 453)

கான் ஆள நிலமகளைக் கைவிட்டுப் போனான் - காட்டை யாள்வதற்காகப் புவியரசைக் கை விட்டுப் போனவன் (6 – 4109)

கான் உயிர்த்த தார் இராமன் – நறுமணங் கமழும் மலர் மாலையுடைய இராமன் (5 - 296)

கிரியின் தோற்றத்தான் (3 - 235)

கிளர்மணி முழவுத் தோளான் - நவ மணிகளால் இயன்ற பூண்களைப் புனைந்த, மத்தளம் போன்ற திரண்ட தோள்களையுடையவன் (6 - 4311)

குஞ்சரம் அனைய வீரன் (3 - 285)

குணக் குன்று (6 – 4129)

குணக்கோ – குணக்குன்று (2 – 416)

குணங்களால் உயர்ந்த வள்ளல் (1 - 555)

குப்புறற்கு அரிய மாக் குன்றை வென்று உயர் பெருந் தோளவன் - தாண்டிச் செல்வதற்கு அருமையான பெரிய மலையை வென்று பின்னிடச் செய்து உயர்ந்து விளங்குகிற பெரிய தோள்களையுடையவன் (3 - 240)

குமரன் - சக்கரவர்த்தியின் திருமகன் (1 – 614 ; 1355 ; 2 - 408 ; 3 - 2 ; 3 ; 4 ; 1029)

குமிழ் முலைச் சீதை கொண்கன் (2 - 254)

குரக்கின் முதல் நாயகனை ஆளுடைய கோள் உழுவை - குரங்குகட்கு முதன்மைத் தலைவனை

சுக்கிரீவனை அடிமையாக உடைய வலிமை வாய்ந்த புலிபோன்றவன் (6 - 336)

குரிசில் (1 - 784 ; 1130 ; 1370 ; 2 - 368 ; 554 ; 3-44; 126 ; 6 - 4076)

குருதி கொப்பளிக்கும் வேலான் (6 – 4246)

குரு நிறத்து ஒரு தனிக் கொண்டலாம் எனத், திருவுறப் பொலியுமோர் செல்வன் - சிறந்த கரு நிறத்தோடு கூடிய ஓர் ஒப்பற்ற நீருண்ட மேகம் போல, அழகு நன்கு அமைய விளங்கும் செல்வன் (5 - 392)

குலங் கடிந்தான் வலி கொண்ட கொண்டல் - அரச குலத்தை ஒழித்த பரசுராமனது தவம் முதலிய வலிமையைத் தன்னிடம் பெற்றவன் (2 - 485)

குற்றம் வீய்ந்த குணத்தின் கோமகன் - குற்றம் என்பதில்லாத நற்குணங்களையுடைய தலைவன் (3 - 810)

குன்றம் அன்னான் (1 - 407)

குன்றம் போன்று உயர்தோளில் கொற்றவில் ஒன்று தாங்கினான் (1 - 334)

குன்றினும் உயர்ந்த தோளான் (2 - 298)

குன்று அன்ன தோளவன் (2 - 464)

குன்று இணைத்து அன்ன உயர் குவவுத் தோளினான் - இரண்டு குன்றுகளைச் சேர்த்தாற்போன்று உயர்ந்து திரண்ட இரண்டு தோள்களையுடையவன் (6 - 4217)

குன்று இவர் தோளினன் - மலைபோல் உயர்ந்த தோள்களையுடையவன் (2 - 267 ; 4 - 220)

குன்று உறழ் தோளினன் - மலைபோல் உயர்ந்த தோள்களையுடையவன் (4 - 77)

குன்று உறழ் வரிசிலைக் குரிசில் (6 - 4163)

குன்று என உயர்ந்த தோளான் (6 - 607)

குன்றெடுத்த போலுங் குவவுத் தோட் கோளரி (2 - 1142)

குனியும் வார்சிலைக் குரிசில் (6 - 4076 ; குனியும் - வளைந்த)

குனிவரு திண்சிலை குமரன் - வளைக்கக் கூடிய வலிய விற்களையுடைய அரச குமாரன் (3 - 118)

கூட்டு ஒருவரையும் வேண்டாக் கொற்றவன் (4 - 310 ; கூட்டு - துணை)

கூராழி அங்கை உடையான் (6 - 2197)

கூற்று உறழ் வேலினன் - தீயோர்க்கு யமனைப் போன்ற வேலையுடையவன் (1 - 398)

கூனும் சிறிய கோத்தாயுங் கொடுமையிழைப்பக் கோல் துறந்து கானுங் கடலுங் கடந்து இமையோர்கள் இடுக்கண் தீர்த்த கழல் வேந்து (2 - 1)

கேடிலாதான் - என்றும் அழிவில்லாதவன் (6-2162

கேள்வியால் செவிகள் முற்றும் தோட்டவர் உணர்வின் உண்ணும் அமிழ்தத்தின் சுவையாய் நின்

ருன் - ஆன்ருேரிடம் கேட்ட நல்ல அறிவுரைகளால் தம் காதுகள் நன்கு துளைக்கப் பெற்ற பெரியோர்கள் தம் உணர்ச்சியால் நுகரும் ஞானமாகிய அமிர்தத்தின் சுவையின் வடிவாய் நின்ற பரம்பொருள் (3 - 1194)

கைக்களிறு அனையவன் - துதிக்கையுடைய களிறு போன்றவன் (3 - 485)

கைக்குரல் வரி வில்லான் – கையில் பொருந்திய கட்டமைந்த வில்லையுடையவன் (5 - 564)

கைகொள் கால வேலினன் - கையில் ஏந்திய யமன் போன்ற கொடிய வேலையுடையவன் (3 - 73)

கைச்சிலையன் - கையில் வில்லையுடையவன் (4 - 47)

கையுங் கால்களும் நயனமுங் கமலமே யனைய பொய் யிலாதவன் (6 - 1169)

கைவரை எனத் தகைய காளை - யானை என்று கூறத் தக்க காளை போன்றவன் (1 - 385)

கைவில் ஏந்திச், சூலமும் திகிரி சங்கும் கரகமுந் துறந்து தொல்லை ஆலமும் மலரும் வெள்ளிப் பொருப்பும் விட்டு அயோத்தி வந்தான் - கையில் ஒரு வில்லை ஏந்திக்கொண்டு, சிவபிரானுக உள்ள நிலையில் ஏந்தியுள்ள சூலத்தையும், திருமாலாய் உள்ள நிலையில் ஏந்தியுள்ள சக்கரம், சங்கு என்பவற்றையும், பிரமனுய் உள்ள நிலையில் ஏந்தியுள்ள கமண்டலத்தையும் விட்டு நீங்கி அம்மும்மூர்த்திகளாய் நின்றபோது அவரவர் இருப்பிடங்களாய்க்

கொண்ட ஆலிலையையும், தாமரை மலரையும், கயிலை மலையையும் விட்டு அயோத்தியில் இராமனாக அவதரித்தவன் (5 - 1122)

கொண்டல் - மேகம் ஒத்தவன் (1 - 708 ; 803 ; 2 - 485 ; 1213 ; 6 – 2351 ; 4039)

கொண்டல் ஒத்தவன் (6 - 1541)

கொண்டல் ஒப்பான் (5 - 573)

கொண்டல் நிறத்தினன் - நீருண்ட மேக நிறத்தினன் (3 – 540)

கொண்டலிற் பொலிதரு கோலத்தான் (6 - 1483)

கொய்குல மலர் மார்பன் - கொய்த சிறந்த மலர்களாலான மாலையணிந்த மார்பன் (2 - 726)

கொய்திறச் சடையின் கற்றைக் கொந்தளக்கோலக் கொண்டல் – கொய்யும் இயல்பினதான சடையின் தொகுதியான மயிர் முடியை உடைய அழகிய மேகம் நிகர்த்தவன் (6 - 1375)

கொல் ஆழி நீத்து அங்கு ஓர் குனி வயிரச் சிலை கொண்ட கொண்டல் - தீயோரை அழிக்கும் சக்கராயுதத்தை நீக்கி அவ்விடத்தில் வளைந்ததும் உறுதியுடையதுமானதொரு வில்லைத் தாங்கிய மேகம் போன்றவன் (1 - 708)

கொற்றக் குரிசில் (2 - 1144)

கொற்றப் பொன்திணி வயிரப் பைம்பூண் புரவலன் - வெற்றியோடு கூடியவனும், பசிய பொன்னில்

பதித்த வயிரத்தால் செய்யப்பட்ட ஆபரணங்கள் அணிந்தவனுமான அரசன் (4 - 378)

கொற்ற வள்ளல் - வெற்றி பொருந்திய வள்ளல் (6 - 3453)

கொற்றவன் - வெற்றி வீரன் (2 - 528 ; 660 ; 3-992; 4 - 354 ; 357 ; 5 - 523 ; 621 ; 6 - 586 ; 749 ; 1494 ; 1542 ; 1547 ; 1655 ; 1772 ; 3258 ; 3656 ; 3751)

கொற்றவன் மைந்தன் - சக்கரவர்த்தி குமரன் (1 – 1328 ; 3 - 785)

கொற்றவனுர் (6 - 1655)

கொற்ற வில்லி - வெற்றி பொருந்திய வில் வீரன் (6 - 3306)

கொற்ற வீரன் (6 - 955)

கொற்ற வேந்து (6 - 406)

கோ - தலைவன் (2 - 1026 ; 3 - 360 ; 5 - 462)

கோக்குமரன் - அரசிளங்குமரன் (1 - 357)

கோசலக் காவலோன் (6 - 4312)

கோசலை குரிசில் - (1 - 469)

கோட்டு வார்சிலைக் குரிசில் - வளைக்கின்ற நீண்ட வில்லினை ஏந்திய பெருந்தகை (6 - 4026)

கோடு பற்றிய கொற்றவன் - சங்கினைத் தாங்கிய வெற்றி வீரன் (4 - 338)

கோதை சூழ் குஞ்சிக் குமரன் (1 - 1135)

கோதை வரிவில் குமரன் (2 - 408 ; கோதை - முன்னங்கையிலணியும் தோற்கருவி)

கோதை வெஞ்சிலையவன் (2 - 974)

கோதை வேலவன் - மாலையணிந்த வேலையுடையவன் (2 - 532)

கோமகன் - தலைவன் ; சக்கரவர்த்தி குமாரன் (1 - 411 ; 2 - 986 ; 3 - 253 ; 810 ; 4 - 665 ; 5 - 453)

கோமான் (5 - 682 ; 6 - 1837)

கோல மேனியன் (4 - 58)

கோளரி - சிங்கம் (2 - 1142)

கோளரி எனப் பொலி வீரன் (6 - 4070)

கோன் (2 - 1168 ; 5 - 519 ; 520 ; 600 ; 601 ; 648 ; 6 - 1607 ; 1637 ; 3932 ; 4153 ; 4194 ; 4197)

சக்கரத்து அண்ணல் (6 - 4214)

சங்கினொடு சக்கரமுடைத் தனிமுதல், பேர் அங்கண் அரசு (1 - 1225)

சங்கு அடுத்த தனிக்கடல் மேனியான் - சங்குகள் பொருந்திய ஒப்பற்ற கடல் போன்ற நீலநிறத் திருமேனியான் (3 - 807)

சங்கு உறை கரத்து ஒரு தனிச்சிலை தரித்தான் (1 - 384)

சதமன் அஞ்சுறு நிலையன் - இந்திரனும் கண்டு அஞ்சும் தோற்றப் பொலிவை உடையவன் (4 - 51)

சதுமுகத்தவனைத் தந்தான் (4 - 4310)

சதுமுகன் தாதை (3 - 789)

சிகரச் செவ்விச் சுந்தரத் தோளினான் - மலைச் சிகரங்கள் போன்று சிறப்பமைந்த அழகிய தோள்களை யுடையவன் (3 - 794)

சிங்கவேறு அனைய வீரன் (2 – 664 ; 6 - 2828)

சித்திரக் குனிசிலைக் குமரன் - அழகிய வளைந்த வில்லை ஏந்திய சக்கரவர்த்தி திருமகன் (3 – 2)

சிரத்தின் நான்மறை இறைஞ்சவுந் தேடவுஞ் சேயோன் - நான்கு வேதங்களாலும், முடியா யுள்ள உபநிடதங்களினாலும் வணங்குவதற்கும் தேடுவதற்கும் இயலாதவாறு அப்பாற்பட்ட பரம்பொருள் (6 - 3763)

சிரித்த பங்கயம் ஒத்த செங்கண் இராமன் (2 - 237)

சிலை குலாந் தோளினன் (1 - 448)

சிலை பிடித்தான் - வில்லைக் கையிற் பிடித்தவன் (3 - 451)

சிலையவன் (6 - 2129)

சிலையிராகவன் (4 – 677)

சிலைவலாளன் (6 - 3575)

சிலை வலி வீரன் - வில்வலிமை வாய்ந்த வீரன் (3 - 190)

சிலை வீரன் (5 - 631)

சிவனும் மலர்த்திசை முகனும் திருமாலும் தெறு

குலிசத்தவனும் எழுந்து ஒன்ருகி நின்றன்ன உருவோன் (3 - 350)

சிறக்குஞ் செல்வன் (6 – 3792)

சிறிய தாய் சொன்ன திருமொழி சென்னியிற் சூடி நெறியினின்ற நாயகன் (5 - 1020)

சினப்படை வீரன் - கொடிய ஆயுதங்களையுடைய - வீரன் (3 – 192)

(சீதைக்கு) உயிரென உரியோன் (5 – 472)

சீதை கேள்வன் (2 – 197 ; 3 - 210)

சீதை கொண்கன் (2 - 61 ; 254)

சீதை தன் கோன் (4 - 958)

சீதை நாயகன் (6 - 933)

சீதை மணவாளன் (2 - 402)

(சீதையின்) உயிர் ஒப்பான் (5 – 735)

சீரியோன் - நற்குணமுடையவன் (3 – 282)

சீலமுந் தருமமுஞ் சிதைவில் செய்கையான் (2 - 1148)

சுடர் போல் ஒளிர் வெற்றி வீரன் (6 – 748)

சுடர் மேனியான் (2 - 243)

சுடர் விற்கை ஆரியன் (4 - 980)

சுடர் வேலவன் - ஒளி விடுகின்ற வேலாயுத முடையவன் (6 - 1114)

சுடரொளி ஒருவன் - சோதி வடிவினனான ஒப்பற்றவன் (6 – 3726)

சுடரோன் மகன் - சூரிய குலத் தோன்றல் (6-3833)

சுந்தரத் தனு வல்லான் (4 - 533)

சுந்தரத் திரள்தோள் அமைந்த மைந்தன் (2 - 74)

சுந்தரத் தோளன் (3 - 794 ; 1001 ; 5 - 644 ; 6-1407)

சுந்தரத் தோளினன் (3 - 794 ; 6 - 2353)

சுந்தரப் பெருந் தோளினன் (6 - 4011)

சுந்தரப் பொன் தோளான் (6 - 1558)

சுந்தர வில்லி - அழகிய வில்லாளன் (1 – 466 ; 6 – 2744)

சுந்தரன் (4 - 415 ; 3832)

சுருங்கிடை துணைவன் (5 – 585)

சுருதி ஆளும் நாயகன் (6 - 1183)

சுருதி ஞானத்தின் கொழுந்து – வேதங்களால் உணரப் பெறும் தத்துவ உணர்ச்சியின் நுண்ணிய பாகம் (6 - 3978)

சுருதி நாயகன் (5 - 338)

சுருதி நூல் வல்லான் - வேத நூல் வல்லோன் (4 – 204)

சுருதி மூர்த்தி - வேதங்களால் மேலாகப் புகழப்படுபவன் (6 - 598)

சுருதியன்ன சேவகன் - வேதம் போன்ற வீரன் (5 - 20)

சுருதியாளும் நாயகன் (6 - 1183)

சூரியன் மரபில் தோன்றிச் சுடர் நெடு நேமி
ஆண்ட ஆரியன் சிறுவன் (4 - 69)

சூரியன் மருமான் - கதிரவன் வழித் தோன்றல்
(6 - 4075)

சூலாயின மழையன்னவன் - கருக்கொண்ட மேகம்
போன்ற திருமேனி கொண்டவன் (6 - 3695)

சூழி மால் யானையார் தொழுகழல் தயரதன்
பாழி ஆர் உலகு எலாம் ஒருவழிப் படாவாழ்
ஆழியான் மைந்தன் - முகபடாம் அணிந்த
பெரிய யானையை உடைய அரசர்கள் வந்து
வணங்கும் வீரக் கழலையுடைய தசரதனை
பெரியவாய் விளங்கும் உலகங்கள் யாவும்
ஒப்பற்ற தன் ஆணை வழியே அடங்கி நடக்க
ஆட்சி செய்து வாழ்ந்து வந்த சக்கரவர்த்தி
குமாரன் (4 – 81)

செங்கண் ஆழியான் (4 - 72)

செங்கண் ஐயன் (6 - 4229)

செங்கண் நாயகன் (2 - 728 ; 6 - 2559)

செங்கண் மால் (1 - 99 ; 6 - 388 ; 1235)

செங்கண் வள்ளல் (6 - 4079)

செங்கண் வில்கரத்து இராமன் (4 - 152)

செங்கண் வீரன் (3 - 191)

செங்கண் வேத நாயகன் (6 - 3946)

செங்கண்ணவன் (6 - 2489)

செங்கண்புண்டரீகன் – தாமரைச் செங்கண்ணன் (6 - 2629)

செங்கணன் - செந்தாமரை போன்ற சிவந்த விழிகளை யுடையவன் (2 – 526 ; 1200 ; 5 - 1128 ; 1258 ; 6 - 1514 ; 2740)

செங்கையின் ஆழியான் – சிவந்த கைகளையுடைய திருமால் (3 - 304)

செஞ்சிலை உரவோன் (6 – 2823)

செஞ்சேவகனார் - சிறந்த வீரர் (3 - 882)

செந்தாமரைக் கண்ணன் (5 – 577)

செந்தாமரைக் கண்ணொடுஞ் செங்கனி வாயினொடும் சந்தார் தடந்தோளொடும் தாழ்தடக்கைகளோடும் அந்தார் அகலத்தொடும் அஞ்சனக் குன்றம் என்ன வந்தான் (3 - 702)

செப்பருங் குணத்து இராமன் (2 - 295)

செம்மணி மகுடம் நீக்கித் திருவடி புனைந்த செல்வன் தம்முனார் - பரதனின் அண்ணன் (6 - 441)

செம்மல் (1 - 426 ; 2 - 154 ; 276 ; 467 ; 1210 ; 3 - 538 ; 1152 ; 4 - 157 ; 810 ; 6 - 433)

செய்ய கண்ணன் (4 - 58)

செல்லுஞ் சொல் வல்லான் (2 - 433)

செல்வன் (2 - 555 ; 3 - 146 ; 4 – 100 ; 5 - 1286)

செவ்விய குரிசில் (2 - 554)

செவ்வியோன் - மேன்மைக் குணமுடையோன் (3 - 1012)

செவ்வேலவன் - சிறந்த வேல் ஏந்தியவன் (3 – 75)

செவியுறு கேள்விச் செல்வன் - ஆன்றோர்கள்பால் கேட்டுத் தெளிந்த அறிவையுடையவன் (4-347)

செறிகழல் வீரன் - நெருங்கிய வீரக் கழல் அணிந்த வீரன் (3 - 186)

செறுக்கும் வன்திறல் திரிபுரந் தீயெழச் சினவிக் கறுக்கும் வெஞ்சினக் காலன்றன் காலமுங் காலால் அறுக்கும் புங்கவன் ஆண்டபேர் ஆடகத் தனிவில் இறுக்கும் தன்மைய மாயவன் (4 - 153)

சேவகன் (2 - 79 ; 249 ; 270 ; 668 ; 1170 ; 3 - 32 ; 5 - 20 ; 31 ; 167 ; 171 ; 673 ; 688 ; 1099 ; 1255 ; 6 - 919 ; 1156 ; 1171 ; 1194 ; 1534 ; 1535 ; 1546 ; 1553 ; 2354 ; 2832 ; 2835 ; 3307 ; 3813 ; 4101)

சேவகனூர் (1 - 1244 ; 3 - 882)

சேவடிக் கரிய செம்மல் (1 - 552)

சொல்வல்லான் (2 - 433)

சொன்ன நாள் மறை முடிவினில் துணிந்த மெய்த் துணிவு (6 - 3991)

சோதி - ஒளிவடிவினன் (3 - 1175)

சோதிச் சுடர்ப் பிழம்பு (3 - 1175)

சோதி வள்ளல் (6 - 600)

ஞால நாயகன் (5 - 1251)

ஞாலமாளி - பூமியை ஆள்பவன் (6 - 3327)

ஞால முடையான் - உலகநாதன் (6 - 2313)

ஞால முண்டவன் (6 - 1326 ; வீடணன் கூற்று)

ஞாலமும் விசும்புங் காத்த நானிலக் கிழவன் மைந்தன் (6 - 2395 ; நானிலக் கிழவன் - தசரதன்)

ஞானத் தனிக் கொழுந்து - ஞானத்தின் ஒப்பற்ற கொழுந்து போன்றவன் (3 - 103)

ஞான நாதன் - தத்துவ ஞானத்தால் உணரப்படும் தலைவன் (6 - 4074)

ஞான நாயகன் (4 - 474 ; 6 - 682 ; 2577)

ஞான மூர்த்தி (6 - 4207)

தக்கோன் - மேலோன் (4 356 ; 6 - 764)

தசரதன் சிறுவன் (6 – 757)

தசரதன் மதலை (1 - 201)

தடங்கணன் – பெரிய கண்களையுடையவன் (6 - 4166)

தடம்பெருங் கண்ணன் (4 - 202)

தடமலர்க் கண்ணன் - குளத்தில் மலரும் செந்தாமரை போன்ற விழியினன் (6 - 362)

தண்டலை மருத வைப்பின் கங்கை நீர் தழுவு நாட்டுக் கொண்டல் (6 - 2351 ; தண்டலை மருதவைப்பின் - சோலைகள் நிறைந்தமருத நிலத்தைத் தன்னிடங் கொண்ட)

ததையும் மலர்த்தார் அண்ணல் (1 – 704 ; ததையும் – நெருங்கிய)

தபோதனர் செல்கதி - தவத்தினர் தேடிச்செல்லும் பரமபதம் (2 – 631)

தயரத ராமன் (1 - 549 ; 3 - 543 ; 6 -4269 ; 4286)

தயரதன் எனும் பெயர்த் தனிச்செல் நேமியான் புயல் பொழி தடக்கையான் புதல்வன் (1 - 799)

தயரதன் காதலன் (3 - 365)

தயரதன் சிறுவன் (6 - 1592)

தயரதன் சேய் (3 - 523)

தயரதன் தொல் குலத் தனயன் (3 - 843)

தயரதன் தன் புதல்வன் (1 - 711)

தயரதன் புதல்வன் (1 - 783 ; 4 - 712)

தயரதன் மகன் (6 - 5742)

(தயரதன்)மணிப் புதல்வன் - நீலமணி போலும் நிற முடையவன் (2 - 49)

தயாமுதல் - கருணைக்கு அடிப்படையானவன் (2 - 1130)

தயிர் தோய் பிரை எனலாம் வகை இவ்வுலகனைத் தும் கலந்தேறிய தலைவன் - தயிர் தோய்தற் குக் காரணமான பிரைமோர் என்று சொல்லத் தகும் வகையில் இந்த உலகப்பொருள் யாவற் றிலும் கலந்திருக்கக் கூடிய தலைவன் (6 - 3010)

தராதல வேந்தன் மைந்தன் (6 - 2376)

தராவலய நேமியுழவன் தயரதப்பேர்ப் பராவரு நலத் தொருவன் மைந்தன் (3 – 610 ; பராவரு

நலம் - யாவரும் புகழ்ந்து பாராட்டும் சிறப்பு)

தருணங்கொள் பேரொளியான் - இளமை பொருந்திய பெருந்தேசு உடையவன் (3 - 201)

தருமத்தின் தனி மூர்த்தி - தருமவடிவான ஒப்பற்ற மூர்த்தி (3 - 53)

தருமத்துக்குறுதி பார்ப்பான் (2 - 590)

தரும நீரன் - தரும நெறியே நடப்பவன் (3 - 365)

தருமம் அன்னவன் (2 - 65)

தருமம் நோக்கிய தோன்றல் (2 - 1164)

தருமமாவான் (4 - 55)

தருமமும் ஞானமும் தவமும் வேலியாய் மருவரும் பெருமையும் பொறையும் வாயிலாய் அருள்நெறி எய்திக் கருணையங் கோயிலில் இருந்த கண்ணன் (6 – 353)

தருமமும் தகவும் இவை தனம் எனும் தகையான் (4 - 50 ; தகவு - நன்னடை)

தருமமூர்த்தி - தருமமே ஒருருவாக வந்தது போன்றவன் (6 - 324 ; 2211)

தருமமே உருவமாய் நின்றவன் (4 - 353)

தருமன் (2 - 725)

தருமன் அஞ்சுறு சரிதன் - தரும தேவனும் கண்டு அஞ்சும்படியான ஒழுக்க மேம்பாடுடையவன் (4 - 51)

தரையளித்த தனிநேமித் தயரதன்றன் புதல்வன் (3 - 354)

தலைமகன் (1 - 811 ; 6 - 3857)

தலைவன் (6 – 521 ; 3010 ; 3952)

தவத்தின் மிக்கோன் - தவத்தால் தலைசிறந்தவன் (6 - 613)

தவமெய்யன் - தவ வேடம் பூண்ட உருவத்தினன் (4 - 47)

தவிரா ஞானம் தொடர்ந்த சுடர் (6 - 2191)

தழல் வண்ணன் தடக்கை வில்லைத் தோளால் இறுத்தான் (3 - 920)

தளித்தனது அனைய மேனி, தாமரை கெழுமு செந்தேன் துளித்தன அனைய என்னத் துள்ளி சோர் வெள்ளக் கண்ணன் - மேகத்தினது போன்ற திருமேனியையும், (சீதை பிரிவால்) தாமரை மலரிற் சிறந்து விளங்கும் செந்தேன் துளிக்கப் பெற்றன போன்றவென்று சொல்லத் தக்க துளிகள் சிந்தும் நீர்ப் பெருக்கையுடைய கண்களையுமுடையவன் (3 - 1027)

தற்பரன்-எல்லாப் பொருளிலும் மிக்கோன் (6-2721)

தன் உளப் பெருந்தகைமை தன்னால் அளப்பரும் உலகம் யாவும் அளித்துக் காத்தழிக்கின்றான் (6 - 3567 ; தன் உளப் பெருந்தகைமை தன்னால் - தன் மனத்தில் பெருந் தகுதி கொண்டு ; மனச் சங்கற்பத்தினால்)

தன் புகழ் தன்னினும் பெரிய தன்மையான் - தன்

ளைக் காட்டிலும் தன் புகழில் பெரியவன் ; முற்றிலும் புகழவியலாதவன் (2 - 1209)

தன் பெருங்குணத்தால் தன்னைத் தானலது ஒப்பிலாதான் (4 - 52)

தன் பொற்பாதம் ஏத்துவார் பிறப்பறுப்பான் (5 - 1123)

தன்போல் புகழினை நோக்கும் தோளான் - தன் உயிரைப்போலத் தன் கீர்த்தியைக் கருதும் தோள்களை உடையவன் (6 - 2160)

தன்போல் மாறு இலா வீரன் - தனக்கு நிகராக எவருமில்லாத வீரன் (6 -4240)

தன்மேனி முற்றும் காதலித்த உருவாகி அறம் வளர்க்கும் கண்ணாளன் (6 - 3841)

தன்றுணை ஒருவருந் தன்னில் வேறிலான் - தனக்கு நிகர் தானேயல்லாமல் வேறு ஒருவருமில்லாதவன் (4 - 260)

தன்றுணைத் தம்பி தன்மேல் துணைவர்மேல் தாழ்ந்த அன்பான் (6 - 2177 ; துணைத்தம்பி - இலக்குவன் ; துணைவர் - வானரவீரர்)

தன்னலது ஒருபொருள் தனக்கு மேல் இலான் (3 - 1115)

தன்னாலும் அளப்பருந் தான் (2 - 437)

தன்னிகர் இலாதான் (3 - 991)

தன்னிகர் வீரன் - தனக்குத்தானே நிகரான வீரன் (3 - 475)

தன்னின் முன்னிய பொருள் இலா ஒருதனித்தலைவன் (6 - 122 ; முன்னிய - முற்பட்ட)

தன்னேரிலாத தலைமகன் (2 - 407)

தன்னை ஒபபான் - தனக்குத்தானே ஒப்பானவன் (4 - 495)

தன்னைக் கழல் அடைந்தோரை உயிரின் ஓம்பும் கருத்தினன் (6 - 433)

தன்னையே ஒப்பான் (1 – 1304)

தன்னையே அனையவன் - தனக்குத் தானே நிகரானவன் (1 - 1124 ; 4 - 93)

தனி ஏறு அன்னான் - ஒப்பற்ற ஆண்சிங்கம் போன்றவன் (6 - 3449)

தனிச்சிலை தரித்த மேரு - ஒப்பற்ற வில்லை ஏந்திய மேருமலை போன்றவன் (3 - 426)

தனித்தலைவன் (6 - 122)

தனித் தொன்று இல்லான் - இலக்குவனையன்றித் தனக்கெனத் தனியாக ஒன்றுமில்லாதவன் (6 - 3117)

தனிநாதன் - ஒப்பற்ற தலைவன் (2 - 1028 ; 6 - 1528)

தனி நாயகன் - ஒப்பற்ற தெய்வம் (2 - 431 ; 3-1103; 5 - 494 ; 496 ; 6 - 2745 ; 2994 ; 3693 ; 3741 ; 3801)

தனி நின்ற தத்துவத்தின் தகை மூர்த்தி - ஒப்புயர்வற்று நின்ற தத்துவ ஞானத்தினுல் அறியப்படும் ஏற்ற கடவுளாகிய பரம் பொருள் (3-52)

தனி முதல் நாயகன் (6 - 3001)

தனி முதலவன் (1-311)

தனிமையோன் - ஒப்பற்ற தனிப் பரம்பொருள் (4 - 352)

தனியுலகு ஒருமூன்றிற்கும் ஒருத்தன் - ஒப்பற்ற மூன்றுலகுக்கும் தலைவனுய ஒப்பற்றவன் 6 - 1534)

தனி வள்ளலாம் மன் (6 - 2011)

தனு வல்லான் – வில்லில் வல்லவன் (1 - 1313)

தனுவின் செல்வன் - வில்லைத்தன் அருஞ் செல்வமாகக் கொண்டவன் (4 - 226)

தாச்ரதி – தசரதன் குமாரன் (6 - 1936)

தாட்சியில் பொருள்தருந் தருமமூர்த்தி - எவ்வகையான தாழ்வுமில்லாத உறுதிப் பொருள்களை அளிக்கவல்ல அறக்கடவுள் (6 - 324)

தாதை சொல் தலைமேற் கொண்ட தாபதன் – தன் தந்தையின் கட்டளையைப் பெருமையுடன் ஏற்றெழுகிய தவத்தோன் (6 - 2211)

தாமரைக் கண்ணவன் (6 - 2545)

தாமரைக் கண்ணன் (1 - 460 ; 783 ; 2 - 72 ; 633 ; 3 - 379 ; 6 – 427 ; 2047 ; 2103 ; 2462 ; 3748 ; 4029)

தாமரைக் கண்ணினன் (1 - 803)

தாமரைக் கண் பெருமான் (3 – 50)

தாமரைச் செங்கண்ணன் (2 - 1036 ; 4 - 687)

தாமரைச் செங்கண் தடக்கை வீரன் (3 - 189)

தாமரைச் செங்கை வீரன் (2 – 460)

தாமரைத் தடங்கண்ணன் (6 - 1538)

தாமரை நயனத்தான் (2 - 684)

தாமரை நயனன் (6 - 4178)

தாய் என உயிர்க்கு நல்கித் தருமமும் தகவுஞ் சார்வும் (தான்) என நின்ற நம்பன் (4 - 348)

தாய், 'படைத்துடைய செல்வம் ஈக' எனத் தம்பிக்கு ஈந்து, வேய் படைத்துடைய கானம் விண்ணவர் தவத்தான் மேவித் தோய் படைத் தொழிலால் யார்க்குந் துயர் துடைத்தான் (6 - 3462 ; தோய் படைத் தொழிலால் - மனத்துடன் மேற்கொண்ட படைத் தொழிலால்)

தாய்மையும் மறையும் நட்புந் தருமமும் தழுவி நின்றான் (4 - 305)

தாயர் சொல் நோக்கினன் - மாற்றாந்தாயான கைகேயியின் கட்டளையைப் போற்றி ஒழுகியவன் (6 - 3905)

தாரை உண்ட பேரண்டங்கள் அடங்கலும் தானே வாரி உண்டருள் செய்தவன் - வரிசைமேல் வரிசையாக ஒழுங்குபட்டுள்ள பெரிய உலகங்கள் அனைத்தையும் தானே வாரி உண்டவன் (6-564)

தாள் உயர் தாமரைத் தளங்கள் தம்மொடும் கேள் உயர் நாட்டத்தன் - நாளத்தினுல் உயர்ந்து விளங்கும் தாமரை மலரின் இதழ்களுடன் ஒளி சிறந்து விளங்கும் கண்களை யுடையவன்(3-235)

தாள்படாக் கமலம் அன்ன தடங்கண்ணுன் - நாளமாகிய தாளில் தோன்ருத தாமரை மலரிதழ் போன்ற விசாலமான கண்களையுடையவன் (4 - 75)

தான் உருவுகொண்ட தருமம் - தருமம் தான் ஓர் உருக்கொண்டது போன்ற இராமன் (3 - 528)

தானுகிய தகைமைப் பொருள் - தனக்குத் தானே ஒப்பாகிய மேன்மையுடைய முதற் பொருள் (1 - 1340)

திக்கு உறும் செறி பரம் தணிய நின்ற திரள் பொற் கைக் குறுங்கண் மலைபோற் குமரன் - எட்டுத் திக்குகளிலும் பொருந்திய நிறைந்த சுமை குறைவுபடத் தாங்கி நின்ற திரண்டு விளங்கிய அழகிய துதிக்கையும் சிறு கண்களையுமுடைய மலையை ஒத்த திக்கயத்திற்கு ஒப்பான குமரன் (3 - 3)

திசையுளார் பரமுகப் பகைதுமித்தருளுவான் - திசைகள் எங்கும் உள்ளவர்களான வேற்றுமையுணர்ச்சி கொண்ட பகைவர்களை யழித்து யாவர்க்கும் அருள்புரிபவன் (4 - 87)

திரள் தோள் வீரன் (6 - 4276)

திரள் தோளின் வலிதன்னால் வடமேரு மதன் அழிப்பர் (3 - 605)

திரள் மரம் ஏழுந்தீர எய்தவன் (6 - 434)

திரு உறை மார்பன் (4 – 211 ; 683 ; 6 = 1342)

திரு உறையும் அணி மார்பன் – திருமாது தங்கியிருக்கும் அழகிய மார்பையுடையவன் (3 - 57)

திருக்கிளர் மார்பினன் (6 – 4299)
திருக்கொள் மார்பன் (6 - 3903)
திரு நெடுமால் (4 - 152)
திருப்பொலி மார்பன் (6 - 4215)
திருமகள் கொழுநன் (2 - 50 ; தயரதன் கூற்று)
திருமகள் தலைமகன் (4 - 657)
திருமகள் தலைவன் (3 – 111)
திருமகள் நாயகன் (1 – 463)
திரு மகிழ் மார்பினன் (3 - 191)
திரு மடந்தை காந்தன் (2 - 389)
திரு மறு மார்பன் (4 - 363 ; 6 – 1353)
திருமால் - திருமாலின் அவதாரம்(2 - 237 ; 3 - 1107)
திருவாழ் மார்பன் (6 - 2602)
திருவாளன் - திருமகள் கேள்வன் (6 - 3842)
திருவின் கேள்வன் (1 - 331 ; தயரதன் கூற்று)

திருவின் நாயகன் (1 - 1182 ; 2 – 588 ; 3 - 982 ; 4 - 473 ; 6 - 4160 ; 4184)

திருவொடு சேர்ந்த பாம்பணை அமலன் (6 - 4298)

தீது அறு மொய்கொள் வீரன் (1 - 639)

தீர்த்தன் – தூயவன் (1 – 294 ; 1171 ; 3 - 547 , 4 – 201 ; 450 ; 5 - 677 ; 6 – 606 ; 646 ; 1401 ; 1817 ; 2272 ; 3736)

தீவினை தெறும் செய்ய தேவு - பாவங்களை யழிக்கும் சிறந்த தேவன் (4 – 175 ; சுக்கிரீவன் கூற்று)

துணர்த்த பூந்தொடையினான் - கொத்தான பூக் களாலான மாலையினான் (1 – 464)

துணி கொண்டு இலங்கும் சுடர் வேலவன் - பகைவர் உடலைத் துண்டமாக்கி விளங்கும் ஒளி பொருந்திய வேலை யுடையவன் (5 - 579)

துப்பினால் செய்த கையொடு கால் பெற்ற துளிமஞ்சு ஒப்பினான் (5 – 337 ; துப்பு - பவழம்)

துப்புடைக் கடலின் நீர் சுமந்த மேகத்தை ஒப்புடை அண்ணல் (2 - 1009)

துயில்வுழி அறிவின் உணர்தரு சுடரொளி ஒருவன்– யோகத் துயில் புரியும்போதே தன் முற்றுணர்வினால் எல்லா நிகழ்ச்சிகளையும் அறியவல்ல சோதி வடிவினனான கடவுள் (6 - 3726)

துவசம் ஆர் தொல் அமருள் துன்னாரைச் செற்றும் சுருதிப் பெருங்கடலின் சொல்பொருள் கற்பித்தும் திவசம் ஆர் நல்லறத்தின் செந்நெறியில் உய்த்தும், திரு அளித்தும் வீடு அளித்தும் சிங்காமைத் தங்கள் கவசமாய் ஆருயிராய்க்

கண்ணாய் மெய்த் தவமாய்க் கடையிலா ஞான மாய்க் காப்பான் - கொடிகள் விளங்கும் பழைய தேவாசுரப் போர்களுள் பகைவர்களை அழித்தும் வேதமாகிற பெரிய சாகரத்தின் பதங்களையும் அவற்றின் பொருள்களையும் கற்பித்தும் தினம் அனுட்டிக்க வேண்டிய சிறந்த தருமங்களின் சிறந்த மார்க்கங்களில் கொண்டு செலுத்தியும் செல்வத்தை அளித்தும், பரமபதமாகிய மோட்சத் தைக் கொடுத்தும் குறையாமல் தேவர்களாகிய தங்களுக்குக் கவசமாகியும் அரிய உயிராகியும் கண்ணாகியும் உண்மைத் தவம் ஆகியும் காத்து வரும் பரம்பொருள் (3 - 99)

துழாய்த் தெரியலான் - துழாய் மாலையான் (2 - 275)

துழாயின் அலங்கலான் (2 – 258)

துளக்கம் இல் ஆற்றல் வீரன் - மனக்கலக்கம் இல் லாத ஆற்றல் மிக்க வீரன் (6 - 2409)

துளி மஞ்சு ஒப்பினன் - மழைத்துளி உடைய கொண் டலை ஒப்பவன் (5 - 337)

துறவியின் உறவு பூண்ட தூயவர் துணைவன் (6-432)

துன்பினைத் தொடக்கும் மாயத் தொல்வினை துடைத்து நீக்கித் தென்புலத்தன்றி மீளா நெறி உய்க்குந் தேவன் - துன்பங்களைச் சங்கிலி போலப் பிணைக்கும் மாயை காரணமாய் வரும் முன் செய்த பழைய கர்மவினைகளை எல்லாம்

அழித்துப் போக்கித் தென் திசையிலுள்ள யமலோகத்தில் செலுத்தாமல் மீண்டு பிறவியில் வருதலில்லா மோட்சவுலகில் சேர்ப்பிக்கும் தேவன் (4 - 56 அனுமன் கூற்று)

தூண் திரண்டனைய தோளான் (5 - 1293)

தூண்திரள் தடந்தோள் மைந்தன் - தூண்கள் போலத் திரண்டு பருத்த தோள்களையுடைய வலியோன் (4 - 106)

தூய கொற்றவன் (6 - 3751)

தூய சிந்தைத் தோமில் குணத்தினன் (2-304)

தூயவன் - பரிசுத்தன் (2 - 725 ; 3 - 260 ; 5 - 517 ; 624)

தூயோன் - தூயவுடம்பினன் ; இயல்பாகவே பாசங்களின் நீங்கினவன் (6 - 758)

தூரவட்ட எண் திசைகளைத் தனித்தனி சுமக்கும் பார எட்டினோடு இரண்டினில் ஒன்று பார் புரக்கல் பேர விட்டவன் - தூரத்தில் வட்டமாய் எட்டுத் திசைகளைத் தனித்தனியே சுமந்து கொண்டு நிற்கும் வலிய எட்டுத் திக்கயங்களோடு உலகங்களைத் தாங்கும் மற்ற இரண்டான ஆதிசேடன் ஆதி கூர்மம் என்பவற்றில் ஒன்றான ஆதிசேடனாக உள்ள தன் பாதுகைகள் உலகை ஆட்சி புரியத் தன்னை விட்டுப் பிரியுமாறு விட்டவன் (3 - 520)

தெரிவில் பெற்றியான் - எவராலும் அறிந்து கொள்ள முடியாத தன்மையவன் (6 – 2719)

தெய்வநாயகன் - தேவாதி தேவன் (6 - 424 ; 562 ; 933 ; 2134)

தெவ் அடுஞ் சிலைக்கை வீரன் - பகைவரை வெல்லும் வில் ஏந்திய கையுடைய வீரன் (6 – 4059)

தெவ் இராவகை நெடுஞ்சிகை விரா மழுவினன் அவ் விராமனையும் மாவலி தொலைத் தருளினன் - உலகில் பகைவர்களேயில்லாதபடி நீண்ட சுடர்கள் பொருந்திய கோடாலி என்னும் ஆயுதம் ஏந்தியவனான அந்தப் பரசுராமன் என்பவனையும் அவன் பெருவலியை ஒழித்து உலகுக்கு அருள்புரிந்தவன் (4 – 86)

தென் சொற் கடந்தான் வட சொற் கடற்கு எல்லை தேர்ந்தான் (2 - 434)

தென்தலை ஆழி தொட்டோன் சேய் - அழகிய இடத்தையுடைய கடலைத் தோண்டின சகர புத்திரரின் குலத்தில் தோன்றியவன் (6 - 3112)

தேஉண்ட கீர்த்தி அண்ணல் - தெய்வத்தன்மை செறிந்த புகழினைக் கொண்ட பெருமையிற் சிறந்தவன் (6 – 2358)

தேசத்தார் அரசன் மைந்தன் - கோசல நாட்டிலுள்ளார்க்கு மன்னனாகிய தயரதன் புதல்வன் (6 - 2230)

தேமரு தெரியல் வீரன் - தெய்வ மணம் பொருந்திய மாலையணிந்த வீரன் (3 - 1033)

தேமலரோன் அம்மான் - பிரமனின் தந்தை (3 - 774)

தேவதேவர் பிடித்த போர்வில் ஒடித்த சேவகன் (2 - 249)

தேவர் ஆதி தேவர் பலராலும் முந்து திருநாமம் ஓது செயலோன் (6 - 2187)

தேவர்க்குந் தேவன் (6 - 1354 ; 2531 ; 4235)

தேவர்க்குந் தேவு (6 - 3044)

தேவர்க்கும் தெரிக்கிலாதான் - தேவர்கட்கும் தனது உண்மைச் சொரூபத்தை உணர்த்தாதவன் (6 - 2203)

தேவர் தம் தேவன் (6 - 3042)

தேவர் தம் பிரான் - தேவாதி தேவன் (6 - 2367)

தேவர் தவத்தின் தனிப்பயன் (3 - 1171)

தேவரிற் சீரியன் (4 - 583)

தேவரின் மெய்யன் - தேவர்களுக்குள் மெய்ப் பொருளாய் உள்ளவன் (6 - 3672)

தேவன் (3 - 101 ; 4 - 56 ; 59 ; 720 ; 5 - 395 ; 6 - 124 ; 3853)

தேவாதி தேவர் பலராலும் முந்து திருநாமம் ஓது செயலோன் - தேவர்கள் அவர்களின் உயர்ந்த தேவர்கள் என்ற பலராலும் சிறந்த திருப்

பெயர்களைச் சொல்லி வழுத்தும்படியாக உள்ள செயல்களுடன் கூடினவன் (6 - 2187)

தேன் உயர் தெரியலான் (5 - 456 ; தெரியல் - மாலை)

தேன் உளர் தெரியலான் - வண்டுகள் குடையும் மாலை உடையவன் (4 - 222)

தேன்முகம் மலரும் தாரான் - தேனைத் தன்னகத்துக் கொண்ட மலர்கின்ற பூமாலையை அணிந்த இராமன் (6 - 4183)

தேன்விடும் துளவத்தாரான் - தேன் ஒழுகவிடு கின்ற துளவமாலையணிந்தவன் (6 – 2173)

தொடக்கு அறுத்தோர் சுற்றம் - பற்றுக்களை முற்றும் அறுத்து விலக்கிய ஞானியர்கள் உறவான வன் (3 - 100)

தொடையமை நெடுமழைத் தொங்கலா மெனக் கடைகுழன்று இடை நெறி கரிய குஞ்சி - தொடர்ச்சி பொருந்திய நீண்ட மழைக்கால் என்று சொல்லத் தக்கவாறு நுனி சுருண்டு நடுவே அடர்ந்துள்ள கருநிறமான தலைச்சிகை (3-242)

தொல்மறை எல்லை நோக்கினர் யாவரும் நோக்கு வான் - பழமையான வேதத்தின் முடிவை ஆராய்ந்துள்ள ஞானியர் எல்லாராலும் கருதி வணங்கத் தக்க பரம்பொருள் (3 - 1043)

தொல்லை யாவர்க்கும் நாயகன் - பழமையான எல்லோர்க்கும் தலைவன் (6 - 328)

தொல்லையூழி நாயகன் (4 - 429)

தொல்லையோன் - பழமையானவன் (4 - 501;6-2723; 2727)

தொலைவிலா இராமன் - அழிவில்லாத இராமன் (6 - 1285)

தொழுவார் தொழுதாள் அரி - பணிவார் பணியத் தக்க திருவடிகளையுடைய திருமால் (6 - 1714)

தொன்மையின் நல் நூற்கு எல்லாம் இறைவன் - பழமையான் சிறந்த அறநூல்களுக்கெல்லாம் தலைவன் (4 - 311)

தோட்டலங்கலான் - பூவிதழ்களாகிய மாலையை உடையவன் (3 - 215)

தோடு அலர் தெரியலான் - இதழ்கள் விரியப்பெற்ற மாலையான் (6 - 4220)

தோம் இல் குணத்தினன் - குற்றமேயில்லாக் குணங் களை யுடையவன் (2 - 304)

தோய்ந்தும் பொருள் அனைத்துந் தோயாது நின்ற சுடர் - எல்லாப் பொருள்களிலும் கலந்தும் கலவாமல் தனித்தும் நின்ற பழமையான ஒளி (3 - 100)

தோன்றல் - தலைவன் (1 - 804 ; 1164 ; 1134 ; 2 - 636 ; 1164 ; 1172 ; 3 - 141 ; 148 ; 150 ; 214 ; 246 ; 427 ; 4 - 154 ; 155 ; 6 - 918 ; 4188)

தோன்றிய நல்லறம் நிறுத்தத் தோன்றினன் (2-464)

நடையில் நின்று 'உயர்' நாயகன் - நல்ல நெறியில் வழுவாது நின்று மேன்மையுற்ற தலைவன் (1 - 11)

நம்பன் (3 - 47 ; 4 - 348 ; 6 - 1175)

நம்பி - பெருமான் (1 - 332 ; 1316 ; 2 - 50; 236; 252; 277 ; 436 ; 593 ; 594 ; 621 ; 1022 ; 3 - 223 ; 241 ; 4 - 207 ; 301 ; 402 ; 6 - கட ; 1562 ; 2015 ; 2645 ; 3117 ; 4231)

நல்லறம் நிறுத்தத் தாம் அரசாவனை துறந்து தரை நணுகி நின்றவர் (3 - 31)

நல்லற மூர்த்தி (6 - 3101)

நல்லான் - உத்தமன் ; நல்ல வீரன் (6 - 3428)

நல்லுறுப்பமையும் நம்பி - நல்ல உடலமைப்பைப் பெற்ற நம்பி (4 - 84)

நல்வினையே நோக்கி நின்றாரைக் காப்பவன் (3 - 103 ; சரபங்கர் கூற்று)

நவம் செயத் தகைய நளின நாட்டத்தான்-பார்க்கப் பார்க்க மேன்மேலும் புதுமையை உண்டாக்கத் தக்க தாமரை போன்ற கண்களை உடையவன் (3 - 237 ; சூர்ப்பணகைகூற்று)

நவைதீர்க்கும் நாயகன் - (தேவரின்)குற்றங்களைப் போக்கியருளும் தேவன் (3 - 103)

நவைதீர் கதழ்வமாய் நறுநெய் உண்டு உலகில் அன்பர் கருதிற்றுதவும் அமலன் - குற்றமற்ற வைதிக யாக அக்கினியாகி அங்கு மந்திர முகமாய் அளிக்கப் பெறும் மணம் மிக்க நெய்யை உண்டு உலகில் பக்தர்கள் நினைத்த வற்றை உதவும் பரிசுத்தன் (3 – 45)

நவையறு குணங்கள் என்னும் பூண் எலாம் பொறுத்த மேனிப் புண்ணிய மூர்த்தி (6 - 1588; பூண் எலாம் பொறுத்த - அணிகலன்களை எல் லாம் தாங்கிய)

நவையனைத்தும் துறந்தவன் - குற்றங்கள் எல்லாம் நீங்கப் பெற்றவன் (6 – 3829)

நவையிலா உயிர்கள்தோறும் பலவகை நின்ற தூயோன் - குற்றமற்ற பிராணி வர்க்கங்களில் எல்லாம் பல்வேறு வகையாக உருவெடுத்து நிற்கின்ற அமலமூர்த்தி (6 - 758)

நளின நாட்டத்தான் – தாமரைக் கண்ணன் (3 - 237)

நளின பாதம் வனைந்த பொற் கழற்கால் வீரன் (2 - 300)

நற்கலை மதி உற வயங்கும் நம்பி – அழகிய கலைகள் நிரம்பிய பூர்ண சந்திரனை ஒப்ப விளங்கும் நம்பி (3 - 241)

நற்பொற்றோளான் - அழகிய பொற்றோளையுடைய வன் (3 - 1161)

நறுந் துழாயின் அலங்கலான் - (2 - 258)

நறுமலர்த் தொடை நாயகன் (1 - 645)

நறை கமழ் அலங்கலான் - நன்மணம் வீசும் பூமாலை யணிந்தவன் (1 - 595)

நன்மகன் - எல்லா நலங்களும் நிறைந்த மகன் (1 – 1331 ; தாயர்கூற்று)

"நன்று ஆய் நல்வினை நல்லோரைத் தின்றார் தங் குடர் பேய் தின்னக் கொன்றாலல்லது கொள்ளேன் நாடு" என்றான் (5 – 650)

நன்னூற்கு எல்லாம் இறைவன் - பழமையான சிறந்த அறநூல்கட்கெல்லாம் தலைவன் (4-311)

நன்னெறிக்கு இறையோன் (4 - 403)

நாகணைப்பள்ளி நீங்கினான் (2 - 1169)

நாதன் (2 - 1108 ; 1215 ; 3 - 98 ; 360 ; 539 ; 6 - 1331)

நாகு அணைத் துயிலைத் தீர்ந்தான் - ஆதிசேடனாகிய பாயலில் அறிதுயில் கொள்வதை விடுத்து அயோத்தியில் அவதரித்தான் (6 - 4315)

நாகு அணை வள்ளல் (2 - 122)

நாந்தகப் பாரவாளி - நாந்தகம் எனும் வாட்படை தரித்தவன் (6 – 3327)

நாமவில்கை இராமன் (2 – 238 ; நாம - அச்சந்தரும்)

நாமவேல் புண்ணியன் - பிறர் அஞ்சத்தக்க வேலைத் தாங்கிய புண்ணிய வடிவன் (4 - 675)

நிவப்புறு நிலன் எனும் நிரம்பு நங்கையும், சிவப்புறு மலர்மிசைச் சிறந்த செல்வியும் உவப்புறு கணவன் (2 - 32)

நிழல் விரை அன்னுன் - திருமேனியின் ஒளியால் கடல் போன்றவன் (5 - 493)

நின்ற நீதியான் - நிலைபெற்ற நீதியை உடையவன் (4 - 113)

நின்ற புகழோன் - நிலைபெற்ற கீர்த்தி உடையவன் (6 - 2198)

நின்று அதிகம் ஒளிரும் அழகன் - நிலைபெற்று எப்போதும் மிகுதியாக ஒளிவீசும் அழகன் (3-236)

நிலையுந் தேவர்க்கும் நமக்கும் ஒத்து ஒரு நெறி நின்ற அனகன் (2 - 745 ; கவிக் கூற்று)

நீடிய அரக்கர் சேனை நீறுபட்டொழிய வாகை சூடிய சிலையிராமன் (1 - 12)

நீண்டவன் - நெடியோன் ; எங்கும் வியாபித்தவன் ; (2 - 1044 ; 4 – 35 ; 751)

நீண்ட நூல் வல்லான் - பெருமை வாய்ந்த நூல்களில் வல்லவன் (4 - 722)

நீண்டான் (2 - 425)

நீதியான் - நீதிவடிவானவன் ; அரச நீதி முறையறிந்தவன் (1 - 1376) ; 4 - 82 ; 226 ; பரசுராமன் கூற்று)

நீந்தா இன்னலின் நீந்தாமே தேய்ந்து ஆருத பெருஞ்செல்வம் ஈந்தான் - நாங்கள் நீந்திக் கடக்க முடியாத துன்பக் கடலில் நீந்தி வருந்தாமல் குறைந்தடங்காத பெருஞ் செல்வத்தை அளித்தவன் (5 - 649)

நீர் சூழ்ந்த புவிக்கு நாயகன் (6 - 933)

நீர் வீரை அன்னுன் - நீர் நிறைந்த கடல் வண்ணன் (6 - 2320)

நீல் நிற ஞாயிறு அன்ன நெடியவன் (6 - 3516)

நீல் நிற மேகம் ஒத்தான் (6 - 2157)

நீலக் கார்முகில் கமலம் பூத்து மண்ணுற்று வரிவில் ஏந்தி வருவதே போலும் மால் (4 - 304)

நீலக் குன்றன்ன தோளினுன் (6 – 3933)
நீலக் கொண்டல் (3 - 270)
நீலமாமுகில் (6 - 4189)
நீலமாமுகில் அன்னுன் (2 - 278)
நீல மா மேகம் அன்ன நெடியவன் (4 – 424)

நீல மால் வரை அனையான் - நீல நிறத்தோடு விளங்கும் பெரிய மலைபோன்ற தோற்றத்தினன் (4 – 45)

நீலமான நிறத்தன் (3 – 1056)
நீலமேனி நெடியவன் (3 – 966)
நீல மேனியான் (4 - 965)

நீளங் கொள் சிலையோன் - நீண்டவில்லைக் கொண்ட இராமன் (3 – 223)

நூற்றிதழ்க் கமலக் கண்ணன் (6 - 2363)

நெடிய கடல் துயின்ற ஓர் களிறு – பெரிய பாற் கடலில் துயின்ற ஒப்பற்ற களிறு போன்ற திருமாலாகிய இராமன் (4 - 41)

நெடிய நம்பி - பெரியோனும் ஆடவர்களிற் சிறந் தோனுமான இராமன் (3 – 223)

நெடியவன் (2 – 660 ; 3 – 519 ; 966 ; 4 – 37 ; 424; 6 - 2150 ; 3516 ; 3929)

நெடியோன் (2 - 222 ; 3 - 164 ; 519 ; 956 ; 957 ; 974 ; 1061 ; 4 - 156 ; 6 - 6 ; 3377 ; 3420 ; 3991 ; 4069)

நெடியோன் பேர் படைத்தவன் (6 - 2559)

நெடுங் கருணைக் கெல்லாம் நிலையம் - கருணைக்கடல் (3 - 100)

நெடுங் குமரன் (2 - 495)

நெடுங் கொற்றவன் - பெரும் வெற்றி வீரன் (6 - 1547)

நெடுஞ் சிலை வலான் (4 – 70)

நெடுந்தகை (3 - 525 ; 6 - 931 ; 1205)

நெடுந்தகையோன் (3 - 965)

நெடுமாயக் கள்வன் (6 - 3408)

நெடுவில்லி - நீண்ட வில்லேந்தியவன் (3 - 458)

நெல் எலாம் சுரந்து உதவும் நீர் நாடன் - நெல் முதலிய உணவுப் பொருள்களையெல்லாம் மிகுதி

யாக விளைந்தளிக்கும் நீர் வளமுடைய கோசல நாடுடையவன் (3 - 356)

நெறி நின்ருர் நேர் நின்ருன் - ஞானமாகிய மார்க்கத்தில் நின்ற மேலோருக்கு அவர் எதிரில் காட்சியளித்தருள்பவன் (3 - 1180)

நெறிவயின் பேதியா நிலைமையார் எவரினும் பெருமையார் - நீதி வழியினின்றும் மாறுபடாத உறுதி நிலையுடையவர்களான யாவரினும் சிறப்பு வாய்ந்தவன் (4 - 82)

நேடி நூல் தெரிந்துளோர்க்கும் உணர்விற்கும் நிமிர நின்ருன் - தேடியாராய்ந்து நூல்களை அறிந்துளோர்க்கும் அறிவிற்கும் எட்டாது உயர்ந்து நின்றவன் (6 - 609)

நேமிச் சுடர் குணக்குன்று (6 - 4129)
நேமி நாரணன் ஒக்கும் நம்பி (2 - 277)
நேமியான் - திருமால் (5 - 316 ; 6 - 1067 ; 3289)
நேமியினுன் (6 - 3551)
நேமியோன் (6 - 699)

நோன் சிலையோன் - வலிமையுடைய வில்லினன் (2 - 802)

பகலவன் அனையான் (2 - 686)
பகலவன் குல மைந்தன் — சூரிய குலத்துதித்த மைந்தன் (3 - 134)

பகலவன் வழிமுதல் (6 — 348)

பகழி வில்வலான் - அம்புகளை எய்யும் விற்போரில் வல்லவன் (3 - 1002)

பங்கய நயனத்து அண்ணல் (6 - 704)

பச்சிலையை ஒத்த படிவத்து அடல் இராமன் (1-1229; பச்சிலை - தமாலம்)

பச்சிலை வண்ணமும் பவளவாயுமாய்க் கைச்சிலை ஏந்தி(யோன்) (6 - 3949)

பஞ்சணை பாம்பணையாகப் பள்ளிசேர் அஞ்சன வண்ணன் (3 - 946 ; சடாயு கூற்று)

படங்கொள் பாம்பணை துறந்தவன் (6 - 2449)

படஞ் செய் நாகணைப் பள்ளி நீங்கினன் - படத்தையுடைய அரவணையைத் துறந்து வந்து அவதரித்தவன் (2 - 1169)

பண்டு நெடும் பாற்கடல் கிடந்தான் (6 - 3011)

பண்டை நான்முகனே யாதி சராசரத் துள்ள பள்ளப் புண்டரீகத்து வைகும் புராதனன் (6 - 600)

பண்ணவன் – தலைவன் ; கடவுள் (3 - 817 ; 4 - 364; 6 - 2454 ; 2619 ; 3734)

பண்ணின் நோக்கும் பராவு அமுது - இசையினிடத்துக் காண்கிற யாவரும் பாராட்டும் கான அமிர்து (2 - 632)

பதவியை எவர்க்கும் நல்கும் பண்ணவன் - நல்லவர் யாவர்க்கும் நற்கதி அளிக்கும் தேவன் (4 - 364)

பதுமச் செங்கண் ஆழியான் (4 – 72 ; அனுமன் கூற்று)

பரஞ்சுடர் (6 - 4052)

பரம்பரன் - மேலான தெய்வங்கட்செல்லாம் மேலான தெய்வம் (3 - 1178 ; கவந்தன் கூற்று)

பரமர் ஆம் அரன் முதல் தலைவருக்கு அதிசயத்திறலினன் - மேலான தேவரான சிவபிரான் முதலான தேவர்களுக்கும் வியக்கத் தக்க வலிமை வாய்ந்தவன் (4 - 87)

பரமன் (4 - 296 ; 664)

பரமேட்டி - யாவற்றினும் மேலான நிலையிலுள்ள பெருமாள் (3 - 1177 ; 6 - 2600)

பராபரம் (6 - 4323)

பல்லாயிரம் இருள்கீறிய பகலோன் என ஒளிரும் வில்லாளன் - மிகப் பலவான இருள் தொகுதியைப் பிளந்து அழித்த சூரியனைப் போல ஒளி வீசும் உடல்தேசு கொண்ட வில்லாளி (3-450)

பல்லுயிர்க்கு ஓருயிர் என நின்ற இராமன் (2 - 513)

பல நோயின் மருத்துவன் அனையான் (2 – 717)

பவளந்தரும் இதழான் (2 - 625)

பழையோன் - ஆதி பரம்பொருள் (6 - 3008)

பற்றி நீந்தல் அரிய- நெடுங் கருணைக் கெல்லாம் நிலையம் - பிணையாகப் பற்றிக் கொண்டு நீந்திக்

கடப்பதற்கு அரிதான நீண்ட கருணைக்கு இருப்பிடமானவன் (3 - 100)

பன்னகப் பாயலுட் பள்ளி நீங்கினன் (2 - 461)

பன்னக மணிவிளக்கு அழலும் பாயலுள் அனந்தல் நீங்கினன் (1 - 1303)

பனி நின்ற பெரும்பிறவிக் கடல் கடக்கும் புணை - துன்பமயமாய் நின்ற, கடத்தற்கரியபெரியபிறவியாகிய கடலைத் தாண்டுவதற்குரிய தெப்பம் (3 - 52)

பாகின்ற கீர்த்தி அண்ணல் (6 – 417 ; பாகின்ற - பரவுகின்ற)

பாம்பணை அமலன் (6 - 3277 ; 4298)

பாம்பு இழைப் படுக்கை வள்ளல் (6 - 712 ; இழை - ஆக்கப்பட்ட)

பாருடைக் கொற்றவன் (6 - 343)

பார்க்கெலாம் ஆர்க்கலாம் கண்ணவன் - உலகோர் எல்லாம் மகிழ்ந்து ஆரவாரிக்கும் படியான அருட்கண்ணேக்கினன் (6 - 3967)

பாராயண மறை நான்கையும் கடந்தான் - ஓதப்பெறும் நான்கு வேதங்கட்கும் அப்பாலானவன் (6 - 3008)

பாரின் நாயகன் (6 - 348)

பிரான் தலைவன் (2 - 860 ; 3 - 815 ; 5 - 399 ; 515 ;

6 - 2603 ; 2820 ; 3929 ; 4161 ; 4163 ; 4191 ; 4193 ; 4292)

பிறத்து யாவையுங் காத்து அவை பின்னின்று துடைக்கும் திறத்தின் மூவரும் திருத்தின திருத்தும் திறலோன் (2 - 39 ; பிறத்து - பிறக்கச் செய்து)

பிறப்பறுக்கும் நாயகன் (6 - 4028)

பிறர்பிறர்க்கு எண்ணின் நோக்கி இயம்பரும் இன்பம் - மனத்தால் ஞானக்கண் கொண்டு பார்த்துப் பிறர், இவ்வாறு இருந்தது என்று நோக்கிப் பிறருக்கு இயம்பரும் இன்பம் (2-632)

பிறவாமல் நல்கும் பெரியோன் - அடியார்கள் மீட்டும் பிறவாவண்ணம் அவர்கட்குப் பரமபதம் அளிக்கின்ற பெருமையன் (6 - 2194)

பிறவிநோய்க்கு மருந்து (6 - 442 ; 1343)

புகலவன் - சரணாகத வத்சலன் (6 - 348)

புகழ் இறைவன் (6 - 3704)

புகழ்ப் பூணினன் - புகழையே தனது அணியாகக் கொண்டவன் (4 - 560)

புகழின் புகழ் (2 - 356)

புகழினன் (4 - 82)

புகழோன் - யாவரும் புகழ்தற்குரியவன் (3 - 1061 ; 6 - 525)

புங்கவன் - சிறந்தவன் ; புருடோத்தமன் (6 - 1170; 3356)

புடைக்க வல்திரை எடுத்து ஆர்க்கும் போர்க்கடல் உடைக்கருந் தனி நிறம் ஒளித்துக்கொண்டவன் (1 - 464)

புண்டரிகக் கண் அமலன் (3 - 972)

புண்டரிகக் கண்ணன் (5 - 565)

புண்டரிக நயனத்தான் (5 - 322)

புண்டரிகன் - தாமரை போன்ற அவயவங்களை உடையவன் (6 - 3635)

புண்டரீகக் கண் ஆழிப் புரவலன் (4 - 74)
புண்டரீகக் கண் புரவலன் (2 - 53)
புண்டரீகக் கண் வெற்றிப் புரவலன் (6 - 4052)

புண்டரீகங்கள் பூத்துப் புயல் தழீஇப் பொலிந்த திங்கள் மண்டலம் உதயஞ் செய்த மரகதக் கிரியன்னான் - தன்னிடம் பல தாமரைகள் மலரப் பெற்று விளங்கிய சந்திரமண்டலம் உதிக்கப் பெற்ற ஒரு மரகத மலை போன்றவன் (4 - 94)

புண்டரீகத் தடங் காடு பூத்து ஒரு கொண்டல் வந்து இழிந்தன்ன கோலத்தான் - நீருண்ட ஒரு மேகம் தாமரை மலர்கள் பெரிய காடு போல அடர்ந்து மலரப் பெற்றுத் தரையில் வந்திறங்கியது என்று சொல்லத்தக்க அழகிய திருமேனியுடையவன் (3 - 953)

புண்டரீகத் தடம் புரையும் பூட்சியான் – தன்னுறுப் புக்களால் செந்தாமரைக் குளத்தை ஒத்த திரு மேனியோடு விளங்குபவன் (6 - 354)

புண்ணிய மூர்த்தி (6 - 1588)

புண்ணியன் (1 – 1161 ; 1379 ; 3 - 993 ; 6 - 2150)

புணர்த்தும் மாயையில் பொதுவுற நின்று அவை உணரா இணர்த்துழாய்த் தொங்கல் இராமன் - தானே தன்னிச்சையால் தோற்றுவிக்கும் மாயைக கண் ஏனைய உயிர்களை ஒப்பப் பரமான் மாவாகிய தானுமிருந்து அந்நிகழ்ச்சிகளைத் தெளியாதவன் போலுள்ள, பூங்கொத்துக்களை யுடைய திருத்துளவமாலை புனைந்த இராமன் (6 – 3990)

புயல்நிற வண்ணன் (3 - 1017)

புரவலன் - காத்தல்வல்லான் ; அரசன் (2 - 53 ; 3 - 760 ; 4 - 74 ; 378 ; 6 - 716 ; 1536 ; 2881 ; 4052)

புராதனன் – பழையோன் (6 - 600 ; 601)

புலவர் கோமான் - தேவாதி தேவன் (6 - 2638)

புலவர் புந்தியான் - ஞானிகளின் அறிவில் வீற்றிருப்பவன் (6 - 3960)

புலியன்னான் (6 - 3413)

புவனம் ஆக்கி மற்றவையனைத்தையும் மணிவயிற்றடக்கிக் (காப்பவன்) (1 - 468 ; கோசிகன் கூற்று)

புவிதந்தான் - பூமியைப் புரப்பவன் (6 – 3770)

புள்ளுக்கும் புலம்புபேய்க்குந் தாயன்ன புலவு வேலோன் - பறவைகட்கும் உணவின்றிப் பசியால் புலம்பும் பேய்களுக்கும் தாய் போலப் பகைவர் புலாலை யளித்துப் பசி தீர்க்கும் வேல் ஏந்திய வன் (3 - 1003)

புறங்காண அகங்காணப் பொது முகத்தின் அருள் நோக்கம் இறங்காத தாமரைக் கண் பெருமான் - ஒவ்வொரு பொருளிலும் உள்ளும் புறமும் வியாபித்து நடுநிலையிலிருந்து அருட் பார்வை சிறிதும் குறையாது செந்தாமரையிதழ் போன்ற கண்களையுடையான் (3 - 50 ; விராதன் துதி)

புனத்துழாய் மாலை மார்பன் (6 -2859)

புனத்துழாய் மாலையான் - நந்தவனத்தில் முளைக்கின்ற திருத்துழாய் மாலை புனைந்தவன் (6 - 1592)

புனிதன் (3 - 288 ; 379 ; 4 - 64 ; 111 ; 5 - 499)

புனைமலர்த் தாரவன் (3 - 193)

புனையும் வார் கழலினன் (4 - 790)

பூ அராவு பொலங்கதிர் வேலினன் - கூர்மையாக அராவப் பெற்றுப் பொன்னொளி வீசும் வேல்களையுடையவன் (3 - 209)

பூங்கணை மயல்தரும் மதனற்கும் வடிவு மேன்மையான் (1 - 799)

பூங்கழற் காலவன் (2 - 863)

பூசுரர்க் கொரு கடவுள் - அந்தணர்க்கு ஒப்பற்ற கடவுள் (6 - 3737)

பூண் இயல் மொய்ப்பினன் - வாகுவலயங்கள் அணிந்த தோள்களையுடையவன் (1 - 801)

பூண் உற்ற திரள் தோள் வீரன் (6 - 4276)

பூத நாயகன் - ஐம்பெரும் பூதங்கட்குத் தலைவன் ; ஆன்மாக்கட்குத் தலைவன் (6 – 933)

பூதரப் புயத்து வீரன் - மலைகள் போன்ற தோள்களையுடைய வீரன் (4 - 64)

பூமகள் கொழுநன் (2 - 124)
பூமி கேள்வன் (1 - 542)
பூவின் மெல்லியன் (1 - 356)
பூவை நிறவன் (6 – 3399)

பூவை போல் நிறத்தினன் - காயாம்பூ நிறத்தினன் (1 - 414 ; 6 - 4182)

பூவை போல் வண்ணத்தான் (3 - 281)

பூவை வண்ணத்தன் (6 - 3235)

பெண்ணின் நோக்குஞ் சுவை - ஆடவர் பெண்மையை அடைந்து சுவைக்கும் காம இன்பம் போன்றான் (2 - 632)

பெரியோன் (1 - 397 ; 6 - 502 ; 2196 ; 3617 ; 4015; 4046)

பெருங்குணத்து இராமன் (2 - 860 ; 1206 ; 5 – 155)

பெருங்குணத்து உத்தமன் (3 - 102)

பெருந்தகை - பெருமைக் குணவான் (1 - 392 ; 2 - 529 ; 6 - 2447 ; 2653)

பெருந்தகைமைத் தயாதன்தன் புதல்வன் (1 - 711)

பெருந்தலைவன் (6 – 2720)

பெருந்தவம் இயற்றிஞேர்க்கும் பேர்வரும் பிறவி நோய்க்கு மருந்தென நின்ருன் (6 - 442 ; பேர்வரும் - தானே நீக்குதற்கு முடியாத)

பெருந்தாமரைக் கண் கருமுகில் (2 - 614)

பெருந்தெய்வம் (5 - 56)

பெருமகன் - பெரியோன், தலைவன் ; புருடோத்தமன் (2 – 31 ; 3 - 819 ; 952)

பெருமான் (2 - 1033 ; 3 - 50 ; 6 - 4322)

பெற்ற தாதை பூட்டிய செல்வம் ஆங்கோர் தம்பிக்குக் கொடுத்துப் போந்து நாட்டொரு கருமஞ் செய்தான் (4 - 310 ; தாதை – தந்தை)

பேதியாது நிமிர் பேதவுருவம் பிறழ்கிலா ஓதி ஓதி உணருந்தொறும் உணர்ச்சியுதவும் வேதம் வேதியர் விரிஞ்சன் முதலோர் தெரிகிலா ஆதி தேவர் – தன் பரத்துவ நிலையினின்றும் தான் மாறுபடாமல், தன்னிடமிருந்து தோன்றி எழுந்து வளரும் பலவகைப்பட்ட சராசரப் பொருள்களின் வடிவங்களிலிருந்தும் தான் வேறுபடாது நின்று, பலமுறை ஓதி ஆராயுந்

தோறும் புதிய நல்லறிவை ஊட்டியருளும் நான்கு வேதங்களும், அவ்வேதங்களை ஓதி யுணரும் அந்தணர்களும் பிரமன் முதலான தேவர்களும் ஆராய்ந்து முற்றும் அறிந்து கொள்ள முடியாத முதற் கடவுளின் அவதார மான இராமபிரான் (3 - 1)

பேர் அளிக்குப் பிறந்த இல் ஆயினன் - பெரிய கருணைக்குப் பிறப்பிடமாக உள்ளவன் (4 - 34)

பேரழகினன் (4 - 81)

பேரறிவினன் (4 – 81)

பேராயிரங்களுடையான் (6 - 2197)

பேரிசையாளன் - பெரும் புகழுக்குரியவன் (3 - 1160)

பேரெழில் தழைத்த வீரன் - மிக்க அழகு நிரம்பிய மாவீரன் (4 - 332)

பேரெழிலான் (4 - 366)

பைந்தார்த் தோளன் இராமன் (4 - 491 ; பைந்தார்- புதிய மலர் மாலை)

பைந்தார் வரதன் - பசிய பூமாலையணிந்த வள்ளல் (1 – 1314)

பைந்துழாய்த் தெரியலான் – பசிய துளவுமாலை யணிந்தவன் (2 - 275)

பொங்கு மாதவமும் ஞானமும் புணர்ந்தோர் யாவர்க்கும் புகலிடமான செங்கண்மால் (1 - 99)

பொய்யடை உள்ளத்தார்க்குப் புலப்படாப் புனிதன் (4 – 379)

பொய்யிலாதவன் - சத்திய சந்தன் (6 - 1169)

பொய்யிலான் (4 - 404)

பொருசிலை மேகம் - பொருகின்ற வில்லைத் தாங்கிய மேகம் போன்றவன் (6 - 2636)

பொருசிலை வீரன் - போர்க்குரிய வில்லையுடைய வீரன் (3 - 218)

பொருதிறத்தான் - போரில் வல்லவன் (3 - 279)

பொருப்பனையான் - மலை போன்ற தோற்றம் வாய்ந்தவன் (3 - 823)

பொருப்பு ஏந்திய தோளான் (2 - 627)

பொருவரிய வேனில் மதனை மதனழித்தான் (2-517)

பொருவரு மணி மார்பன் - ஒப்பற்ற அழகிய (கௌத்துவ மணியுடைய) மார்பன் (2 - 692)

பொருவலியிராமன் - போரிடும் ஆற்றல் மிக்க இராமன் (6 - 907)

பொருவில் வேத வேந்தன் (6 - 4008)

பொருள் - முதற் பொருள் (1 - 1322)

பொலங் கொண்டல் அனைய மேனிப் புரவலன் - 6 - 2881 ; பொலம் - அழகிய)

பொன் ஆர் சிலை உரவோன் - அழகிய அரிய வில் வன்மையுடையவன் (1 - 1363)

பொன் ஆர் வலயத் தோளான் (2 - 370)

பொன் திரள் புயக் கருநிறக் களிறு - அழகிய

திரண்ட கைகளையுடைய, கரிய நிறம் பெற்ற யானை போன்றவன் (6 - 690)

பொன் நின்ற வயிரத் தோளான் – அழகு தங்கி நின்ற உறுதியான தோள்களையுடையவன் (3 - 788)

பொன் நேர்வரு வரிவில் கரத்து ஒரு கோளரி போல்வான் -பொன்னை ஒத்து விளங்கும் கட்டமைந்த வில் ஏந்திய கரத்தையுடைய ஒப்பற்ற சிங்கம் போன்றவன் (6 - 3348)

பொன் பொழி தடக்கைப் பெகருவில் வீரன் - இரப் போர்க்குப் பொன்னை மிகுதியாகச் சொரிந்தரு ளும் பெரிய கைகளையுடைய ஒப்பற்ற வீரன் (5 – 1265)

பொன் மொய்த்த தோளான் – திருமகள் அகலாது தங்கியுள்ள தோள்களையுடையவன் (5 - 572)

பொன்னின் முன்னம் ஒளிரும் பொன் (2 - 356)

பொன்னுடைச் சிலையினன் - அழகிய வில்லையுடைய வன் (4 - 210)

பொன்னுடை , வனைகழல் , பொலம்கொள் தாளி னன் (1 – 1377 ; பொன்னுடை - பீதாம்பரம் ; பொலம் - பொன்)

பொன்னுயிர்த்த பூமடந்தையும் புவியெனுந் திருவும் இன்னுயிர்த்துணை இவன் என நினைக்கின்ற இராமன் (2 – 40)

பொன்னெடுங் குன்றம் அன்னான் (1 - 407)

பொன்னே உற்ற பொலங் கழலோன் (2 - 516)

போதகம் அனையவன் (1 - 752 ; போதகம் - யானைக் கன்று)

போதம் முதல் வேத முதல் நாதன் (6 - 1707)

போர் அணங்கு இடங்கர் கவ்வப் ' பொது நின்ற முதலே ! ' என்ற வாரணம் காக்க வந்தான் - போரிட்டு எதிர்த்துத் துன்பத்தைத் தரும் முதலை கவ்விக் கொள்ள , ' எல்லாவற்றிற்கும் பொதுத் தன்மையாக விளங்குகின்ற ஆதிமூலப் பொருளே ! ' என்று அலறிக்கூவ அவ்வாறு கூவிய கஜேந்திரன் என்னும் யானையைக் காக்க அன்று ஓடி வந்தவன் (5 - 1121)

போர் அணி பொலன்கொள் வேலோன் - போர் செய்தலே தன் அணிகலமாய்க் கொண்ட அழகிய வேலை உடையோன் (3 - 269)

போர் அரிந்தமன் - போரில் பகைவரை அடர்க்க வல்லவன் (6 - 3325)

போர் உவந்திருந்த வீரன் (3 – 418)

போர்த் தொழிற் குமரன் - போரில் வல்ல இராமன் (1 - 454)

போர் வலான் – போரில் வல்லவன் (2 - 575 ; 3 - 940)

போர் வித்தகன் (6 - 4162)

போர் வில்லான் (5 - 654)

போர் வில்லி-போரில் சிறந்து விளங்கும் வில் வீரன் (3 - 740)

போரேறு - போரில் வல்ல இடபம் போன்றவன் (1 - 766)

மகளிர்க் கெல்லாம் நஞ்சு எனத் தகையவாகி நளிர் இரும் பனிக்குத் தேம்பாக் கஞ்சம் ஒத்து அலர்ந்த செய்ய கண்ணன் (4 - 58; நளிர் இரும் பனிக்குத் தேம்பா - குளிர்ச்சியுடைய பெரும் பனிக்கு வாடாத)

மஞ்சன் - மைந்தன், வலிமையுடையவன் (1 - 1257 ; 2 - 625 ; 3 - 174 ; 4 - 47)

மஞ்சு அன்ன மேனியான் (1 - 1149)

மஞ்சு எனத் திரண்ட கோல மேனியன் - மேகம் போல நீலநிறங் கொண்டமைந்த அழகிய திரு மேனியுடையவன் (4 - 58)

மடல் சேர் தாரான் - பூவிதழ்களாலான மாலையுடை யவன் (1 - 620)

மண் கடந்து அமரர் வைகும் வான் கடந்தான் - திரிவிக்கிரமனாகி இவ்வுலகத்தையளந்து தே வர்கள் தங்கும் விண்ணுலகத்தையும் அளந்து கடந்த திருமாலின் அவதாரம் (1 - 1146)

மண்ணிய மணிநிற வண்ணன் - தூய்மை செய்த நீல மணிபோலும் திருமேனி நிறமும் அழகு முடையவன் (1 - 1379 ; பரசுராமர் கூற்று)

மண்ணினைக் காக்கின்ற மன்னன் மைந்தன் (1-452)

மண்ணோர் உயிர் - உலகில் உள்ளோர்க்கு உயிர் போன்றவன் (6 - 2618)

மணிப் பூணினன் (1 - 394)

மதவியல் களிற்றினன் - வலிமை பொருந்திய களிறு போன்றவன் (2 - 1198)

மதனன் அஞ்சுறு வடிவன்-மன்மதனும் வெட்கி முன் னிற்க அஞ்சும் திருமேனி யழகமைந்தவன் (4 - 51)

மதனை மதனழித்தான் - (தன் பேரழகால் மன்மதன் செருக்கையழித்தவன் ; பேரழகன் (2 - 617)

மதுரவாரி அமுது (2 - 633)

மரகதக் கிரியன்னன் (4 - 94)

மரகதச் சயிலம் (6 - 4279)

மரகத மேனிச் செங்கண் வள்ளல் (6 - 4079)

மராமரம் இவையென வளர்ந்த தோளினன் (1 - 800)

மராமரம் ஏழ்தொளை எய்த எய்தவன் (1 - 5)

மருவினிய குணத்தவன் - தழுவி ஏற்றுக்கொள்வ தற்கு இனிய நற்குணம் வாய்ந்தவன் (3 - 203)

மல்குவடு அனைய திண் தோள் மானவன் - வலிய மலைச் சிகரத்தை ஒத்த உறுதியான தோள்களை உடைய, மனுவழியில் தோன்றியவன் (6 - 779)

மல்லினும் உயர் தோளான் (2 - 691)

மலர்மேல் அயன்றன் முதலோர்தந் தாதை தாதை யிறைவன் (6 - 2186 ; கருடன் கூற்று)

மலையின் தோற்றத்தான் - மலை போன்ற கம்பீரமான காட்சியுடையவன் (3 - 235)

மழைக் குன்றம் அனையான் (2 - 299)

மழைமுகில் அனைய அண்டர் நாயகன் (2 - 57)

மழையன்னான் (1 - 411)

மழையின் மேனியான் - மேகம் போன்ற மேனியான் (6 - 1479)

மழையே அனையான் (2 - 337)

மழை வண்ணத்து அண்ணல் (1 - 551)

மழை வண்ணன் (6 - 3761)

மற்கு நோக்கிய திரள் புயத்து அண்ணல் - மற் போரை எதிர்நோக்கிய பருத்த தோள்களை யுடைய பெரியோன் (3 - 970)

மற்கொள் தோளவன் (6 - 2459)

மறத்தார் குலம் முதல் வேரற மாய்ப்பான் இவண் வந்தான் - பாவிகளின் கூட்டம் மூலவேர் அற் றுப் போமாறு அவர்களைக் கொல்லுமாறு இவ் வுலகில் வந்தவதரித்தவன் (6 - 3009)

மறலி அஞ்சுறு விறலன் - யமனும் கண்டு அச்சங் கொள்ளும் வீரப் பெருமித முடையவன் (4 - 51)

மறைகளின் வரம்பு கண்டவன் (2 - 1145 ; வசிட்டர் கூற்று)

மறைகளுக்கு இறுதி யாவார் (5 - 1)

மறைகளும் முனிவர் யாரும் மலர்மிசை அயனும் மற்றைத் துறைகளின் முடிவுஞ் சொல்லுந் துணிபொருள் (4 - 360)

மறைகளை மறைந்துபோய் வனத்துள் வைகுவான் (2 - 572)

மறைகளே தேறத் தக்க வேதியர் வணங்கற்பால இறையவன் (6 - 3107)

மறை தந்துளான் - வேதங்களை ஆதியில் வெளியிட் டருளியவன் (6 - 3904)

மறை திறம்பாத வாய்மை மன்னர்க்கு மனுவிற் சொல்லும் துறை திறம்பாமற் காக்கத் தோன்றி ஞன் (4 - 303)

மறை தேடும் காரணம் - மறைகளால் நாடப்படும் காரணப் பொருளாயிருப்பவன் (6 - 815)

மறை பிழையாதவன் - வேத நெறி தவருதவன் (2 - 1145)

மறை முதல் தனி நாயகன் - வேத முதல்வனும் ஒப்பற்றவனுமான இராமன் (6 - 3741)

மறையவர் வலி - மறையவர்க்குத் துணைவலியாய் இருப்பவன் (6 - 3304)

மறையிற் கூறும் எள்ளலாகாத மூலத்து யாதுக்கும் முதலான் - வேதங்களால் சொல்லப்படும் எவ ரும் இகழ்தற்கு முடியாத மூலப்பொருள்கள் யாவற்றுக்கும் ஆதி மூலம் (6 - 601)

மறையின் கேள்வன் - வேத நாயகன் (2 - 1079)

மறையின் தெளிவு - வேதங்களினால் முதற்பொருள் என்று தெளியப் பெற்றவன் (6 - 2619)

மறையின் வாழ்வு - வேதங்கட்கு இருப்பிடமானவன் (6 - 600)

மறையும் தடவுதல் அறிவரு தனி முதலவன் - வேதங்களும் தேடியறிய முடியாத ஒப்பற்ற முதல்வன் (1 – 311)

மறை பிழையாதவன் - வேத நெறி தவறாதவன் (5 - 1145)

மறையோன் – வேதங்களால் புகழப்படுபவன் (6 – 2190)

மன் - தலைவன் (2 - 1030 ; 3 - 951 ; 1106 ; 5 - 505 ; 637 ; 6 - 3439 ; 4110)

மன்மதன் மேனியன் (3 – 365)

மன்னர் பிரான் (6 - 1708)

மன்னர் மன்னவன் செம்மல் (3 - 538)

மன்னர் மன்னவன் மதலை - தசரதன் மதலை (3 - 436)

மன்னவர்க் கரசன் (6 - 177 ; 774 ; 4208 ; 4297)

மன்னவர்க் கரசன் மைந்தன் - தசரதன் மைந்தன் (4 - 366)

மன்னவர் தம் மன்னன் மகன் - சக்கரவர்த்தி திரு மகன் (6 - 3633)

மன்னவர் மன்னன் (6 - 876)

மாண்பால் உலகை வயிற்றெளித்து வாங்குபவன் - தன் தெய்வத் திறத்தால் பிரளயத்தில் உலகங்களை அழியாமல் தன் திருவயிற்றினிடம் மறைத்து வைத்துக் காத்துப் பின் தன் வயிற்றினின்றும் வெளியிடுபவன் (3 - 1174)

மாமறை அமலன் - பெரிய வேதங்களால் கூறப்படும் அமலன் (6 - 3648)

மாயப் பிறவியின் பகைஞன் - மாயையினுல் நிகழும் பிறப்பின் பகைஞன் (6 - 2206)

மாயமா கூத்தன் – மாயையில் வல்ல கூத்தன் ; அகடி தகடனு சாமர்த்தியமுடையவன் (6-1519)

மாயவன் (4 - 153)

மாயன் (2 - 96 ; 6 - 3)

மாயிரு விசும்பிற் கங்கை மண்மிசையிழித்தோன் மைந்தன் - பகீரதன் வழித் தோன்றல் (1 - 541)

மால் - திருமால் (1 - 404 ; 4 - 304 ; 6 - 3834)

மால் தரும் பிறவி நோய்க்கு மருந்து (4 - 376 ; வாலி கூற்று)

மானவக் குமரன் - மனுகுலத்திலுதித்தவன் (3 - 1187)

மானவர் கோன் (4 - 967)

மானவர் தலைமகன் - மனுவழியிற் சிறந்தவன் (4-666)

மானவன் - பெருமை சான்றவன் ; மனுவழியில் தோன்றியவன் (1-772 ; 1371 ; 2 – 301 ; 552 ;

4 - 78 ; 432 ; 564 ; 605 ; 630 ; 674 ; 5 - 692 ; 6 - 779 ; 1992 ; 2863 ; 3374 ; 3387 ; 3922 ; 4213)

மிதிலை புக்கு அணையும் நாள் எல் உறுப்பு அரிய பேர் எரி சுடர்க் கடவுள் தன் பல்லிறுத்தவன் வலிக்கு அமை தியம்பக மெனும் வில் நயந்து இறுத்தருளினான் – மிதிலை நகரையடைந்த காலத்தில் ஒளி வீசுங் கிரணங்களை உறுப்பாக உடைய அரிதாகிய பெரிய நெருப்புப் போல் ஒளியையுடைய சூரியனுடைய பற்களைத் தகர்த்து உதிருமாறு செய்தவனானசிவபிரானின் வலிமைக்கு ஏற்றதாய் அமைந்த திரியம்பகம் என்று சொல்லப்பெறும்வில்லை விருப்பமேலிட்டு எடுத்து ஒடித்தருளியவன் (4 - 84)

மிளிர் சங்கை அங்கை உடையான் (6 - 2193)

மின் இவர் வரிவில் செங்கை இராமன் - ஒளிவீசுகின்ற கட்டுக்களையுடைய வில்லைப் பிடித்த செம்மையான கையை உடைய இராமன் (6 - 3645)

மின்மினி ஒளியின் மாயும் பிறவியை வேரின் வாங்கச் செம்மணி மகுடம் நீக்கித் திருவடி புனைந்த செல்வன் தன்முனார் (6 - 441 ; செல்வன் - பரதன் ; வீடணன் கூற்று)

மின்னின் மின்னும் வரிவிற் குமரன் (2 – 356)

மின்னுஞ் சிலையான் – ஒளி வீசும் வில்லையுடையான் (3 - 1061)

மின்னுடை நேமியான் (1 - 1377)

மின்னுருக் கொண்ட வில்லோன் - மின்னல் வடிவை எடுத்து வந்தாற் போன்ற ஒளிகொண்டவில்லை யுடையவன் (4 - 73)

மீதுயர்ந்த தடம் பெரிய தோளான் - மேலோங்கிய மிகப் பெரிய தோளையுடையவன் (6 - 3333)

மீளி மொய்ம்பினன் – வலிய தோள்களையுடையவன் (3 – 43)

முகில்மேல் நிமிர்ந்த ஒளியான் - நீல மேகத்தினும் மிக்க நீல ஒளியுடையவன் (6 - 2185)

முடியாதான் - அழிவற்றவன் (6 - 1532)

முடிவிலாத மூர்த்தி (2 - 278)

முத்தனார் - எல்லா வினைகளினின்றும் விடுபட்டவன் (6 - 1465)

முத்தேவரின் மூல முதற் பொருளாம் தேவன் (3 - 904 ; சடாயு கூற்று)

முதல் நாயகன் (6 - 3001)

முதல்வர் மூவரையும் ஒப்பார் (3 - 608)

முதல்வன் – தலைவன் ; மூலப் பொருள் (4 - 67) ; 350 ; 6 - 3638 ; 3692)

முதலவன் (6 - 3042)

முதலவன் முதலிய முந்தையோர் பழங்கதையையும் புதுக்கிய தலைவன் (1 - 852; முதலவன் - ஆதித்தன் ; மனு)

முற்றிய பொருட்கெலாம் முடிவுளான் - உலகத்து நிறைந்துள்ள பொருள்கட்கெல்லாம் இறுதியில் அடைதற்குரிய பரம்பொருள் (6 - 1494)

முற்று இயல் சிலைவலாளன் - முற்றிய பண்பினை யுடைய, வில்வல்லான் (6 - 3575)

முன்பன் - வலிமையுடையவன் (2 – 278)

முன்பு பின்பு நடு இல்லான் - முன்பின் இடையில் லாமல் எக்காலத்தும் உள்ளவன் (6 - 2601)

முன்னவற்கு இது என்று எண்ணலாவதோர் மூலம் இல்லான் - தனக்கு முன்பு முன்னதாக உள்ளது இன்னது என்று கருதக் கூடிய ஒன்றான மூலப் பொருள் தன்னையன்றி வேறு இல்லாத ஆதி மூலப் பரம்பொருள் (3 – 1189)

முன்னவன் – யாவர்க்கும் முன்னோன் (1 - 415)

முன்னு வீரன் - யாவராலும் சிறப்பாகக் கருதப் படுகிற வீரன் (4 - 553)

முன்னே மூவுலகும் கொல்வான் பொங்கிய போர் வில்லான் (5 - 654)

முனிவு இலாதான் - கோபம் சிறிதும் இல்லாதவன் (4 - 311)

முனை வீரன் - போர் வீரன் (5 - 318)

மூரி நீர் அண்டம் எல்லாம் முன்னம் வயிற்றிடைக் கொண்ட ஆரியன் (6 - 1177)

மூரிவில் கரன் - வலிய வில் ஏந்திய கையன் (4 - 48)

மூலத்து அரும்பரம் - மூலப் பொருளான அரிய பரம் பொருள் (3 - 49)

மூலம் - எல்லா வுலகங்களுக்கும் மூல காரணன் (1 - 1304 ; 6 - 397)

மூலமாய் முடிவிலாத மூர்த்தி (2 - 278 ; மக்கள் கூற்று)

மூலமுதலாய் இடையுமாய் இறுதியாய் எவையும் முற்றும் முயலுங் காலம எனலாயினன் (6-3376)

மூலமும் நடுவும் ஈறும் இல்லதோர், மும்மைத்தாய காலமுங் கணக்கும் நீத்த காரணன் (5 - 1122)

மூலமேயில்லாத முதல்வன் - தன்க்கு முந்திய மூல காரணமான பொருள் வேறென்று இல்லாமல், யாவற்றுக்கும் ஆதிகாரணனாய் உள்ளவன் (3 - 1172)

மூவகை யுலகிற்கும் முதல்வன் (1 - 1292 ; கவிக் கூற்று)

மூவகையுலகுங் காக்கும் முதலவன் (6 - 2946)

மூவகையுலகும் ஏத்தும் முதலவன் (6 - 3042)

மூவர்க்கும் முதல்வர் ஆன மூர்த்தியார் (6 - 1354)

மூவராய் முதலாகி மூலமுமாகி ஞாலமு மாகும் அத் தேவ தேவர் பிடித்த போர்வில் ஒடித்த சேவகன் (2 - 249)

மூவுலகத்தவரும் முதலோரும் ஏவல் வலத் தொழில் வீரன் - மூன்று உலகங்களிலுள்ளவர்களையும்

முதல்வரான தெய்வங்களையும் ஏவல் கொள்ளக் கூடிய வலிய தொழிலையுடைய வீரன் (6 - 2779)

மூவெழு முறைமை (அரசர்) குலங்கள் முற்றுறப் பூவெழு மழுவினால் பொருது போக்கிய சேவகன் சேவகஞ் செகுத்த சேவகன் (2 - 79)

மூன்று கவடாய் முளைத்து எழுந்த மூலம் - மும் மூர்த்திகளாய்த் தோன்றி விளங்கி அம் மூவர் களுக்கும் மூலமான பரம்பொருள் (3 - 1171)

மூன்றுருவெனக், குணம் மும்மையாம், முதல் தோன் றுருவு எவையும் அம்முதலைச் சொல்லுதற்கு ஏன்று உரு அமைந்தவும் இடையில் நின்றவும் சான்றுரு பரம்பொருள் மூன்று குணங்களாய் அமைந்த மும்மூர்த்திகள் என்று சொல்வது போலச் சிருட்டியில் காணப் பெறும் சராசரப் பொருள்கள் யாவும் அப் பரம் பொருளையே சொல்லும்படி அமைந்தனவான மூர்த்தி வடி வங்களாய் விளங்கும் உருவத் திருமேனிகளும், அவ்விரண்டுக்கும் இடையே நின்ற சீவன் முக் தர்களும் ஆகிய யாவற்றிற்கும் ஓர் உருவச் சான்ருக அமைந்தவன் (4 - 1)

மூன்றுலகினுக்கு ஒரு முதல்வனுய் முதல் தோன்றி னன் (2 - 958 ; பரதன் கூற்று)

மூன்றுலகும் ஈன்றுளை முன்னீன்றுன் (2 - 1067)

மெய் அறமூர்த்தி - மெய்ம்மையான அறவடிவன் (5 - 1120)

மெய்த்தலை நின்ற வீரன் - சத்தியத்தில் ஊன்றி நின்ற வீரன் (4 - 426)

மெய்ப் பொருள் (1 - 309 ; 4 - 376)

மெய்யன் (6 - 886 ; 2620)

மெய்யின் மெய் (2 - 356)

மெய்யினுக்கு இன்னுயிர் ஈந்து போய் வானுள் எய்திய மன்னவன் மைந்தன் (6 - 4123)

மெய்யே பிறந்தேயும் பிறந்திலாதான் - உண்மையாகப் பிறந்திருந்தும் ஒரு காலத்தும் பிறப்பில்லாத பரம்பொருள் (6 - 2158)

மேகத் தனி நெடுவில்லி - காளமேகம் போன்ற நெடுவில் ஏந்தியவன் (3 - 458)

மேகநிற வண்ணன் (3 - 176)

மேகம் ஒப்பான் (6 - 1732)

மேகமே அனையான் (6 - 3286)

மேல் ஒரு பொருளும் இல்லா மெய்ப்பொருள் (4-376)

மேல் நாள் தாழி தரையாகத், தண்டயிர் நீராகத், தடவரையே மத்தாகத் தாமரைக் கை நோவ ஆழி கடைந்து அமுதம் (தேவர்கட்கே) ஈந்தான் (3 - 102)

மேல் நின்ற விதிக்கு நாயகன் - எல்லாவற்றிலும் மிக்குத் தோன்றுகின்ற ஊழ்வினைக்குத் தலைவன் (6 - 933)

மேலவன் - மேன்மை பெற்றவன் (6 - 381 ; 2364)

மேலோன் (2 - 434)

மேவாத இன்பமவை மேவி மேவ நெடுவீடு காட்ட முடியாய் ஆவான் - தன் அடியார்கள் பிறரால் எளிதிலடையப் பெருத இன்பங்களைப் பெற்றுப் பின் பரமபதத்தில் தன்னைச் சார்ந்தாராக அவர்க்கு விசாலமான முத்தியுலகைக் காட்டற்கு முதல் தலைவனாக விளங்குபவன் (6 - 2187)

மைத்திரு நிறத்தான் (6 - 1621)

மைந்தன் - சக்கரவர்த்தி திருமகன் ; வீரன் (1 - 529 ; 710 ; 2 - 74 ; 3 - 143 ; 222 ; 4 - 110)

மைந்தனர் (1 - 764)

மொய்ம்பினன் - வலிமையுள்ளோன் (4 - 126)

மொய்ம்மாண் கழலோன் - செறிந்த மேன்மையுடைய வீரக்கழலையணிந்தவன் (1 – 169)

யார்க்கும் இறையவன் இராமன் (6 - 1340)

யார்க்கும் இன்னுயிர் (2 - 270)

யார்க்கும் சான்று என நின்ற வீரன் (4 - 375)

யாரினும் புனிதன் (4 - 111)

யாரும் மறக்கலா நாம நம்பி (2 - 236)

யாரும் யாவையும் எல்லா உலகத்தும் தொழுந் தாள் வீரன் (5 - 187)

யாவர்க்குங் களைகண் ஆகிய புண்ணியன் - எல்லா

உலகத்தவர்க்கும் பற்றுக் கோடாகியவன் (1 - 1379)

யாவர்க்கும் ஆதி - யாவர்க்கும் முதன்மையானவன் (1 - 1376)

யாவர்க்கும் இறைவன் (6 - 3862 ; வீடணன் கூற்று)

யாவர்க்கும் எழுத ஒண்ணுத் தன்மையன் இராமன் (3 – 620)

யாவரும் எவையுமாய் இருதுவும் பயனுமாய்ப் பூவும் நல் வெறியும் ஒத்து ஒருவரும் பொதுமையான்- எல்லா உயர்திணைப் பொருள்களுமாகியும், இளவேனில் முதலிய ஆறு பருவங்களும் அவற்ருல் அடையக் கூடிய பலன்களும் ஆகியும், மலரும் மணமும் போல ஒன்று கூடி நீங்குதல் இல்லாத பொதுப் பொருள் ஆவோன் (4-752)

யான் எனது எண்ணம் தீர்ந்தார் எண்ணுறும் ஒருவன் - யான்', 'எனது' என்று நினைப்பதை விட்டு நீங்கியவர்தம் உள்ளத்தில் நினைக்கும் ஒப்பற்றவன் (6 - 2786)

வசை இல் ஐயன் (1 - 593)

வடித்த குனி வரிசிலைக்கை மைந்தன் (1 - 710 ; வடித்த - எடுப்பாக அமைந்த ; மைந்தன் - வீரன்)

வடிமழுவாளவற் கடந்த மைந்தன் - பரசுராமனை வென்ற வீரன் (2 – 100)

வண்டு அலம்பு அலங்கல் தங்கு பங்கியோடும் வார் சிலைக் கொண்டல் (1 - 789)

வண்ணக் குனிசிலைக் குரிசில் (6 - 4197)

வண்துழாய்அலங்கலான் (6 - 393)

வண்துழாய்க் கண்ணியன் - வளப்பமான துழாய் மாலை சூடுபவன் (1 - 1379)

வணங்கு வில் இறுத்தவன் - தனக்கு எளிதில் வணங்கிய வில்லை ஒடித்தவன் (1 - 1232)

வதனம் வாய் கண் கை கால் எனப் புண்டரீகத் தடம் பூத்துப் பொற்சிலை மண்டலந் தொடர்ந்து மண் டலந் தொடர்ந்து மண் வயங்க வந்ததோர் கொண்டலின் பொலிதரு கோலத்தான் (6 - 1483 ; பொற்சிலை மண்டலம் - அழகிய வில் வட்டம்)

வயங்கு சீரான் – விளங்குகின்ற சிறப்பினையுடைய வன் (6 - 4306)

வரங்களின் வாரி - வரங்கள் நிறைந்து விளங்கும் கருணைக் கடல் (6 - 443)

வரதன் - வேட்டார்க்கு வேட்ட வரங்கள் தருபவன்; அடைந்தோர்க்கு வரம் அருளும் பிரான் (1-308; 1314 ; 2 - 156 ; 432 ; 592 ; 3 - 153 ; 883 ; 6 - 1612 ; 4022 ; 4285 ; 4319)

வரம் தரு வள்ளல் (4 - 349 ; வாலி கூற்று)

வரம்பில் கேள்வியான்-எல்லையற்ற நூற் கேள்வியை

உடையவன் (6 - 382)

வரன் - சான்றோன் ; மேலானவன் (4 - 667)

வரிசிலை ஒருவன் (6 - 1634)

வரிசிலைக் குரிசில் (6 - 4163)

வரிசிலைக் குரிசில் மைந்தன் (4 – 60)

வரிசிலைக் கை நம்பி (2 - 621)

வரிசிலைத் தடக்கையன் (1 - 610)

வரிசிலை நெடியோன் பேர் படைத்தவன் (6 - 2558)

வரிசிலை யண்ணல் (1 – 592)

வரிசிலையன் (4 - 45)

வரிசிலையுழவன் - கட்டுக்கள் அமைந்த விற்போரில் வல்லவன் (3 - 111)

வரிசிலை வடித்த தோளன் - கட்டமைந்த வில் தொழிலில் பயின்ற தோளை உடையவன் (3 - 275)

வரிசிலை வள்ளியோன் (4 - 682)

வரிவில் ஏந்தல் (2 – 1104)

வரிவில் கைமதயானை - கட்டமைந்த வில்ஏந்திய துதிக்கையுடைய மதயானை போன்றவன் (3 - 524)

வரி வில், வாள் கையன் (3 - 365)

விரிவிற் குமரன் (2 - 356)

வரிவெஞ் சிலையினேன் – கட்டமைந்த கொடிய வில் ஏந்தினேன் (5 - 611)

வருங் கடகம் அங்கையினில் வள்ளல் - தன் அழகிய

கையில் கேடகம் அணிந்த கருணைக்கடல் (6 - 697)

வருந்தித் தான்தரவந்த அமுதையும் அருந்து நீரென்று அமரரை ஊட்டினான் (2 - 648)

வருவான் போல வாராதான் - உணர்வினால் தெளியப்பட்டவன் போன்று அறிவுக்கு எட்டாதவன் (6 - 2602)

வரைப் புயத்து அண்ணல் (2 - 480)

வரையினும் வளர்ந்த தோளன் - மலைகளைவிட மேலாக வளர்ந்து விளங்கும் தோள்களை உடையவன் (4 - 65)

வல் இயல் மறவன் - வலிய தன்மை வாய்ந்த வீரன் (5 - 506)

வல்வில் இராமன் (3 - 702)

வல்வில் கை வீரன் (6 – 714)

வலி சேவகன் – வலிமை மிக்க வீரன் (5 - 494)

வலி யார் உடையார் என்றான் மழுவாளுடையான் வரவும் சலியா நிலையான் - என்போன்ற வலிமையுடையவர் யார் என்றவனாகிய பரசுராமனின் வருகையாலும் சலிக்காத நிலையையுடையவன் (2 - 360)

வழுவாத வர்க்கும் வரம் ஈய வல்லான் – தவறாமல் வழிபடுவோர்கட்கெல்லாம் அவரவர் விழைந்த வரங்களைத் தரும் வன்மையுடையவன் (6 - 2188)

வழுவிலா வாய்மை மைந்தன் - குற்றமில்லாத வாய்மையாளன் (3 - 222)

வள்ளல் (1 - 358 ; 555 ; 643 ; 732 ; 766 ; 771 ; 791 ; 873 ; 1151 ; 1156 ; 1181 ; 1312 ; 1336 ; 2 - 104 ; 122 ; 239 ; 271 ; 285 ; 395 ; 515; 524; 590 ; 591 ; 614 ; 657 ; 1042 ; 3 - 63 ; 107 ; 149 ; 211 ; 266 ; 268 ; 309 ; 417 ; 458 ; 486 ; 535 ; 775 ; 798 ; 860 ; 863 ; 1111 ; 4 – 35 ; 123 ; 167 , 193 ; 196 ; 267 ; 309 ; 349 ; 362 ; 364 ; 416 ; 730 ; 5 - 39 ; 6 - 8 ; 425 ; 443 ; 572 ; 600 ; 601 ; 612 ; 697 ; 712 ; 713 ; 913 ; 1210 ; 1545 ; 1556 ; 1859 ; 1872 ; 2011 ; 2131 ; 2139 ; 2181 ; 2527 ; 2644 ; 2650 ; 2831 . 2835 ; 3453 ; 3458 ; 3465 ; 3649 ; 3768 ; 3856 ; 3892; 3965 ; 3988 ; 4053 ; 4079 ; 4225 ; 4322)

வள்ளியோன் – வள்ளல் (3 – 417 ; 4 - 682)

வளைக்கலாத விற்கையாளி (1 - 791)

வன்திண் கைச்சிலை நெடும் தோள் மரகதத்தின் மலை - வலிமையும் உறுதியும் அமைந்த கைகளும், வில் ஏந்திய நீண்ட புயங்களுமுடைய மரகதமலை போன்றவன் (3 - 332)

வன்திண் சிலைக் குரிசில் (2 - 368)

வன்திண் சிலை வீரன் - வலிமையும் கனமு முடைய வில் வீரன் (3 - 94)

வன்திறல் இராமன் (4 – 856)

வன்பொறை நெஞ்சினன் - மிக்க பொறுமை கொண்ட மனமுடையவன் (5 - 583)

வனைகழல் குரிசில் - புனைந்த வீரகண்டையுடையவன் (6 - 4227)

வனைகழல் வரிசிலை மதுகை மைந்தன் - புனைந்த வீரக் கழல்களையும் கட்டுக்கள் அமைந்த வில்லையுமுடைய வீரமிக்க அரச குமாரன் (3 - 187)

வனைகழல் வரிசிலை வள்ளியோன் - நல்ல வேலைப் பாடமைந்த வீரகண்டையும் கட்டமைந்த வில்லையுமுடைய வள்ளல் (4 - 682)

வனைகழலிராமன் (5 – 426)

வனைந்த அனைய திருமேனி வள்ளல் – சித்திரத்தில் எழுதியது போன்ற அழகிய மேனியையுடைய வள்ளல் (1 - 766)

வாட்பெருந்தோளினன் - வாட்பயிற்சியில் தேர்ந்து பருத்துயர்ந்த புயங்களையுடையவன் (6 - 3984)

வாய்மைய மானவன் – உண்மையுள்ள பெருந்தகையான் (6 – 750)

வாய்மை யாவர்க்கும் சான்று என நின்ற அத்தரும மன்னவன் தோன்றல் (3 - 489 ; சான்று - எடுத்துக் காட்டு)

வாய்மையும் மரபும் காத்து மன்னுயிர் துறந்த வள்ளல் தூய்மையன் மைந்தன் (4 - 305)

(4 - 159)

வானவர் தனிமுதல் (1 - 305)

வானவர் பெருமான் - தேவர் தலைவன் (1 - 1255)

வானவன் – தேவன் (4 - 482 ; 5 - 60)

வாளுள்பவன் மைந்தன் - தசரதன் புதல்வன் (3 – 906)

வானின்று இழிந்து வரம்பிகந்த மாபூதத்தின் வைப்பெங்கும் ஊனும் உயிரும் உணர்வும் போய் உள்ளும் புறத்தும் உளன் (2 - 1)

வானினும் உயர்ந்த தோளான் (4 - 358)

வானினும் உயர்ந்த மானக் கொற்றவன் - வானத்தைக் காட்டிலும் உயர்ந்த பெருமை வாய்ந்த வெற்றியை உடையவன் (4 - 354)

வானுயர் தோற்றத்து அன்னான் – மிகவுயர்ந்த தவ வடிவை உடைய இராமன் (4 – 423)

வானையுந் திசையையுங் கடந்த வான்புகழ்க் கோன் 6 - 4153)

விடும் பாக்கியம் உடையார்களைக் குலத்தோடு அற வீட்டிப் பாக்கியம் இடும் அறம் காப்பதற்கு இயைந்தான் - பாக்கியம் இல்லாத அரக்கர்களை அவர்தம் குலத்தோடு முற்றிலும் அழித்துப் பாக்கியத்தை யளிக்கின்ற, அறத்தைக் காப்பதற்குத் தேவர் வேண்டு கோளால் ஒத்துக் கொண்டவன் (6 – 3011)

விடை - காளை போன்றவன் (6 - 2318)

விடையன்னதொர் நடையான் (2 - 623)

விண்ணவர் போற்ற நின்ருன் (6 – 3463)

விண்ணிடை இம்பர் நாகர் விரிஞ்சனே முதலோர்க்
கெல்லாம் கண்ணிடை ஒளி (3 - 276)

விண்ணினில் நிலத்தினில் விகற்ப உலகில் பேர்
எண்ணினில் இருக்கினில் இருக்கும் என
யாரும் உள்நினை கருத்து - தேவருலகத்திலும்
இப்பூவுலகத்திலும் மாறுபட்டுள்ள பிற பல்
வேறு உலகங்களிலும் பெரிய கணித நூல்களி
லும் வேதங்களிலும் எப்போதும் நிறைந்துள்ள
தென யாவரும் மனத்தில் நினைக்கின்ற பரம்
பொருள் (3 - 159)

விண்ணுறு கலுழன் மேல் விளங்கும் விண்டுவின்
கண்ணன் – ஆகாயத்தில் சஞ்சரிக்கும் கருடாழ்
வான் மீது எழுந்தருளி விளங்கும் விஷ்ணு
வாகிய திருமாலைப் போல விளங்கும் இராமன்
(5 – 678)

விண்பாலவர் நாயகன்- தேவர்களின் தலைவன் (5 -
69)

வித்தக வில்லினன் - வியக்கத் தக்க கோதண்டம்
எனும் வில்லையுடையான் (5 - 448)

வித்தகன் - பேரறிஞன் ; வியக்குந் தன்மையுடை
யான் (4 - 515 ; 5 - 1030 ; 1290 ; 6 - 391 ;

1498 ; 2365 ; 4078 ; 4283)

விதிக்கும் மேல் உளான் - பிரமனுக்கும் மேம்பட்டிருப்பான் (6 - 363)

விமலத்திண் சிலையன் - குற்றமற்ற உறுதியான வில்லையுடையவன் (6 – 778)

விமலன் - குற்றமற்றவன் (3 – 262 ; 1054 ; 4 - 42 ; 6 - 3733 ; 4040)

விரதியன் - தவவிரதம் பூண்டவன் (6 – 3156)

விராவரும் புவிக்கெலாம் வேதமே யன்ன இராமன் (2 - 146 ; விராவரும் - பரந்த)

விரை செறி கமலக் கண்ணன் (6 – 4087)

வில் அணைந்து உயர்ந்த தோள் வீரன் (2 – 1002)

வில் இயல் தடக்கை வீரன் (3 - 225)

வில் இயல் தோளவன் (2 - 102)

வில் இயல் மொய்ம்பினேன் - வில் வித்தையில் வல்லவன் (3 – 130)

வில் கரத்து இராமன் (4 - 152)

வில் கொண்ட மழையன்னான் - இந்திரவில்லைத்தன்னிடத்தே கொண்ட மேகம் போன்றவன் (4 - 411)

வில் தடக்கை வீரன் (4 - 232)

வில் தடந் தாமரைச் செங்கை வீரன் (2 - 460)

வில் பெருந் தடந்தோள் வீரன் (5 – 1273)

வில் மலை வல்லவன் - வில்லைக்கொண்டு போரிட வல்லவன் (3 - 234)

வில்லமரில் வல்லான் (3 - 608)

வில்லார் தோளான் - வில்பொருந்திய தோள்களை உடையவன் (2 - 884)

வில்லால் ஓரிமைப்பில் உலகு எழின் நல்மதன் நனி ஒழிப்பர் (3 - 605; மதன் = வலிமை)

வில்லாளன் - வில்லை ஆள்வதில் வல்லவன் (3 – 450 ; 802 ; 5 - 492 ; 6 - 1709 ; 3691)

வில்லி - வில்லாளன் (3 - 542 ; 4 - 932 ; 6 - 461 ; 2744 ; 3306 ; 3800 ; 4159)

வில்லின் செல்வன் 6 - 3947)

வில்லினன் (6 - 718)

வில்லிஞன் (6 - 701 ; 2394 ; 2439)

வில்லொடும் இழிந்ததோர் மேகம் - வானவில்லுடன் கீழிறங்கிய மேகம் போன்றவன் (1 - 608)

வில்வகைக் குமரன் - விற்போரில் பல வகைகளையும் அறிந்து தேர்ந்த சக்கரவர்த்தி குமாரன் (3 - 1029)

வில்வலன் – வில்லாற்றலில் வல்லவன் (6 - 1708)

வில்வலான் - விற்போரில் வல்லவன் (3 - 1152)

வில்வினை ஒருவன் . வில்தொழிலில் நிகரற்றவன் (6 - 1518)

விலங்கு எழில் தோளிஞன் - மலைகள் போன்று அழகிய தோள்களை உடையவன் (4 - 212)

விழுமிய குணத்து வீரன் (6 - 4051)

விறல் வீரன் - வலிமை வாய்ந்த சுத்த வீரன் (4 -318)

விறலோன் - வெற்றியுடைய வீரன் (3 - 113)

வினை கடந்தோர் ஆராயினும் தெரியாததொர் நெடுமாயையினகத்தான் - நல்வினை தீவினைகளினின்று விடுபட்டவர் எவரேயாயினும் அவர்க்கும் அறியலாகாதவொரு மிகப்பெரிய மாயையினுள்ளே யிருப்பவன் (6 - 3008)

வினையின் நீங்கிய வேதியர் விருந்தினன் ஆனான் (2 - 783)

வீக்கிய கனைகழல் வீரன் - கட்டிய ஒலிக்கும் வீரக் கழலையுடைய வீரன் (1 - 591)

வீங்கிய தோளினன் - பருத்த தோள்களையுடையவன் (4 – 203)

வீங்கு அ ாவணைப் பள்ளியான் - பருத்த அரவாகிய படுக்கை மீது பள்ளிகொண்ட திருமாலாம் இராமன் (5 - 532)

வீரச்சிங்கம் அன்னவன் (6 - 2443)

வீரமாளி - வீரத்தை ஆள்பவன் (6 – 3327)

வீர விற்கை இராமன் (6 - 3817)

வீர வெஞ்சிலையினோன் (3 - 19)

வீரருள் வீரன் (2 - 246)

வீரன் (1 - 309 ; 405 ; 414 ; 591 ; 639 ; 644 ; 1150 ; 1199 ; 1321 ; 1325 ; 1343 ; 1356 ; 1374 ; 2 -

150 ; 281 ; 286 ; 300 ; 460 ; 531 ; 592 ; 633 ; 662 ; 664 ; 670 ; 721 ; 792 ; 876 ; 1002 ; 1045 ; 1107 ; 1167 ; 3 - 23 ; 64 ; 94 ; 126 ; 133 ; 186 ; 189 ; 190 ; 191 ; 192 ; 207 ; 208 ; 218 ; 220 ; 225 ; 259 ; 262 ; 282 ; 283 ; 284 ; 285 ; 286 ; 302 ; 418 ; 427 ; 464 ; 473 ; 475 ; 501 ; 535 ; 537 ; 549 ; 550 ; 765 ; 772 ; 784 ; 1006 ; 1012 ; 1033 ; 1059 ; 1091 ; 1122 , 1123 ; 1166 ; 1167 ; 1186 ; 1195 ; 4 - 64 ; 68 ; 95 ; 99 ; 106 ; 149 ; 151 , 232 , 235 , 268 , 271 , 301 , 318 ; 320 , 332 , 375 , 426 , 496 , 553 , 647 ; 673 , 719 , 769 , 5 - 449 , 562 , 600 , 603 , 615 , 631 , 672 , 829 , 1129 , 1245 , 1265 , 1273 , 6 - 440 ; 714 , 717 , 748 , 778 , 925 , 953 , 954 , 955 , 1098 , 1101 , 1176 , 1236 , 1343 , 1362 , 1624 , 2152 , 2202 , 2397 , 2401 , 2409 , 2563 , 2799 , 2827 , 2828 , 2829 , 2866 , 2869 , 3019 , 3115 , 3262 , 3290 , 3294 , 3314 , 3512 , 3542 , 3643 , 3659 , 3717 , 3769 , 3806 , 3843 , 3891 , 3895 , 3902 , 3945 , 4026 , 4033 , 4051 , 4068 4070 , 4082 , 4167 , 4211 , 4240 , 4276)

வீரியன் - வீரன்(6 - 3301)

வெகுண்டெழும் இரா அனையான் ஆம் அவ்விரா தனை இராவகை துடைத்தருளினான் - தன்மீது கோபித்து வந்த இரவு போன்ற கருநிறத்தவனை அந்த விராதன் என்னும் அரக்கனை உலகில் உயிரோடு இராதபடி அழித்தருள் புரிந்தவன்(4 - 86)

வெங்கைச் சிலையன் - திருக்கரத்தில் கடுமையான (அல்லது விரும்பத் தக்க)கோதண்டம் என்னும் வில்லை ஏந்தியவன் (6 - 10)

வெஞ்சிலையினேன்(3 - 19)

வெஞ்சினத் தனுவல்லான் - பகைவர் மீது கொடுஞ் சினமுடைய , வில்லில் வல்லவன் (1 - 1313)

வெந்திறல் அரக்கர் விடவேர் முதல் அறுப்பான் வந்த மருத்துவன் - கொடிய வலிமை வாய்ந்த இராக்கதர்களாகிய விடவேரை அடியோடு அறுக்கும் பொருட்டு வந்த மருத்துவன் (3 - 161)

வெந்து எழு கொடுவினை வீழ்க்கும் மெய்ம்முதல்(1 - 247 , மெய்ம்முதல் - உண்மையான பரம் பொருள்)

வெம் கடம் துதைந்த காரியானை யன்ன காளை - வெம்மையுள்ள மதநீர் மிக்க கருநிற யானை போன்ற காளை (1 - 793)

வெம்பிணிக்கு மாமருந்து (3 - 336)

வெம்பு விற்கை வீரன் - கொடுமையுடைய வில்லைக் கையிற் கொண்ட வீரன் (3 - 64)

வெம் மடங்கல் - வலிமை மிக்க சிங்கம் போல் விளங்கிய இராமன் (5 - 348)

வெவ்வரம் பொருத வேலான் - கொடிய அரத்தினால்

வேதியர் முதலோர் யாருஞ் செய்த நல்லறப் பயன் (2 - 41)

வேதியர் வேதத்து மெய்யன் (6 - 3788)

வேதியர் வேதன் - வேதோத்தமர்களால் உணரப் படுபவன் (6 – 3931)

வேதியன் - வேதத்தால் விளக்கப் பெறுபவன் (1 - 1376 ; 6 - 1560)

வேந்தர்க்கு வேந்தன் (6 - 3644)

வேந்தர்பிரான் தயரதனுர் பணியினுல் வெங்கானில் விரதம் பூண்டு போந்தவன் (6 - 3880)

வேந்தருக்கு அரசன் (6 - 3415)

வேந்தன் (2 - 1047 ; 6 - 1497)

வேரியந் தெரியல் வீரன் - நறுமணமும் அழகும் அமைந்த மாலேயுடைய வீரன் (3 - 784)

வேல் இகல் சினவு தாடகை விளிந்து உருள விற் கோலி, அக் கொடுமையாள் புதல்வனேக் கொன்று தன் காலியற் பொடியினுல் நெடிய கற்படிவமாம் ஆலிகைக்கு உரியபேர் உருவு அளித்தருளினுன் (4 - 83 ; ஆலிகை-அகலிகை)

வேள்வி முற்றி விண்ணுலகோடு மாண்ட கார் இயல் கருணே யன்ன, கண் அகல் கவிகை மன்னன் சிறுவன் - யாகங்கள் பலவும் செய்து முடித்துத் தேவலோகத் தோடும் சேர்த்துப் புவியை ஆட்சி புரிந்த மேகத்தின் தன்மையான

கருணையே போன்றவனும், இடமெங்கும் அகன்று பரவிய கொற்றக் குடையை உடைய அரசனுமான தசரதன் புதல்வன் (4 - 70)

வேறுள்ள தெய்வ நாயகன் - வெவ்வேருக வழங்குகின்ற தெய்வங்கட்கெல்லாம் தலைவன் (6-933)

வேனில் மதனை மதனழித்தான் (2 - 617)

வேனிலான் மேனியன் – வேனிற் காலத்து இறைவனை மன்மதன் போன்ற பேரழகு வாய்ந்தவன் (6 - 2724)

வைய நாதன் (6 - 685)

வைய நாயகன் - உலகத் தலைவன் (6 - 557)

வையம் ஆளுடை நாயகன் (6 - 4047)

வையம் நிகர் கொற்றவன் - உலகம் முழுவதும் இன்புறுதற்குக் காரணமான அரசன் (1 - 1227)

வையம் முற்றும் வயிற்றின் அடக்கிய ஐயன் (1-1159)

பிற் சேர்க்கை.

அண்டர் நாயகன் (5 - 1269)
அண்ணல் (1 - 413 ; 592 ; 637 ; 704 ; 765 ; 1208 ; 1219 ; 1236 ; 2 - 480 ; 5 - 540 ; 564 ; 566)
அயனும் அறியாத பொருள் (3 - 160)
அருவினை அறுக்கும் ஆரியன் (1 - 450)
ஆண்டகை (5 - 562 ; 598 ; 672 ; 801)
ஆழியான் (5 - 833)
இராமன் (1 - 12 ; 309 ; 467 ; 543)
ஐயன் (1 - 313 ; 401 ; 465 ; 470 ; 556 ; 593 ; 741 ; 782 ; 1149 ; 1159 ; 1172 ; 5 - 1270 ; 1275 ; 1281 ; 1291 ; 1293)
கருநிறக் களிறு (6 - 690)
காகுத்தன் (2 - 529)
குமரன் (2 - 356)
கோலக் கொண்டல் (6 - 1375)
செங்கண் இராமன் (2 - 237)
சேவகன் (1 - 1244 ; 5 - 494 ; 625 ; 1026)
தன் கால் இயல் பொடியினல் நெடிய கற்படிவமாம் ஆலிகைக்கு உரிய பேர் உருவு அளித்தருளினான் (4 - 83 ; ஆலிகை - அகலிகை)
நம்பி (1 - 784 ; 1214)
நாயகன் (1 - 11 ; 645 ; 5 - 243 ; 334 ; 367 ; 390 ; 455 ; 494 ; 496 ; 528 ; 629 ; 827 ; 1016 ; 1020; 1106 ; 1125)
நெடியோன் (5 - 610)
மைந்தன் (3 - 187)

கம்பர் கண்ட இராமன்

1. உருவத் திருமேனி

இராமனது திருமேனி அழகெல்லாம் ஒருங்கே திரண்ட திருமேனி. அது அழகின் எல்லையைக் கொண்டது. மாற்றம் மனங்கடந்த மாண்பு நிறை இராமனின் உருவத் திருமேனியையும், அதன் ஒவ்வொரு அங்கத்தையும் உலகத்தே உயர்ந்த உவமைகள் மூலம் வருணிக்கப் புகுந்த கம்பர் அவ்வுவமைகள் எல்லாம் இராமபிரானின் திருவங்கங்கட்கு முன்னர் நிற்க ஆற்ருது தோற்ரேடுவதையும் காட்டுகின்ருர்.

யாவர்க்கும் எழுத ஒண்ணுத்தன்மையனுன இராமனே ஓவியம் வல்லார்கள் ஓவியத்தில் வரைய முடியாது வருந்துகின்றனர். பேரழகன் இராமனின் பேரொளி மேனியைத் தீட்டிக் காட்டுதற்கு வண்ணங்களுக்கு வன்மையில்லே. அழகுத் தெய்வமான மன்மதன் போன்ற மேனி இராமனுக்கு அமைந்தது எனக் கூறலாமோ வெனில் இராமனின் பேரெழில் மேனியைக் கண்டு மன்மதனே வெட்கி முன்னிற்க அஞ்சுகின்ருனே! ஏந்தெழில் இராமனின் உடலுறுப்புக்கள் ஒவ்வொன்றும் சமுதாய சோபை (Harmony of Beauty) யுடன் நல்லுறுப்புக்களாய் ஒளிர்கின்றன இராமன் என்ற சொல்லுக்கே அழகால் பிறரை மயக்குபவன், இன்புறுத்துபவன் என்பதுதானே பொருள்! பிறருக்கு அமைதல் அரிய திருமேனி

யுடைய இராகவனது தோற்றப் பொலிவைக் கண்டு அழகிற் சிறந்த தேவேந்திரனும் அஞ்சுறுகின்றான், நாணுறுகின்றான் !

இராமனது அழகு என்றும் குறையாது நிலை பெற்று ஒளிர்வதாகும் இராமன் சோதிச்சுடர்ப் பிழம்பான சுந்தரன். பல்லாயிரம் இருளைக் கிழித்த பகலோனைப் போன்று ஒளிரும் வில்லாளன். கலைகள் நிரம்பிய முழுமதி போன்று முழுமையழகைப் பெற்றவன் பார்த்தவர்கள் எல்லோரும் 'இவனை இன்னும் நீண்ட நேரம் பார்த்துக்கொண்டே யிருக்கலாமே!' என்று ஆசைப்படும்படியான சுடரொளியும் (தேசும்) இளமையும் சுந்தரமும் சேரப் பெற்றவன் ஆடவர் பெண்மையை அடைந்து சுவைக்கும் காம இன்பம் போன்றவன்.

அழியா அழகுடைய இராமனது திருமேனிக்கு அஞ்சனம், மரகதம், மறிகடல், மழைமுகில், பூஞ்சோலை, நீலமணி, கருமலை, பச்சிலை, காயாம்பூ, குவளை மலர், நீலோற்பலம், பானல் (கருநெய்தல்பூ) முதலிய பல பொருள்களை உவமையாக்குகிறார் கவிஞர் பிரான். கடல் வண்ணனாகிய இராமன் மலை போன்ற கம்பீரமான தோற்றத்தைப் பெற்றுள்ளான் இருண்ட மேகம் போன்ற நிறமுடையனாயினும் சோதியாய்ச் சுடராய்த் தோற்றமளிக்கின்றான். இராமன் வில் ஏந்தி வருங் காட்சி நீலக் கார்முகில் ஒன்று கமலம் பூத்து வானவில்லை ஏந்திவருவது போலக் காணப்படுகிறது அல்லையாண்டு அமைந்த மேனியழகனான இராமன் கருமுகிற் கொழுந்தின் எழிலையும் பெற்றுள்ளான் இந்திர நீலக் கல்லினி

டம் எழும் ஒளிக்கொழுந்தும், மரகதக் கல்லினின்று எழும் நீண்ட ஒளித்தொகுதியும் இராமனின் திருமேனியொளியைப் பெறுதற்குத் தவம் செய்து கொண்டிருக்கின்றன.

இராமனது திருமேனி தாமரை பூத்த தடாகமாகக் காணப்படுகிறது. அத்தடாகத்தில் உள்ள தாமரை மலர்கள் இராமபிரானின் கண்களும் வாயும், கரங்களும், திருவடிகளுமேயாம். இருட்கனி போன்ற இராமனது திருமேனி பார்க்கப் பார்க்கத் தெவிட்டாத அழகைப் பெற்றுள்ளது கோதண்டம் என்னும் வில்லேந்தியிருக்கும் இராமன் வானவில்லுடன் காணப்படும் மேகம் போலக் காணப்படுகிறான்.

சொல்லின் செல்வனாகிய அனுமன், 'இராமனது திருமேனி உவமானவாயிலாய்ச் சொல்லி நிரூபிக்கும் தன்மையுடையதன்று, நூல்கள் கூறும் முறைப்படி மிகச் சிறந்த உவமைகள் கூற முற்பட்டாலும் அவை சிறப்புள்ளவையாகா; ஏதோ ஒருவகை ஒற்றுமை பற்றிக் கூறினாலும் அந்த உவமைகள் இராமனின் அவயவங்களை முழுதுற வருணிப்பதற்கு முடியாதனவே' என்று கூறுகிறான். எனினும் இராமனது திருவுருவை மனக்கண்ணால் கற்பித்துக் காண்பதற்குக் கம்பரின் உவமைகள் ஓரளவு உதவுமாகலின் அவை ஈண்டு எடுத்துக் கூறப் பெறுகின்றன.

தலைமுடி

இராமனது தலைமயிர் இந்திர நீல மணியைப் போலக் கருநிறங் கொண்டதாயுள்ளது. தொடர்ச்சி

யான நீண்ட மழைக்கால் என்று சொல்லத்தக்க வாறு நீண்டு நுனி சுருண்டு நடுவே அடர்ந்து கரு நிறமாய்க் காணப்படுகிறது. இராமனது நறுங் குஞ்சி, 'நீண்டு குழன்று நெய்த்து இருண்டு நெறிந்து செறிந்து நெடுநீலம் பூண்டு புரிந்து சரிந்து கடை சுருண்டு புகையும் நறும்பூவும் வேண்டு மல்ல எனத் தெய்வவெறியே கமழ்' கின்றது.

திருமுகம்

இராமனது திருமுகம் எப்போதும் சித்திரத்தில் அலர்ந்திருக்கும் செந்தாமரை போலவே காணப் படும். அது எப்போதும் மிகுதியான ஒளி வீசும் தேசு (halo) உடையது. 'தடந்தாமரை போன்ற திருமுகத்தில் காணப்படும் வாயும் கண்களுங்கூடத் தாமரை மலர்களாகவே உள்ளன. இராமனது முழு மதி போன்ற திருமுகம் வெண்ணிறமான நிலவைப் பொழிவதற்குப் பதிலாகக் கருணைப் பெருக்கினல் அமுதத்தைப் பொழிந்துகொண்டிருக்கிறது.

நெற்றி

களங்கமும் தேய்தலும் வளர்தலும் வாளரவம் கவ்வப் பெறுதலும் இறத்தலும் பிறத்தலும் ஆகிய இவையெல்லாம் இல்லாத எண்ணாட்பிறைத் திங்களை ஒத்திருப்பது இராமனது நெற்றி.

கண்கள்

இராமனின் பெரிய கண்கள் அலர்ந்த செந்தா மரை போலச் சிவந்த நிறம் வாய்ந்தவை. இராமன்

நூறு இதழ்களையுடைய தாமரை போன்ற கண்களை யுடையவன். அதனால் தாமரைக் கண்ணன், கமலக் கண்ணன், முளரிக் கண்ணினன், செங்கண்ணன், தடமலர்க் கண்ணன், புண்டரிக நயனத்தான், நளின நாட்டத்தான் என்றெல்லாம் அழைக்கப் பெறு கிறான். இராமனது சிரித்த பங்கயம் ஒத்த செங் கண்கள் பார்க்கப் பார்க்க மேன்மேலும் புதுமையை உண்டாக்கத்தக்க அழகுடையவையாய் மிளிர்கின் றன. அவை கருணையால் குளிர்ந்து நோக்கும் பார்வையை உடையவை ஆனால் காணும் மகளிர்க் கெல்லாம் இராமனது கண்ணழகு நஞ்சாகித் தோன்றுகின்றது.

மூக்கு

நீலவண்ண நெடியோனது மூக்கு நீண்டு பச்சோந்தியைப் போலக் காணப்படுகிறது.

வாய்

செங்கனிபோன்றும் செந்தாமரை போன்றும் சிவந்துள்ள இராமனது திருவாய் சிந்துரப் பவழச் செவ்வாய் என்று வருணிக்கப்பட்டுள்ளது. வாயிதழ் கள் பவளம் போன்றும் தம்பலப் பூச்சி போன்றும் சிவந்து காணப்படுகின்றன. பச்சிலை வண்ணத் திருமேனியில் இராமனது சிவந்தவாய் எடுப்பாகத் தோன்றி அம்மேனியின் அழகை மிகுதிப்படுத்திக் காட்டுகிறது.

இராமனது செவ்வாய்க்கு உவமையாகக் கூறப் பெறினும் செந்தாமரை, பவழம் ஆகிய பொருள்கள்

அச்செவ்வாயினைப் போல் அமுதம் ஊறப் பெறுவதில்லை; இனிய மொழிகள் பேசுவதில்லை; வெள்ளிய பற்களைக் காட்டிப் புன்முறுவல் செய்வதில்லை.

பற்கள்

இராமபிரானது சிவந்த திருவாயில் காணப் பெறும் ஒளி பொருந்திய பற்களை முத்துக்கள் என்று சொல்லலாமோ, முழு நிலவின் கீற்றுக் களின் வரிசை எனலாமோ, அமிர்தத் துளிகளை வெள்ளியென்று சொல்லும்படி சேர்த்து வைக்கப் பட்ட வரிசை என்றுரைக்கலாமோ, முப்பத்திரண்டு தருமங்களாக முளைத்த முளைகளோ அல்லது வாய்மையாகிய மரத்தில் அரும்பின பூங்கொத்தின் தொகுதியோ என்று கூறலாமோ அல்லது வேறு உவமைகளைக் கூறலாமோ என்று வியந்து நிற்கின்றான் வாயுவின் குமரன்.

கழுத்து

இராமனது கழுத்துக்குக் கடலில் உண்டாகும் சங்கும், இளமையான கமுக மரமும் உவமையாகு மென்று பிறர் கூறுவர் ஆனால் திருமாலின் இடக் கரத்தில் பொருந்திய பாஞ்ச சன்யம் என்ற சங்கு ஒன்றுதான் அதற்குச் சிறந்த உவமை யாகும் சிறப்பைப் பெற்றுள்ளது

தோள்கள்

இராமபிரானின் பரந்த, வலிய, பெரிய, அழகிய, பொற்றோள்கள் மலைகளைப் போன்று பருத்து

உயர்ந்து திரண்டு மேலோங்கிக் காணப்படுகின்றன. அவை வரைகளைக்காட்டிலும் வானத்தைக் காட்டிலும் உயர்ந்து விளங்குகின்றன இராகவனின் சுந்தரப் பொற்றோள்கள் வாட்பயிற்சியால் தேர்ந்து பருத்து வலிய மலைச்சிகரங்களைப் போல் உறுதி வாய்ந்து சிறப்பமைந்து திகழ்கின்றன. தாண்டிச் செல்வதற்கும் அரிய பெரிய மலைகளையும் வென்று பின்னிடச் செய்து உயர்ந்து விளங்குகின்றன.

பொன்னாலான வாகுவலயம் அணியப்பெற்ற ஏந்தெழில் வாய்ந்த வீரனின் தோள்கள் முழவைப் போலவும் திரண்ட இரும்புத் தூண்களைப் போல வும் மிக்க வலிமை வாய்ந்தவையாய் உள்ளன. மற் போர்செய்வதில் தேர்ச்சி பெற்றுள்ளன. எப்போதும் மற்போரை எதிர்பார்த்துப் பருத்துக் காணப்படு கின்றன. இராமனது பெரும் புகழைத் தாங்கி நிற்ப தற்குரிய வலிமை வாய்ந்தவை அவை.

சுடர் வீசும் நீலமணி போன்ற அத்தோள் களுக்குச் சாதாரணக் கல்மலைகள் உவமையாகா. மேருமலை பொன்னிறத்தைப் பெற்றிருப்பதால் அது வும் ஒப்பாகாது. வேண்டுமானால் நீலமலையை உவ மையாகக் கூறலாம். இராமனது திரண்ட தோளின் வலிமை வடமேருவின் வலிமையை அழித்துவிடு கிறது.

இராமனின் தோள்களுக்கு மலைகளை உவமை யாகக் கூறினாலும் அத்தோள்களில் காணப் பெறும் திரட்சியோ. ஒளியோ, வென்றித்திருவோ அம்மலை களில் காணப்படுமாறில்லை. மேலும் வலிமையுடைய

மேருமலை போன்ற வில்லின் நாண் இராமனது தோளில் புரள்வது போல எந்த மலையிலும் புரளப் பெறுவதிலலை இராமன் தோள்களைப் போல அவை பிறரால் புகழப் பெறுவதில்லை மேலும் ஒன்று மற்றொன்றைப் போலச் சமமான இரண்டு மலைகள் (இராமனின் இருபுயங்களும் இணையாகக் காணப் படுவதுபோல) இவ்வுலகில் யாண்டும் இல்லை.

குன்றம் போன்று உயர்ந்த தோளில் கொற்ற வில் ஒன்று தாங்கி நிற்கின்றான் கொற்றவன். திரு மகள் (வீரலக்குமி) அகலாது தங்கியுள்ள அத்தோள்களைப் பைந்தாரும் பைம்பூணும் அணிசெய்து நிற்கின்றன. ஆடவர் திலகனான இராமனின் ஏந்து தடந் தோளினைக் கண்டு அவற்றைத் தழுவியின்பம் பெறுவதற்கு ஆடவரும் பெண்மையை அவாவி நிற்கின்றனர்.

மார்பு

இராகவனது அழகிய மார்பில் மலரிதழ்கள் மலர்கின்ற மாலை அசைந்து கொண்டிருக்கிறது. அணிகளால் விளங்கும் ஆரம் தாழ்ந்த அந்தத் திருமார்பில் திருமகள் நீங்காது உறைகின்றாள். கோலமாக வரைந்த குங்குமக் குழம்பினைக் கொண்ட பிராட்டியின் உயர்ந்த தனங்களின் உச்சியினால் உழப் பெற்றது அம்மார்பு. ஒப்பற்ற அழகையுடைய மரகத மலை அஞ்சும்படி அகன்று ஓங்கி வளர்ந்துள்ள மலை போன்றது அந்த மார்பு. அந்த அழகிய மார்பில் கார்மேகத்தில் காணப்பெறும் மின்னலைப் போல முந்நூல் மிளிர்கின்றது.

கைகள்

ஆடவர்க்கரசனான இராமனின் நீண்ட கைகள் முழங்கால் வரையில் தாழ்ந்துள்ளன. மலைபோன்ற ஒப்பற்ற பெரிய சிவதனுசு முறியும்படி அதனோடு விளையாடிய பெரிய மலைபோன்ற புயங்கள் அவை. அக்கைகளுக்கு ஓங்கிவளர்ந்த பனைமரங்களும் உவமையாகா. திக்குகளிலிருந்து உலகைச் சுமந்து நிற்கும் யானைகளின் நீண்ட துதிக்கைகளைச் சிறிது உவமை கூறலாம்.

வள்ளல் இராமனின் பெரிய கைகள் தாமரை மலர்களைப் போன்றுள்ளன; கற்பக மரத்தின் பூக்களைப் போலவும் உள்ளன. பவளம் போலச் சிறந்த அக்கைகளில் சங்கு சக்கரக் குறிகள் காணப்படுகின்றன.

கடகம் அணிந்த தம் கைகளில் பொன்னைப் போல விளங்கும் கட்டமைந்த அழகிய வளைந்த வீர வில்லை ஏந்தி நிற்கின்றான்.

திரு உந்தி

இராமபிரானது உந்தித் தாமரை உலகையெல்லாம் முந்தித் தோற்றுவித்த பெருமையுடையது. அந்த உந்திக்கு வலப்பக்கமாகச் சுழித்துப் பெருகி ஓடும் கங்கை நதியின் அழகிய நீர்ச்சுழியை உவமையாகக் கூறலாமோவெனில் அந்த நீர்ச்சுழி நிலையாக ஓரிடத்தில் தங்கியிராததால் பொருத்தமான உவமையாகாது மகிழமலரைத் தவிர ஓரளவு பொருத்தமான வேறொரு உவமை எங்குள்ளது?

தொடைகள்

இராம பிரானின் தொடைகளுக்குப் பொதுவாக மதயானையின் துதிக்கைகளை ஒப்புக் கூறுவர். ஆனால் அவை நேரிய உவமையாகா. அறமே வடிவெடுத்து வந்தாற்போல விளங்குகின்ற பறவைகளுக் கரசனான கருடனின் உயர்ந்து விளங்கும் கழுத் தினைத் தவிர இவ்வுலகில் இராமனின் குறங்கினுக்கு வேறொன்றையும் உவமையாகக் கூறமுடியாது.

கணைக்கால்

சங்கு சக்கரம் தாங்கிய கைகளையுடைய திருமா லாகிய இராமனின் கணைக்காலுக்கு அவனுடைய அம்புகள் வைக்கப்பட்டிருக்கும் அம்புப் புட்டிலே ஓரளவு உவமையாகுமேயன்றி மற்றையோரின் அம்பறாத் தூணிகள் சிறிதும் ஒப்புமையாகா.

திருவடி

இராம பிரானின் திருவடிகள் அழகும் மென்மை யுமுடைய தாமரை மலரைப் போன்றவை. ஒளி வீசுகின்ற அத்திருப்பாதங்கள் செந்தாமரை போல வும் பாய் திரைக் கடலில் தோன்றும் பவழம் போல வும் சிவந்து காணப்படுபவை. தாமரைச் சேவடி களில் நாயகன் பொன்னால் அமைந்த நீண்ட வீரக் கழல் அணிந்துள்ளான். அவனுடைய திருவடிகளை வேத சாத்திரங்கள் எல்லாம் தமக்கு அணிகலமாகப் பூண்டுள்ளன. திரிவிக்கிரம அவதாரத்தில் உலகெங் கும் விரிந்த பாதங்கள் அவை. அப்பாதங்களிலும் சங்கு சக்கரக் குறிகள் காணப்படுகின்றன.

விரல்கள்

இராமபிரானின் திருவடி விரல்களுக்குக் கற்பக மரத்தின் அரும்புகளும் பவளங்களும் ஒப்பாகுமென்று கூறுவதினும் உதய சூரியனின் கிரணங்கள் ஒப்பாகும் என்று கூறுவதுதான் ஒருவாறு பொருத்தமாகும். அந்த விரல்களில் காணப்படும் நகங்களுக்குச் சந்திரனை உவமையாகக் கூறினால் சந்திரன் சிறியவும் பெரியவுமாகி மறுவில்லாதனவாய்ப் பத்து ஆகும் எண்ணிக்கை யுடையதன்று. வயிரங்களைக் கூறினால் அவை இராமபிரானின் கால்விரல் நகங்களைப் போலத் திரண்ட வடிவத்தையுடையனவல்ல. அதனால் நகத்திற்குச் சரியான உவமையைக் கண்டு பிடிக்க முடியவில்லை என்று கம்பர் கூறி விடுகிறார்.

மாமதக் களி நல் யானைபோல் நடந்து வரும் இராமபிரான் விடை (காளை) யன்ன தொர் நடையும் உடையவனாகக் காணப்படுகிறான்.

அணிகள்

இராமன் நறுமணமும் அழகும் அமைந்த மாலையை அணிந்துள்ளான். தேன் ஒழுகுந் துளவமாலையைப் பூண்டுள்ளான். மார்பில் ஆபரணங்களைத் தரித்துள்ளான். பொன்னாபரணங்களைக் காட்டிலும் புகழையே தனது அணியாகக் கொண்டிருக்கிறான்.

2. சொல்லோவியங்கள்: உருவகங்கள்

ஒருபொருளுக்கு உவமை கூற வந்த கவிஞர் உவமைப் பொருளையும் உவமிக்கப்படும் பொருளையும்

பிரித்துக் கூருது இரண்டையும் சேர்த்துக் கூறும் போது உருவகம் பிறக்கின்றது. நிறம், பண்பு, ஆற்றல், வீரம் முதலிய பண்புகளிற் சிறந்த பொருள்களாக இராமன் உருவகப்படுத்திக் கூறப் பெறுகிருன்.

இராமபிரான் மிதிலைநாட்டுக்கு விசுவாமித்திர முனிவருடன் எழுந்தருளுகின்ருன் ஆண்டகையான இராமனது அழகைக் காண்பதற்காக - கல்லினை மிதித்துப் பெண்கனியாக்கிய திருத்தாளினையும், சீதையின் பொருட்டுச் சிவதனுசை முறிப்பதற்காக நிமிர்ந்து வீங்கும் வரைத்தடந் தோளினையும் காண்பதற்காக வந்த மிதிலை நாட்டு மங்கையர் அமிழ்தத்தை மொய்க்கும் ஈயினம் போன்றிருந்தனர் என்று பாடுகிருர் கவிஞர் உலகிலேயே சுவைமிக்க பொருளான அமிழ்தமாக இராமனை உருவகித்துள்ளார். இராமனது திருவடியடைந்தோர் பிறவிப் பெருங்கடல் கடந்து நித்திய சூரிகளாக நிலைத்திருப்பராகலின் சாவாமைக்குக் காரணமாகிய மருந்தாகிய அமிழ்தம் இராமனுக்கு ஏற்றதோர் உருவகமாயிற்று

சுடரொளி மேனியனுன இராமன் 'சோதி' யாகவும், நீலநிற ஞாயிருகவும் உருவகம் செய்யப்படுகிருன். கரிய மேனியனுதலின் 'கருஞாயிறு' எனப்படுகிருன். ஒவ்வொற இமைக்குஞ் சேண்விளங்கு அவிரொளி உடையவனுதலின் அஞ்சன ஞாயிறு என்று உருவகிக்கப்பட்டாலும் தண்ணளி மிக்கவனுதலின் இந்து என்றும் மதிக்கொழுந்து என்றும் பேசப்படுகிருன்.

நீலநிறத்து நெடுந்தகை யாகலின் கருமுகில்,

நீலக் கொண்டல், அஞ்சன மேகம், மின்னேளி மேகம்; பொருசிலே மேகம் என்றும், அல்லினை வகுத்ததோர் அலங்கல்காடு என்றும், எழுதரிய திருமேனிக் கருங்கடல் என்றும், மரகதச் சயிலம், அஞ்சனக்கிரி என்றும் உருவகிக்கப்படுகிருன்.

வானுயர் தோற்றமுடையவனுதலின் நீலமால் வரை, அஞ்சனக் குன்றம், மேரு. மலைச்சிகரம் என்று பேசப்படுகிருன். கட்டிளங் காளையாதலானும், ஏறு போல் பீடு நடையுடையவனுதலானும் கவியமை கீர்த்திக் காளை, ஆனேறு. காரேறு, விடை என்றும், வலிமை மிக்கவனுதலின் ஊறுடைய இருகை ஒரு களிறு, கைவரை எனத்தகைய காளை என்றும், வீரம் மிக்கவனுதலின் புலியன்னன், கருங்கோளரி, வெம்மடங்கல், ஆளரியேறு, சிங்கம் என்றும், பகை வரை வேரற அழிப்பதில் வல்லனுதலின் கூற்றம் என்றும் உருவகித்துக் கூறப் பெறுகிருன்.

இராமன் தாமரை போன்ற அவயவங்களைப் பெற்றிருப்பதால் தாமரைக்காடு என்றும், குவளை மலர்போன்ற கண்மலர்களைப் பெற்றிருப்பதால் குவளைக் கானம் என்றும் வருணிக்கப் பெறுகிருன். அறத்தின் மூர்த்தியான இராமன் உலகத்துயிர்கட் கெல்லாம் இரக்கம் பூண்டவனுதலின் தாய் போன்றவன்; தாய்ப்பசு போன்றவன். பிறவி வெம்பிணியை அறுப்பதால் மருத்துவனும் ஆகின்ருன். ஆடவர்க் கரசனுன இராமன் அறிவினுக்கறிவாயிருப்பவனுதலின் வேதம் என்று போற்றப் பெறுகிருன்.

3. அரசகுமாரன்

மன்னர் மன்னனாகிய தயரதனின் தவப் புதல்வன் இராம பிரான். தயரதன் யாகங்கள் பலவும் செய்து முடித்தவன்; பூவுலகையும் தேவலோகத்தையும் சேர்த்து ஆட்சி புரிந்தவன். மேகத்தின் தன்மையான கருணையே போன்றவன். அரசர்கள் வந்து வணங்கும் வீரக் கழலை உடையவன். தேவர்களுக்காகச் சம்பரனுடன் வந்த அசுரர்களைப் போரில் உயிரழித்த பராக்கிரம முடையவன். வழுவிலாத வாய்மையுமுடையவன். மண்ணினைக் காக்கின்ற அம்மன்னனின் மூத்த மைந்தனாகப் பிறந்து அரசாட்சியைப் பிறப்புரிமையாகப் பெற்றவன் இராமன்.

இராமனது குடிப்பிறப்பும் பெருமையிற் சிறந்தது. அவனுடைய குலம் சூரிய குலம். அக்குலத்தில் புகழ்பெற்ற அரசர்கள் தோன்றி நாட்டைச் சீருஞ் சிறப்புடனும் ஆண்டுவந்தனர். அவர்களுள் மிகவும் குறிப்பிடத் தக்கவர்கள் பகீரதன், மனு, சிபி, இட்சுவாகு, ககுத்தன், மாந்தாதா, முசுகுந்தன், சகரர், ரகு என்போராவார்.

உலகம் செய்த பாக்கியத்தால் அயோத்தியில் வந்து தோன்றிய இராமன் நல்லோரைக் காத்து அல்லோரை அழித்து அற நெறியை உலகில் நிலைநாட்ட வந்த திருமாலின் அவதாரமேயாவான் மறை நெறி பிறழாமல் மனு நெறி தவறாமல் உலகத்தைக் காக்கத் தோன்றிய உத்தமன் அவன். உலகத்தோரெல்லாம் மகிழ்ந்து ஆரவாரிக்கும்படியான அருட் கண்ணோக்கை உடைய அவ்வயோத்தி வேந்

தன் சிற்றன்னையின் ஏவலால் கடல் சூழ்ந்த உலகை யாளும் ஆட்சிச் செல்வத்தை அருமைத் தம்பியாகிய பரதனுக்குக் கொடுத்துவிட்டுக் கானகஞ் சென்றான். கூனியும் மாற்றாந்தாயும் கொடுமையிழைத்தாலும் முகத்திலும் சிறிதும் கடுமை காட்டாது பதினான்கு ஆண்டுகள் கடுமையார் கானகத்தில் வாழ்வதற்கு மகிழ்ச்சியுடன் புறப்பட்டான். தாய் சொல்லைத் தட்டாமல் தலைமேற்கொண்டு வாய்மை மன்னனும் தந்தையின் வாய்மையைக் காத்தான் சூரிய குலத்தில் தோன்றிய சுடர் விளக்காகிய இராமன். அதனால் தெய்வத்தன்மை செறிந்த புகழினைப் பெற்றுப் பெருமையிற் சிறந்தான்.

மிதிலை நாட்டரசன் சனகன் வளர்த்த பொற்கொடியாம் சீதையைக் கண்ணுற்ற போதே காதல் கொண்டு வில்வளைத்து வீரம் விளைத்து அச் சீதையை மணந்து இன்பத்தில் திளைத்தான். உயிராகிய சீதையை உடனழைத்துக் கொண்டு கானகம் நண்ணினான் கள்ளவாளரக்கன் சீதையைப் பிரித்த ஞான்று உள்ளமும் உடலும் நைந்து நொந்து வாடி நலிந்தான். பின்பு கொற்றவில் வளைத்துப் பற்றலராகிய அரக்கர் குலத்தை வேரறுத்துத் தேவர்தம் இடுக்கண் தீர்த்தான்.

4, வில் வீரன்

தயரதன் மதலையாகிய இராமன் வீருள் வீரன். வெற்றி வீரன். பகைவர்க்குக் கொடுமையிழைப்பவன். அண்டினோரை ஆதரிப்பவன். வெவ்வரம் பொருத வேலையுடையவன். வெஞ்சிலை ஏந்திப்பகை

வர் அஞ்சிட வஞ்சினம் கூறிப் பகைவர்க்கு நஞ்செனமாறினவன். வில்லை ஆளுவதில் வல்லவன் விற்போரில் பலவகைகளையும் அறிந்து தேர்ந்தவன். அவன் வில்லின் செல்வன். வியக்கத் தக்க வகையில் வீரப்போர் செய்பவன். வீரக்கழல் அணிந்தவன். வலிமையும் கனமும் வாய்ந்த கோதண்டம் என்னும் வில்லை ஏந்திய கோமகன், பிறர்எவரும் வளைக்க முடியாத சிவதனுசை அனாயாசமாக எடுத்து வளைத்தவன. கட்டமைந்த வில் தொழிலில் பயின்ற தோளையுடையவன். யமனுங் கண்டு அச்சங் கொள்ளும் வீரப் பெருமிதமுடையவன்.

போர் வித்தகனான இராமன் போர் செய்தலே தன் அணிகலமாகக் கொண்ட அழகிய வேலை உடையவன். கூர்மையாக அராவப் பெற்றுப் பொன்னொளி வீசும் வேல்களையுடையவன். போர் உவந்திருந்த வீரனாகிய இராமன் பறவைகட்கும், உணவின்றிப் பசியால் புலம்பும் பேய்களுக்கும் தாய்போலப் பகைவர் ஊனையளித்துப் பசி தீர்க்கும் வேல் ஏந்தியவன். பகைவர் உடலைத் துண்டமாக்கி விளங்கும் ஒளி பொருந்திய வேலை உடையவன். திசைகள் எங்கும் உள்ள பகைவர்களை யெல்லாம் அழித்து மற்றவர் யாவர்க்கும் தண்ணருள் புரியுந் தகைமையாளன். வில்லைத் தன் அருஞ் செல்வமாகக் கொண்டவன். வில்லையன்றி வேறு துணை யொன்றும் வேண்டாதவன். கையில் ஏந்திய யமன் போன்ற கொடிய வேலை உடையவன். வில்லின் செல்வனான அவன் கூட்டு ஒருவரையும் வேண்டாக் கொற்றவன். எத்துணை வரங்கள் பெற்றவராயினும் பகைவரைத் துச்சமாக மதிக்கும் உச்ச வீரன். அறைகழல்

அணிந்த மதுகை மைந்தன். ' அமர்க்களம் அணுகி ஆடல் பருந்தோடு கழுகும் பேயும் பசிப்பிணி தீரு மாறு விருந்திடு வில்லின் செல்வன்' போரில் வெற்றியே பெற்றிடும் கொற்றவன் வில்லால் ஓரிமைப் பொழுதில் ஏழுலகங்களின் வலிமையையும் அழிக்கும் ஆற்றல் பெற்றவன். "நல்லோரான முனிவரைக் கொன்று தின்ற அரக்கர்களுடைய குடல்களைப் பேய்கள் தின்னும்படி கொன்று தீர்த்தால் அல்லாமல் யான் என் கோசல நாட்டுக்குப் போகேன்" என்று சூளுரைத்து அஞ்சி வந்த தண்டகவன முனிவர்க்கு 'அஞ்சல்' எனக் கூறி அபயமளித்தவன்.

திரிபுரந் தீயெழச் சினவிக் கறுக்கும் தழல் வண்ணனது தடக்கை வில்லைத் தோளால் இறுத்தான். வீரியனான இராமன் விசுவாமித்திரரின் ஆணையை வேதவாக்காகக் கொண்டு தாடகை என்னும் அரக்கியைக் கொன்று அக்கொடுமையாள் தன் புதல்வனையும் மடியச் செய்தான். அரக்கர்களை அவர் தம் குலத்தோடு முற்றிலும் அழித்துப் பாக்கியத்தை அளிக்கும் அறத்தைக் காப்பதற்கு அவதரித்த ஆண்டகை இராமன் தன்மீது வெகுண்டுவந்த கருநிறத்தாக்கன் விராதனை அவன் இவ்வுலகில் இராத படி அழித்தருளினான். வெந்திறல் அரக்கராகிய விடவேரை ஆணி வேருடன் அறுத்தெறிய வந்த மருத்துவனாகிய இராமன் மாரீசன் என்னும் மான் வடிவில் வந்த மாயை மிக்க அரக்கனுக்கு மாயமனாக ஆயினான். கரன் முதலான இரக்கமற்ற அரக்கர்களுடைய கடல் போன்ற படை வீரர்களோடும் அவர்கள் தலைகள் சிந்திவிழத் தன் வில்லை வளைத்துக் கொன்றான்.

மராமரங்களைப் போல வளர்ந்த திரள் தோள்களை யுடைய தீரன் இராமன் மராமரம் ஏழினையும் அம்பொன்றால் தீர எய்தான். தன் வலிய கைகளால் பெரிய கடலைக் கடைந்தவனான வாலியின் மார்பினையும் மராமரங்களைப் போலவே அம்பினால் துளைத்தான்.

இருபத்தொரு தலைமுறை அரசர்களைப் பூண்டோடு தொலைத்தவனும், ஆயிரம் வலிய கைகளை யுடைய கார்த்த வீரியன் என்பானைத் தன் கோடாலியால் 'ஏய்' என்று சொல்லும் நேர அளவுக்குள் உயிரை யழித்தவனும், தனக்கு எதிரற்ற வீரனும், தன்னை எதிர்ப்பதற்கு யார் இருக்கின்றார்கள் என்று இறுமாந் துரைத்தவனுமான பரசுராமனின் வலிமை முழுவதையும், அவன் பிடித்திருந்த கட்டுக்கள் அமைந்த கொடிய வில்லோடும் அழித்தான். அவனுடைய தவம் முதலிய வலிமைகள் தன்னிடம் வரப் பெற்றான். நீடிய அரக்கர் சேனை நீறுபட்டு ஒழிய வாகை சூடிய வீரச் சிங்க மன்ன இராமன் இலங்கைவாழ் அரக்கர் வேந்தனின் இருபது திண் தோள்களையும் மௌலி யணிந்த தலை பத்தினையும் இறுத்தான்.

5. திருமாலின் திருவவதாரம்

இராமன் பரம்பொருளான திருமாலின் அவதாரமே என்பதில் எவரும் எள்ளளவும் ஐயங் கொள்ளக் கூடாதென்றே கம்பர் தம் காப்பியத்தில் வரும் பாத்திரங்கள் அனைவரும் 'இராமன் ஒரு அவதார புருஷன்' என்று உணர்ந்து துதிக்கும்படி

செய்திருக்கிறார். வெவ்வேறு பாத்திரங்களும் இராமனைப் பரம்பொருளாகக் கருதிக் குறிப்பிடுகின்ற சொற்கள், சொற்றொடர்களை யெல்லாம் 'இராமன் அருட்செல்வத்'தில் காணலாம். இன்றியமையாத இடங்களில் மட்டும் அப்பகுதியில் பாத்திரங்களின் பெயர்கள் ஆங்காங்கே பிறையடைப்பில் கொடுக்கப் பட்டுள்ளன.

கம்பர் பன்முறை திவ்யப் பிரபந்தக் கடலுள் மூழ்கி, ஆழ்வார்கள் திருமாலை வருணிக்கும் முத்தான தொடர்களை யெல்லாம் தேர்ந்தெடுத்து அவற்றைத் தம் காப்பியத்தில் இராமனை வருணிக்கும்போது பொன்னே போல் பொதிந்து வைத்துக் கொண்டார். மேலும் தேவார திருவாசகங்களையும் செவ்விதின் ஓதி உணர்ந்தவராதலான், அந்த மறை நூல்களுள், சிவபிரானை வருணிப்பதற்கு நால்வர் பெருமக்கள் எடுத்து மொழிந்த மணியனைய மொழிகளில் பலவற்றையும் தேர்ந்தெடுத்து அம்மொழிகளால் இராமனைக் குறிப்பிட்டுப் போற்றி மகிழ்கிறார்.

கம்பர் கல்விக் கூற்றாகவும் பாத்திரங்களின் கூற்றாகவும் காப்பியத்தில் இராமனைக் குறிப்பதற்கு விஷ்ணுவின் பெயர்களான அரி, மால், திருமால், திருநெடுமால், மாயன், மாயவன், ஆழியான், நேமியான், நெடியவன், நீண்டான், நாரணன், நாராயணன், ஞாலமுண்டவன், சதுமுகன் தாதை, வண்துழாய்க் கண்ணியான், பாம்பணை அமலன், திருவுறை மார்பன், திருமகள் நாயகன், திருமறு மார்பன், சக்கரத்து அண்ணல், ஆழிக்கையவன், ஆழி

நாதன், ஆலிலைப் பள்ளியான், அலர் வாழ் தேவிக்கு அமுது முதலிய சொற்களால் குறிப்பிடுகின்றார். சிலவிடங்களில் திருமாலை ஒப்பவன் இராமன் என்று கூறுகிறார்: 'நேமி நாரணன் ஒக்கும் நம்பி'; 'அரவணை அமலன் அன்னான்' என்று இராமனைக் குறிப்பிடுகிறார்.

பல வகையான அவதாரங்களை மேற்கொள்வது திருமாலுக்கு ஒரு விளையாட்டாகும். இவ்வுலகில் அறத்தாறு அழிவுற்றபொழுது அதனை நிலைநிறுத்தவும், தீயோர் தீய்ந்துபோகத் தக்கோர் தம் இடர் துடைக்கவும், சக்கராயுதத்தை விட்டுக் கையில் வில்லேந்தி நாகணைத் துயிலின் நீங்கித் திருமாலே இராமனாக அயோத்தியில் வந்து அவதரித்தான் என்பார். அதனால் தான் திருமாலின் திருவருட் செயல்களை யெல்லாம் இராமனின் அருட்செயல்களாகவே குறிப்பிடுவார் கம்பர். இராமன் 'உறங்காதான், (அறிதுயிலில் இருப்பவன்) கருங்கடலிற் கண் வளர்ந்தோன், கடலின் வந்த தெள்ளிய திருவுந் தெய்வப் பூமியுஞ் சேருந்தோளான், ஏனமாய் மண்ணிடந்தான், உலகம் மூன்றுங் காலினால் கடந்து கொண்ட புண்டரீகக் கண் ஆழிப்புரவலன், அன்னமாய் அருமறைகள் பாடினான், மன்னுயிரனைத்தும் வாரி உண்டவன், விண்ணூறு கலுழன்மேல் விளங்கும் விண்டு, வையம் முற்றும் வயிற்றின் அடக்கிய ஐயன், ஆலின் அடை கிடந்த பாலன், மேல்நாள் ஆழி கடைந்து அமுதம் தேவர்கட்கே ஈந்தான், 'ஈறில் வள்ளலே காத்தி' என்ற மாகரி வருத்தந் தீரப் புள்ளின்மேல் வந்து தோன்றும் புராதனன் முதலிய தொடர்களால் குறிப்பிடப்

பெறுவது இக்கருத்தை வலியுறுத்தும்.

சிவபிரானைப் பிறப்பிலாதவன் என்று ('பிஞ் ஞகா ! பிறப்பிலீ !' –தேவாரம) பலரும் சொல்லக் கேட்ட கம்பர் இராமபிரானும் பிறப்பில்லாதவனே என்று குறிப்பிடுகிறார் ; 'மெய்யே பிறந்தேயும் பிறந்திலாதான்' (6 - 2158) என்கிறார். கண்ணன், பலராமன், இராமன் முதலிய பல அவதாரங்களாகப் பிறந்தது உண்மையாயினும் திருமால் பிறந்தும் பிறவாதவனாகவே கருதப்படுவான். ஏனெனில் பிற உயிர்களைப் போன்று கரும வசப்பட்டுப் பிற வாமல் தன்னிச்சைப்படி அவதரிக்கிறான். அவதார நிலைகளிலும் பரம்பொருட்டன்மை நீங்கப் பெறு வதில்லை.

6. குணக் குன்று

மனம் வாக்குக் கெட்டாத பரம்பொருளாகிய இராமனின் திருக்குணங்களை யெல்லாம் கம்பர் நினைந்து நினைந்து உணர்ந்து உணர்ந்து உள்ள முருகி நிற்கிறார். உலக மக்கள் உய்வதற்காக நன்னெறியில் நடந்து காட்டுதற்கும் தீவழி நிற் போரை ஒறுத்தற்கும் அரச குமாரனாகப் பிறந்த இராமன் மனிதனிடம் காணப்படவேண்டிய குணங் கள் யாவும் குறைவறப் பெற்றிருந்தான். இப்பகுதி யில் மாவீரன் இராமனின் மனிதப் பண்பு நலங்களை யும் அடுத்த பகுதியில் மும்மூர்த்திகளுக்கும் முதல் மூர்த்தியாக விளங்கும் (இராமனின்) தெய்வீகப் பண்புகளையும் கவிஞர் பிரான் கம்பர் காட்டக் காண்போமாக.

வேண்டிய வேண்டியாங் கெய்தும் தவத்தினை விரதமாக மேற்கொண்டு தவவேடம் பூண்டு பல்லாண்டுகள் கானகத்தில் வாழ்ந்த வித்தகனுகிய இராமன் விமலனுகவும் விளங்கினுன். விண்ணவரும் போற்றும் வியத்தகு பண்புகளைப் பெற்றிருந்தான். வானத்தைக் காட்டிலும் உயர்ந்த பெருமையுடையவன். அவன் புகழ் வானையுந் திசையையுங் கடந்த வான்புகழாக மிளிர்ந்தது. வானுயர் தோற்றமுடைய இராமன் விழுமிய குணத்து வீரனுகவும் திகழ்ந்தான். ஆன்ருேர்கள்பால் கேட்டுத் தெளிந்த வரம்பில்லாத கேள்விச் செல்வத்தைப் பெற்றிருந்தான். அதனுல் ஞானச் சுடராக, ஞானத் தனிக் கொழுந்தாக ஒளிர்ந்தான். கேள்விச் செல்வம் பெற்ற பெரியோர்கள் தம் உணர்ச்சியால் நுகரும் ஞானமாகிய அமிழ்தத்தின் சுவைவடிவாய் நின்ருன்.

இராமன் கற்றற்குரிய நூலறிவையுங் கேள்வியறிவையுமுடையவன். கலைகளாகிய பெருங் கடல்களைக் கற்றுத் தேர்ந்தவன். உலகிலுள்ள வேதங்கள் அனைத்தையும் உணர்ந்தவன். தெள்ளியோனுதலால் ஓதாமலே எல்லா நூலறிவையும் உணர்ந்தான். தென்சொற் கடந்தான். வடசொற் கடற்கு எல்லை தேர்ந்தான்.

பெருந்தகை இராமனின் பெரும் புகழ்க்குக் காரணம் அவன் அந்தமில் பெருங்குணத்து உத்தமனுயிருந்ததேயாம். ஆசையின் வேரை அடியோடு நீக்கி அமலன் ஆனுன். பொருமை என்பதைத் தன் உள்ளத்திலிருந்து போக்கினுன். எல்லையில்லாத, ஏத்தரும் பெருங்குணங்களையுடைய ஏந்தலாக

என்றும் குறையாப் பெருங் குணக் கோவாகச் சீரிய குணங்களால் உயர்ந்த செல்வனாகச் செம்மைக் குணம் நிரம்பிய செம்மலாக, ஆராவமுதாக, அறிவன், அமலன், அனகன், ஆரியன். ஆன்றோன், சான்றோன் என்று இதயங்கனிந்து எல்லோரும் வாழ்த்துமாறு வாழ்ந்தான். யாவரும் விரும்பத்தக்க மனத்தைப் பெற்றிருந்ததால் தன்னிடம் வந்தவர் எவர்க்கும் இனிமையளித்தான். மேன்மைக் குணங்கள் பெற்ற மேலோனாகப் பொறுமை கொண்ட நெஞ்சினனாய்த் திகழ்ந்தான்.

குற்றமற்ற குணங்கள் என்னும் அணிகலன்களை நிறைய அணிந்திருந்தான். கோபமே சிறிதும் இல்லாதவனாயிருந்தான். செப்பருங் குணத்து இராமன் செப்பும் மொழிகள் அனைத்தும் ஐயத்திற்கிடமின்றித் தெளிவாய் இருந்தன. வசையொன்றும் இன்றி இசையெல்லாம் இசையப் பெற்றவன். மேலோர்க்கும் மேலானவனான இராமன் தன் பெருங்குணத்தால் தன்னைத் தானலது பிறர் எவரும் ஒப்பாகாதவனாய் உத்தமனாய்த் திகழ்ந்தான், தனக்கு நிகராக எவருமில்லாத வீரனாகவும் விளங்கினான்.

ஆராவமுதாகிய இராமன் கருணையுள்ளத்தவனாகக், கருணையின் நிலையமாகக், கருணை வள்ளலாகக், கருணைக் கடலாகக், கருணைக் கொண்டலாகக் காணப்பெற்றான் அளவிடற்கரிய கருணை பெற்றிருந்ததால் கருணாகரன், தயாமுதல் என்ற பெயர்களைப் பெற்றான். பெரிய கருணைக்குப் பிறப்பிடமாக இருந்தான். அருள்நெறியிலேயே வாழ்க்

கை நடத்திவந்தான். தாய்மையும், மறையும், நட்புந் தருமமுந் தழுவி நின்ற அவன் மூன்று தாய்மார்களாலும் 'நன்மகன்' என்று புகழப் பெற்ருன். மன்னுயிர்க்கெல்லாம் தாயினும் அன்புடையவனுய் மன்னுயிர்கள் எல்லாம் நலம்பெற வேண்டுமென்று விரும்பியுழைத்தான்.

மனுவின் குலத்தில் தோன்றிய மானவனுகிய இராமன் மனுநீதியைக் கடைப்பிடித்தொழுகினுன்; நீதி வடிவினனுய்க் கடைப் பிடித்தற்கரிய நல்லொழுக்கத்தில் நிலை நின்ருன். துறவிகளுக்குத் தூய துணைவனுயிருந்தான். வேதநூல் வல்லவனுதலின் வேத நெறி தவருதவனுய் வாழ்ந்தான். நல்லநெறியில் வழுவாது நின்று சான்ருேனுக, நன்னெறிக்கு இறையோனுக, நியாயம் அத்தனைக்கும் நிலைக்களனுக விளங்கினுன். ஞான நன்னெறியில் நின்ற மேலோருக்கு எளிதில் காட்சியளித்தான். சீலமும் தருமமும் சிதையாத சிந்தையுடையவனுய்த் தேவர்க்கும் நமக்கும் ஒத்த நடுவு நிலையில் நின்ருன்.

நடுவு நிலைமையுடன் வாய்மையும் நல்லறமென விரதமாகக் கொண்டிருந்தான். வாய்மையைக் காப்பதற்கு உயிர் கொடுத்து வானம்புகுந்த மன்னனின் மகனுன இராமன் பொய்யிலா மெய்ந்நெறியைப் போற்றினுன். சத்தியத்தில் ஊன்றி நின்ருன், வாய்மையாளருக்கு ஒரு மேல்வரிச் சட்டமாக விளங்கினுன். மெய்யின்மெய்யாகவும் புகழின் புகழாகவும், புனிதருட் புனிதனுகவும் பொலிந்தான்.

தோன்றிய நல்லறம் நிறுத்தத் தோன்றிய இராமன் நல்லற மூர்த்தியாகவும், புண்ணிய மூர்த்தி

யாகவும் விளங்கினுன். தருமத்தையே முதன்மை யாகக் கொண்டு ஒழுகும் குறிக்கோள் வாழ்க்கை யைப் பெற்றிருந்தான். அறந்தரு சிந்தையனுய், அறத்தின் பெருந்துணைவனுய், அறக்கடவுளாய், அறநெறியை உலகிற்கு வகுத்துத்தந்து வாழ்ந்து காட்டிய வள்ளலாய், அறத்தின் உறைவிடமாய் ஒளிர்ந்தான். தருமமே ஓருருக்கொண்டுவந்தது போன்ற இராமனை அறத்தின் நாயகன், அறத்தின் மூர்த்தி, மெய்யற மூர்த்தி, தருமன், தருமத்தின் தனிமூர்த்தி, தருமமூர்த்தி, அறத்தவன், அறம் அன்னுன், அறம் என நின்ற நம்பன், அறந்தரு சிந்தையன்பன், அறம் வளர்க்குங் கண்ணுளன், அறத்தின் சான்றவன்; புண்ணியன் என்றெல்லாம் ஏத்தி ஏத்திப் புகழ்ந்து பேசுகிருர் கம்பர். 'தருமமும் ஞானமும் தவமும் வேலியாய், மருவரும் பெருமையும் பொறையும் வாயிலாய் அருள்நெறி எய்திக் கருணையங் கோயிலில் இருந்த கண்ணன்' என்ற வரிகளில் இராமனின் தனிப்பண்புகளை எல்லாம் தொகுத்துரைக்கின்ருர். தரும தேவனும் கண்டு அஞ்சும்படியான ஒழுக்க மேம்பாடுடையவனுதலின் அழியாப் புகழ் பெற்றுள்ளான் இராமன்.

கேட்டோர்க்கு வேட்டனவெல்லாம் தரும் வரதனுக, வள்ளலாகக், கற்பகமாக, வரங்களின் கடலாக விளங்கினுன். அதனுல் கவிகளால் வரையத்தக்க மிக்க புகழினைப் பெற்ருன். காகுத்தனின் புகழ் கல்விகளுக்கெல்லாம் எட்டாதுயர்ந்தது; ஈறில்லாதது; நிலைபெற்றது; எங்கும் பரவி நின்றது. யாவரும் மதிக்கத்தக்க குணங்களையுடைவனுய்த், தன்னைச் சரணுக அடைந்தவரைத் தன் உயிரினும்

மேலாகக் கருதுபவனாய்ப் பேரறிவுடையவனாய்த் திகழ்ந்ததால் ஞானிகளின் அறிவில் வீற்றிருக்குஞ் சீர்த்தியைப் பெற்றிருந்தான். எவராலும் முழுதுறப் புகழ்ந்து கூற முடியாத பெற்றியனாதலின் 'தன்புகழ் தன்னினும் பெரிய தன்மையான்' என்று வாயாரப் போற்றுகிறார் புலவர் பெருமான், 'எவராலும் அறிந்து கொள்ளமுடியாத தன்மையான்' என்றும், 'தனியுலகு ஒரு மூன்றிற்கும் ஒருத்தன்' என்றும் எவ்விதப் புகழும் எட்டமுடியாத பெருந்தகையின் புகழ்பாடுகிறார் புலவர் திலகமான கம்பர் பிரான்.

7. முழுமுதற் கடவுள்

மனிதனாகப் பிறந்து வளர்ந்த இராமனை முழுமுதற் கடவுளாகக் கூறுவது எங்ஙனம் பொருந்தும் என்று வாதிடுவோரைத் தெருட்டுதல் எளிதன்று. இறைவன் எல்லாம் வல்லவன் - மனித வுருவிலும் தோன்றித்தன் முழுத்தெய்வத்தன்மையை உருவிற்கேற்ற வகையில் சுருக்கிக் கொள்ளவும் வல்லன் என்பதை அவர்கள் மறந்து விடுகின்றனர். இராமனை மனிதருள் உயர்ந்தவனாக, உத்தமனாக, ஒப்பற்ற வீரனாக ஏற்றுக்கொள்வதற்கு எல்லோரும் இசைகின்றனர்; முழுமுதற்பொருளாக ஏற்றுக் கொள்ளச் சிலர் மனம் ஒப்புவதில்லை. கம்பர் இராமனை முத்தேவர்க்கும் முதல் தேவனாகவும்முழுமுதலோனாகவும் கண்டார். இதில் நம்பிக்கையில்லாதவருக்கு எளிதில் நம்பிக்கையூட்டி விடமுடியாது. பரம்பொருளைப் பற்றிய உண்மைகளை ஞானிகளே தம் ஞான உணர்வினால் உணர்ந்து கூறத்தக்கவர். நம்நாட்டில் எத்தனையோ நூற்றாண்டுக் காலமாக இராமன் தெய்வ

மாக வழிபடப் பெற்று வருகிருன். எத்தனையோ ஞானிகள் அவன் பரம்பொருளே என்று உணர்ந்து உணர்த்தியிருக்கின்றனர். கம்பரும் உணர்ந்தார். காப்பியத்தின் பலவிடங்களிலும் இராமனது பரம் பொருட்டன்மையை உணர்த்துகிருர்.

இராவணன் போன்ற துட்டர்களை அழித்து நல்லறத்தினை நாட்டில் நிலைநிறுத்துவதற்காகவே அவதரித்த இராமன் உயிர்கள்மீது வைத்த பெருங் கருணைகாரணமாக மனித உருத்தாங்கி வந்தான் என்று கம்பர் கூறுகிருர். உலகமக்கள் எல்லாம் நலம்பெற வேண்டுமென்பதற்காகத் தன் சொந்த நலங்களை, இன்பங்களைத் துறந்து எண்ணிலாத துன்பங்களை ஏற்றுக் கொண்ட ஏத்தருங் குணத்து இராமன் தான் பரம்பொருளின் அவதாரம் என்பதைப்பறையடித்துப்பிறர்க்குச் சொல்லவில்லையாயினும் பரம்பொருள் என்ற உணர்வுநிலையைப் பெற்றிருந்தார் என்பதைக் கம்பர் பல இடங்களிலும் சுட்டிக் காட்டியுள்ளார், எடுத்துக் காட்டாக, இலங்கைக்கு வானரப்படைகளுடன் கடலைக் கடந்து செல்ல முற்பட்டபோது வருணனை நோக்கிச் சில நாட்கள் தவஞ்செய்தும் வருணன் காட்சி கொடுக்காததால் மூவுலகத்தையும் அம்பினுல் அழித்துவிடப் போவதாக இராமன் முனிந்து கூறிய மொழிகளை நோக்கின் மும்மூர்த்திகளின் ஆற்றல் தனக்குண்டு என்று இராமன் உணர்ந்திருந்ததை அறியலாம்.

தெய்வ நாயகன்

எவரினும் மேம்பட்டு நின்ற இராமபிரான்

அண்டர் நாயகன்; தேவர் தந்தேவன்; ஆதி வானவர் பிரான்; உலகநாதன்; உலகுடை நாயகன்; தே மலரோனுகிய பிரமனின் அம்மான்; அண்டங்களுக் கெல்லாம் ஆதித் தலைவன்; எல்லார்க்குந் தலைவன்; ஆதி முதன்மையான தெய்வம்; ஆதி பரமன்; ஆதி எனும் பொருளுக்கும் அப்பாலான். உலகங்கள் அனைத்திலும் கலந்திருக்குந் தலைவன்; இறையவன்; எல்லோர்க்கும் ஈசன்; ஈசற்கும் ஈசன்; ஏழ் உல கினுக்கும் ஒரு நாயகன்; அயன் முதலியோர் தம் தந்தைக்குந் தந்தை; மூன்றுலகும் ஈன்றுனை முன் னீன்றவன்; ஞால நாயகன்; தேவர் தம் பிரான். தேவாதி தேவர்கள் எல்லோரும் தன் திருநாமத்தை ஓதி வழிபடப் பெறுபவன். சிவபிரான் முதலான மேலான தேவர்களுக்கும் வியக்கத் தக்க வலிமை வாய்ந்தவன். அந்தணர்க்கெல்லாம் ஒப்பற்ற கடவுள்; ஐம்பெரும் பூதங்கட்கும் நாயகன்; மும் மையாம் உலகந் தந்த முதல்வற்கும் முதல்வன்; மூவகை யுலகும் ஏத்திப் போற்றும் முதல்வன்; மேல் நின்ற விதிக்கும் நாயகன்; வானவர் பெருமான்; இந்திராதி தேவர்க்கும், நாகலோகர்க்கும் கண் ணிடை ஒளி போன்றவன்; விதிக்கும் (பிரமனுக்கும்) மேல் உள்ளவன். வேதங்களால் விளக்கப்படுந் தலைவன். பழமையான சிறந்த அற நூல்களுக் கெல்லாந் தலைவன்.

மூவர்க்கும் முதல்வன்

ஆதியில் ஒரே பொருளாக இருந்துபின் மும்மூர்த் திகளாகப் பிரிந்த ஞானத் தனிக்கொழுந்து இரா மன் முத்தேவரின் மூல முதற் பொருளாம் தேவனே

இராமன். அயனும் அறியாத அற்புதன். சிவனும் மலர்த்திசை முகனும் திருமாலும் தெறு குலிசத்தவனும் எழுந்து ஒன்ருகி நின்றன்ன உருவோன் எல்லா உயிர்வகைகட்கும் மூலகாரணமாயும், காக்குங் காரணமாயுமிருப்பவன். தானே தன்னந் தனியனாய் மனத்துள் கருதித் தன்னுள்ளே உலகங்கள் எல்லாம் ஈன்றவன்; உலகுக்கெல்லாம் காரணமான மூலப்பொருள். மும்மூர்த்திகளும் ஒன்ருய் அமைந்த பரம்பொருள். திருவுந்தியினின்று படைத்த உலகங்களை மீண்டும் ஊழியினிறுதியில் அங்கேயே காக்கும் நாயகன்; ஒரு தனித்தலைவன். அட்டமூர்த்தியாகிய சிவபிரானுக்கும், இந்திரனுக்கும், முனிவர்க்கும் உயிர்ப்பொருள்கள் அனைத்திற்கும் பரம்பொருளாயிருப்பவன். மலரயன் முதலான வானவர்க்கும் மற்றுள்ள உயிர்களுக்கும் முதல் தந்தை. ஆதி மூர்த்தி. மும் மூர்த்திகளாய்த் தோன்றி விளங்கி அம்மூவர்களுக்கும் மூலமான பரம் பொருள்.

உலக நாயகன்

இராமன் உலகிற்கெல்லாம் நாயகன். உலகின் எல்லாப் பாகங்களிலும் தானே பரந்து நிற்கின்ருன். உலகங்களையெல்லாம் தன் வயிற்றிலடக்கியவன். மூவகையுலகுங் காக்கும் முதலவன். உலகு ஒரு மூன்றையுந் தன் உடைமையாகப் பெற்றவன். உலகங்கள் யாவற்றையும் உளவாக்கியவன் உலகிலுள்ள சராசரங்களுக்கும் புகலிடம் அவனே. எவ்வுலகுந் தொழுந்தாள்களையுடையவன். தனியுலகு ஒரு மூன்றிற்கும் தலைவன்.

எல்லா உயர்திணைப் பொருள்களும் அஃறிணைப் பொருள்களுமாகியும், இளவேனில் முதலிய ஆறு பருவங்களும் அவற்றால் அடையக்கூடிய பயன்களு மாகியும், மலரும் மணமும் போல ஒன்று கூடி நீங்குதல் இல்லாத பொதுப் பொருளாவோன். உலகங்களின் தாயாகவும், உலகங்களுக்கெல்லாம் ஆணியாகவும், பல்லுயிர்க்கும் ஒருயிராகவும் நிற்கும் பரமன். ஊணுகி உயிர்க்கும் உயிராகி நிற்பான். எல்லா உயிர்களின் உள்ளத்திலும் மறைந்து உறைகிருன். அண்டம் பலவும் அனைத்துயிரும் அகத்தும் புறத்தும் உளவாக்கி உண்டும் உமிழ்ந்தும் அளந்து இடந்தும் உள்ளும் புறத்து முளன். தயிர் தோய்தற்குக் காரணமான பிரைபோல உலகப் பொருள்கள் யாவற்றிலுங் கலந்திருக்கும் தலைவன். உயிர்கள் தோறும் பலவகையாக உருவெடுத்து நிற்கின்ற தூயோன். யாவர்க்கும் இறைவன். எல்லா வுலகத்தவர்க்கும் பற்றுக்கோடாயிருப்பவன். அதனால் எல்லோரும் எல்லாப் பொருள்களும் எல்லா உலகத்திலும் தொழுந் திருவடிகளையுடையவன். ஆருயிர்க்கெல்லாம் அமிழ்தம் போன்றவன். எல்லாருக்கும் எல்லாக் காரியங்களுக்கும் சான்ருக உள்ளவன். அன்புடை மனத்தவர்க்கெல்லாம் அரும்பத அமுதமானவன். அளப்பரும் உலகம் யாவும் அளித்துக் காத்து அழிப்பவன். உயிர்களுக்கு அறிவையளித்து அறியாமையை ஒழித்து மேல் உதயமாகும் தத்துவ ஞானமாகிய உண்மைக் கண் பார்வையை அளித்தருள்பவன்.

தனித் தலைவன்

இராமன் தெய்வங்களுக்குள்ளே ஒப்பில்லாத

வன். ஒப்பற்ற தனிப் பொருளாக உள்ளவன். தனக்கு நிகர் தானேயல்லாமல் வேறு ஒருவருமில்லாதவன். தனி நாயகன்; தனி நாதன். யாவற்றினும் மேலான நிலையிலுள்ள பரமேட்டி. முழுமுதலோனான இராமனைப் பரமன் என்றும், பரம்பரன் என்றும், பராபரம் என்றும், பழையோன் என்றும், முன்னவன் என்றும், முதல்வன் என்றும் பகர்கின்றார் கம்பர். தன்னை வதைத்த இராமனை 'மேல் ஒரு பொருளும் இல்லா மெய்ப் பொருள்' என்று துதி பாடுகிறான் வாலி.

தனக்கு முந்திய மூலமேயில்லாத முதல்வனே இராமன். அவன் மூலமும் நடுவும் ஈறும் இல்லதோர் காரணன். மும்மைத்தாய காலங் கணக்கும் நீத்த காரணன். மூன்றுவுலகினுக்கும் ஒரு முதல்வனாய் முதலில் தோன்றியவன். உலகத்துப்பொருள் எல்லாம் இறுதியில் அடைதற்குரிய பரம்பொருள் அவனே. எல்லாப் பொருள்கட்கும் மூலமுதலாய் இடையாய் இறுதியாய் இருப்பவனும், எல்லாப் பொருள்களும் அழிவதற்கு இடனாகுங் காலமாயிருப்பவனும் அவனே. எல்லாவுலகங்களுக்கும் மூலகாரணமாயிருக்கும் அவன் முடிவில்லாத மூர்த்தியுமாவன். முப்பரம் பொருளுக்கும் முதல்வனாயுள்ளான்.

சுருதி நாயகன்

வேத நாயகனான இராமன் வேதமும் அறமுஞ் சொல்லும் மெய்யற மூர்த்தி. வேதங்களினால் முதற் பொருள் என்று தெளியப் பெற்றவன். வேதங்கட்கு இருப்பிடமானவன். வேதங்களால் புகழப்பெறுப

வன். வேதத்தால்விளக்கப்பெறுபவன். வேதமுதல் வனுன அவன்வேத சாத்திரங்கள் கூறிய நன்னெறி முறைப்படித் தேடி ஆராய்ந்த உணர்ச்சியால் உண ரப்படும் பொருள். சுருதி ஞானத்தின் கொழுந்தா யிருப்பவன். நான் மறை முடிவினில் துணிந்த மெய்த்துணிவு ஆவன். நான் மறையின் கனியாய் இருப்பவன். வேதமுதற் காரணன். நான் மறையின் நுட்பமாயிருப்பவன். வேதங்களை உறைவிடமாகக் கொண்டவன். ஆரணத்தின் இனிய பொருள்மயமா யிருப்பவன். வேத வேந்தன், வேத வடிவினன். வேதோத்தமர்களால் உணரப்படுபவன். வேதியர் வணங்கற்பால இறையவன். மறையவர்க்கு வலியா யிருப்பவன். பழமையான வேதத்தின் முடிவை ஆராய்ந்துள்ள ஞானியர் எல்லாராலும் கருதி வணங்கத்தக்க பரம்பொருள்.

வேதத்துக்கு மூலமான இராமனை வேதங்களும் தேடியறிய மாட்டாமல் திகைக்கின்றன. மறைகளால் நாடப்படும் காரணப் பொருளாயிருப்பவன். ஓதப் பெறும் நான்கு வேதங்கட்கும் அப்பாலானவன். வேதங்கள் கூறும் மூலப்பொருள்கள் யாவற்றுக்கும் ஆதி மூலம். நான் மறைகளின் முடியாயுள்ள உபநிட தங்களாலும் வணங்குவதற்கும் தேடுதற்கும் இயலா தவாறு அப்பாற்பட்ட பரம்பொருள். அறிவினுக்கறி வாய் நிற்கும் இராமன் அயனும் அறியாத பொரு ளாயுள்ளான். உயர்வேதமும் போதமும் காண்கிலாத வனுயுள்ளான்.

ஞான நாயகன்

இராமன் ஞானிகளின் அறிவில் வீற்றிருப்

பவன்; தத்துவ ஞானத்தால் உணரப்படும் தலைவன். தன்னை உணர்ந்த ஞானிகளிடத்தெல்லாம் விருப்புடன் உறைபவன். பற்றுக்களை முற்றும் அறுத்து விலக்கிய ஞானியர்களுக்கு உறவானவன். ஒப்புயர்வற்று நின்ற தத்துவ ஞானத்தினுல் அறியப்படும் பரம்பொருள். தபோதனர் தேடிச் செல்லும் பரமபதம் ஞானமூர்த்தியாகிய இராமன் உயிரெழுத்துக்களின் முதலிலே வைக்கப்பட்டுள்ள அகரவடிவினன். ஓங்காரப் பொருளானவன். ஞானிகள் ஞானக் கண்ணுல் காணப்பெறும் காட்சிப் பொருளானவன்.

ஞானத்தின் ஒப்பற்ற தலைவனுன இராமன் யாவரறிவையுங் கடந்து நிற்பவன். ஞானத்தினுலேயே உணர்தற்குரியவன். உணர்ந்தார்க்கும் உணரமுடியாதபடி அறிவின் மேல் உள்ளவன். அறிவினுக்கு அறிவாய் நிற்பவன். அறிவு கூடப் பின் தொடர்ந்து நாடியும் நெருங்க முடியாதபடி அப்பாலுள்ளவன். முக்காலங்களுமுணர்ந்தவன்.

பவநோய் மருத்துவன்

பிறவிநோய்க்கு மருத்துவன் போன்ற இராமன் தன் பொற்பாதம் எத்துவார்தம் பிறப்பை அறுப்பான். மாயப்பிறவியின் பகைஞன். மால்தரும் பிறவி நோய்க்கு மருந்து. நாளும் தோன்றிவரும் புதுப்புது வெம்பிணிக் கெல்லாம் மாமருந்து. பெரும் பிறவிக் கடல் கடக்கும் தெப்பமாயிருப்பவன். அடியார்கள் மீட்டும் பிறவா வண்ணம் அவர்கட்குப் பரமபதம் அளிப்பவன். பெருந்தவம் இயற்றினேர்க்கும் நீக்கமுடியாத பவ நோய்க்கு மருந்தாய் நிற்கின்ருன்.

இராமன் தன்னைச் சரணடைந்தோரைத் தன் உயிரைப் போலக் காக்கும் சரணாகத வத்சலன். அறியாமலேயே காலிற் சரணமடைந்த அகலிகைக் கல்லை அழகிய பெண்ணுருவாக்கினான். அவன் துன்பங்கள் அனைத்தும் நீக்கும் திருநாமத்தை யுடையவன். அருவினை அறுக்கும் ஆரியன். தன் னைச் சரணடைந்தாருடைய இருவினைகளையும் ஒழிப்பவன். அடியார்கள் துன்பக் கடலில் நீந்தி வருந்தாமல் பெருஞ்செல்வத்தையளிப்பவன். அவர் களுடைய பாவங்களையெல்லாம் அழிப்பவன்.

வள்ளல்

கேட்ட வரங்களையெல்லாம் கொடுக்கும் வரதன் இராமன். கள்ளமாய பிறவியெல்லாம் நீங்க ஞானம் பொழியும் திருப்பாதங்களையுடையவன். வழிபடு வோர்க்கெல்லாம் அவரவர் விழையும் வரங்களைக் கொடுக்கும் வள்ளல். பக்தர்கள் நினைத்தவற்றை உதவும் பரிசுத்தன். நல்லவர் யாவர்க்கும் நற்கதி யளிக்கும் தேவன். இமையோர் இடுக்கண் தீர்த்த கழல் வேந்து. அடியார்கள் பிறரால் எளிதிலடைய முடியாத இன்பங்களைப் பெற்றுப் பின் பரமபதம் பெறுமாறு அவர்களுக்கு முத்தியுலகைக் காட்டும் முதல் தலைவன். தேவர் தவத்தின் தனிப்பயன்.

ஊழி முதல்வன்

இராமன் பல ஊழிக் காலங்களுக்கும் முன் னுள்ள பரம்பொருள். பேரூழிகள் நிகழுங் காலத் தும் அழியாதவன். எங்குமுள்ளவன். எப்போதும் அழியாதிருப்பவன். பழமையும் புதுமையுமானவன்.

பழமையான எல்லோர்க்குந் தலைவன். உவமை கூறுவதற்கு ஒன்றில்லாத ஒப்பற்ற தலைவன்.

இறைவன்

எல்லார்க்குந் தலைவனுயுள்ள இராமன் இன்ப துன்பம் இல்லாதவன். இன்னது இது என்று இசைக்க முடியாத ஒரு பொருள். பெண்ணின் உருவாயும் ஆணுகியும் மற்றும் அலியாகியும் நிற்ப வன். காலமாக் குணித்த நுண்மைக் கணக்கையுங் கடந்து நிற்பவன். எல்லாவற்றிற்கும் முதற் பொருளான ஆதி மூர்த்தி. மெய்ப்பொருளாயிருப்ப பவன். என்றும் அழிவில்லாதவன். எல்லாப் பொருள்களிலும் கலந்தும் கலவாமல் தனித்தும் நின்ற பழமையான ஒளி தூயோன். புராதனன். எல்லா வினைகளினின்றும் விடுபட்டவன். எல்லாம் வல்லவன். மலங்கள் நீங்கப் பெற்றவன். எவ் வுயிர்க்குந் தந்தையானவன். மேலானவன். பெரி யோன். புருடோத்தமன். பெருமைக் குணங்கள் படைத்தவன். உரவோன். ஆனந்த வடிவினன். வரம்பிகந்த மாபூதத்தின் வைப்பெங்கும் ஊனும் உயிரும் உணர்வும் போல் உள்ளும் புறத்தும் உள்ள வன். எல்லா உயிர்களிடத்தும் அன்பு பூண்டவன். காண்பார்க்குங் காணப்படும் பொருட்கும் இருப்பிட மாகி எல்லாப் பொருள்களையும் தாங்குபவன்போல் நிற்பவன்

அதிசயிக்கத்தக்க குணச் சிறப்புக்களையுடைய பரம்பொருளான இராமன் உயிர்தொறும் ஒரு தன் மைத்தாக இருந்து அறிவைக் கொடுப்பவன்.

'யான்' 'எனது' என்று நினைப்பதை விட்டவர்தம் உள்ளத்தில் நினைக்கப்படுபவன். தேவருலகத்திலும் இப்பூவுலகத்திலும் மாறுபட்டுள்ள பிற பல் வேறு உலகங்களிலும், பெரிய கணித நூல்களிலும், வேதங்களிலும் எப்போதும் நிறைந்தவன் என்று யாவராலும் மனத்தில் நினைக்கப் பெறுபவன்.

இராமன் பொய்யுடை உள்ளத்தார்க்குப் புலப் படாப் புனிதன். தன்னிடமிருந்து தோன்றி எழுந்து வளரும பலவகைப்பட்ட சராசரப் பொருள்களிலும் கலந்திருப்பவனாயினும் தன் பரத்துவ நிலையினின்றும் மாறுபடாதவன். ஆராயுந் தோறும் புதிய நல்லறிவை ஊட்டும் வேதங்களும், அவற்றை ஓதும் அந்தணர்களும், பிரமன் முதலான தேவர்களும் அறிந்துகொள்ள முடியாத முதற்கடவுள். அடக்கும் ஐம்பொறிகளுக்கும் கரணத்திற்கும் அப்பாலுள்ள தத்துவ ஞானத்திற்கே அணுகுங் காட்சியையுடையவன். மாசற்ற சோதி வெள்ளத்து உச்சியின் வரம்பில் தோன்றும் ஈசன். மாயையில் வல்ல கூத்தன். யாவர் மனத்திலும் சூக்குமமாயிருந்து விளங்கும் பரம்பொருள். தனக்குத்தானே ஒப்பாகிய முதற்பொருள்.

அடியார்கள் நினைத்த இடத்தில் விரைந்து வந்து தோன்றுங் கருணாநிதியான அண்ணல் இராமன் உணர்வினால் தெளியப்பட்டவன் போன்று அறிவுக்கு எட்டாதவன். தனக்கு முற்பட்ட மூலப் பொருள் என்று ஒன்றும் இல்லாதவன். முன்பு பின்பு நடு இல்லாதவன். ஆதியொடு அந்தம் ஒன்றும் தன்னாலும் அளந்துகொள்ள முடியாதவன்.

தேவர்க்கும் தன் உண்மைச் சொரூபத்தை உணர்த்தாதவன். அபரஞானம் என்னும் நூலுணர்விற்கும், பரஞானம் என்னும் மெய்யுணர்விற்கும் எட்டாதவன். எவராலும் அறிந்துகொள்ள முடியாத தன்மையன். அளவிட்டுக் கூறமுடியாத இயல்பான அறிவையுடையவன். பிரமாணங்களால் நிர்ணயிக்கவியலாமல் உயர்ந்து நின்றவன். இருவினைகளினின்று விடுபட்டவரும் அறியலாகாத ஒரு மிகப் பெரிய மாயையினுள்ளே யிருப்பவன். கவிஞர்களாலும் கற்பனை செய்ய முடியாத பெருமையுடையவன்.

அடியார்களை ஆட்கொண்டு அவர்களுடைய குற்றங்களையெல்லாம் போக்கியருளும் குணக்கோவாகிய இராமன் பொங்கு மாதவமும் ஞானமும் புணர்ந்தோர் யாவர்க்கும் புகலிடமாயிருப்பவன். இவ்வுலகப்பற்று நீக்கியவர் எய்தும் பேரின்பப் பொருளானவன். பணிவார் பணியத்தக்க திருவடிகளை யுடையவன். மனத்தால் ஞானக் கண்கொண்டு பார்த்துப் பிறர் இவ்வாறு இருந்தது என்று பிறருக்கு இயம்பரும் இன்ப மாயவன். நல்வினையே நாடுபவரைக் காப்பவன்; அல்லாரைக் காய்பவன்.

இந்நூலாசிரியரின் பிற நூல்கள்